
# முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு

★

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை



The Manager.
Eelakesari J. Press. Chunnakam.
KM. 6.8.57

# முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு

ஆரம்பம்: 1934

முருகேசபண்டிதர் ஞாபகார்த்த சபையார்
விரும்பிய வண்ணம்
சுன்னுகம்

## கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
தொகுத்தது

புலவரகம்
மயிலணி :: சுன்னுகம்
**1956**

உரிமைப்பதிவு]   [விலை ரூபா 1-50

புல்வரக வெளியீடு — 7

முதற்பதிப்பு 1956

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
யாழ்ப்பாணம்

# முகவுரை

ஒரு நாட்டின் பெருமைக்கு இலக்காக விளங்குபவர்கள் அந்நாட்டின் புலவர்களே. நாட்டின் பெருமையைக் காக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் அப்புலவர்களது சீரிய நூல்களை அழியாது பாது காக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் மிகப் பழைய காலந்தொடங்கி எத்தனையோ பல புலவர்கள் வாழ்ந் திருக்கின்றனர். அன்னாரியற்றிய நூல்களுட் பல படிப்பாரும் கேட்பாருமின்றிக் காலத்துக்குக் காலம் அழிந்து போய்விட்டன. இற்றைக்கு 105 வருடங் களுக்குமுன் வாழ்ந்த பெரும்புலவராகிய முத்துக் குமார கவிராயருடைய பாக்களைத் திரட்டி "முத்துக் குமார கவிராயர் பிரபந்தத்திரட்டு" என்னும் நூலை 1952-ம் ஆண்டு வெளியிட்டேன். இப்பிரபந்தம் தமி ழன்பர் பலருக்கு உவப்பைக் கொடுத்தது. எனது நண்பர்களும் முருகேச பண்டிதர் வழித்தோன்றல் களுமாகிய அரசாங்க நில அளவுப்பகுதி உதவியதி பர் திருவாளர் சி. பொன்னம்பலமவர்களும், அர சாங்க நிலப்பகுதி உத்தியோகஸ்தர் திருவாளர் சி. நவரத்தினமவர்களும் முருகேச பண்டிதர் இயற் றிய நூல்களைத் திரட்டி ஓர் பிரபந்தமாகத் தொகுக் குமாறு வேண்டியதற்கிணங்க இந்நூல் தொகுக்கப் பெற்றுள்ளது. முருகேச பண்டிதர் இலங்கையிலும்

இந்தியாவிலும் உள்ள பலவிடங்களில் வசித்தமை யாலும் இறுதியில் அவர் இந்தியாவிலே இறந்த மையாலும் அவரியற்றிய பாக்கள் முழுவதையும் பெறுதல் அருமையாயிற்று. கிடைத்த பாக்கள் யாவும் இப்பிரபந்தத்தில் அடங்கியுள்ளன. தமிழு லகம் இப்பிரபந்தத்தையும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

புலவரகம்
சுன்னாகம்
துன்முகி (ஹ)
புரட்டாதி கவ.

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

# பதிப்புரை

முருகேச பண்டிதர் அவர்கள் இற்றைக்கு ஐம்பத்தாறு வருடங் களுக்கு முன் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். அக்காலத்தில் அவருடைய பெருமையை அறியாதார் இலர். அவர் கிறீஸ்த பாதிரிமார்கள் செய்துவந்த சைவநிந்தனையைப் பொறுக்கமாட்டாது கண்டனப்பத்திரங்கள் வாயிலானும் பிரசங்கவாயி லானும் அவர்களை அடங்கச் செய்து சைவசமயத்தை வளர்த்த பெருமை யாவராலும் பாராட்டற்பாலது, இவ்விஷயத்தில் அவர் ஆறுமுகநாவலருக்கும் உறுதுணையாக விளங்கினர். அன்னார் இயற் றிய நூல்கள் இக்காலத்தில் கிடைத்தற் கரியவாயினமையால் அவரு டைய சிறந்த மாணவராகிய வித்துவசிரோமணி குமாரசுவாமிப்புலவ ருடைய மகன் திரு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A. அவர்களைப் பண்டிதர் இயற்றிய நூல்களைத் தேடித் தொகுக்குமாறு வேண்டி னோம். அவர் எமது வேண்டுகோட்கு இணங்கி இயன்றவரை முயன்று பண்டிதருடைய நூல்களைத் தொகுத்துத் தந்துள்ளார். இதைப் புலவ ரக வெளியீட்டிலொன்றாக வெளியிடவும் இசைந்துள்ளார். இதற்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையதென்பது மிகையாகாது.

இந்நூலை அச்சிடுவதற்குத் தமிழபிமானம் மிக்க அவருடைய வழித்தோன்றல்கள் பொருளுதவி புரிந்தனர். அவருடைய நன்றி பெரிதும் பாராட்டக் கூடியதாகும். பணமுதவியவர்களின் அட்ட வணை கீழே காட்டப்படுகின்றது.

ச. பொன்னம்பலம்
சி. நவரத்தினம்.
(இணைச்செயலாளர் மு. ப. ஞா. சபை.)

## பணமுதவியவர்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| திரு. | ச. பொன்னம்பலம் Asst. Supt. Surveys | 100-00 |
| ,, | சி. நவரத்தினம் Land Office | 100-00 |
| ,, | சு. சண்முகம் G. P. O. | 50-00 |

| | | |
|---|---|---|
| ,, | ஆ. செல்லையா F. M. S. | 25-00 |
| ,, | வே. தம்பையா F. M. S. Pensioner | 25-00 |
| ,, | W. P. A. குக் Retd. Div. Ag. Officer | 25-00 |
| ,, | செ. மாணிக்கவாசகர் Teacher | 25-00 |
| ,, | K. நவரத்தினம் Federal Treasury F. M. S. | 25-00 |
| ,, | T. நடராசா சுன்னுகம் | 25-00 |
| ,, | இராசம்மா பொன்னம்பலம் சுன்னுகம் | 25-00 |
| ,, | சி. செல்லையா Irrig. Dept. | 25-00 |
| ,, | R. C. S. குக் Asst. Registrar C. Societies | 20-00 |
| ,, | சீ. நல்லதம்பி | 10-00 |
| ,, | மூ. பொன்னுத்துரை | 10-00 |
| ,, | கு. சிவசம்பு Retired Teacher | 10-00 |

# சிறப்புப்பாயிரம்

உடுவில் தமிழ்ப்புலவர்

**உயர்திரு. வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள்**

*சாற்றியது*

பொன்னுரும் புனற்கொன்றைப் புரிசடையார்
போதமுற வருள்செய்த விருமொழியுள்
தென்னுடு வழங்கொழிக்குந் தீந்தமிழிற்
சிறந்தபல விலக்கணமு மிலக்கியமுஞ்
சின்னுளிற் கற்றுயர்ந்த திருவுடையோன்
செவ்வேளின் பதமலர்கள் தியானிப்போன்
சுன்னுக மாநகரோன் முருகேச
சுகுணமணி சொற்றகவி யளப்பிலவே.

பத்திமிகு பாக்களன்றிக் கத்தியநூல்
பாங்காக அளித்தமையும் பகரொணுதால்
சுத்தசைவ நெறிகண்ட தூயபுகழ்
நாவலர்க்குத் துணையான முருகேச
வித்தகனுர் விளங்குவட நூறெறிந்த
குமாரசுவா மித்தோன்றல் வியன்குருவே
இத்திறத்த விலக்சணக்கொட் டாரமான
எழிலாரும் பண்டிதரின் கவிகணன்றே.

விரவுதமிழ்ப் புலமையுடன் விஞ்ஞான
வீறுகலை யாங்கிலமும் உணர்ந்தசெம்மல்
வரகுணத்தோர் புகழ்முத்துக் குமாரசாமி
மதிமிக்கோன் மாண்பான கவிகளெலாங்
கரலிகித வழுக்களைந்து கவினிதாகக்
கவிஞருக்கு விருந்தளித்தான் அன்னசெயல்
பரவரிய பாரிலென்றுந் திகழ்ந்துமேவப்
பாராட்டித் துணையாத லாற்றனன்றே.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை .... .... .... | iii |
| பதிப்புரை .... .... .... | v |
| சிறப்புப்பாயிரம் .... .... | vii |
| நூலாசிரியர் வரலாறு .... .... | ix |


## முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு


| | |
|---|---|
| சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல் .... | 1 |
| சிவபூதராயர் ஊஞ்சல் .... .... | 5 |
| மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல் .... | 8 |
| மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல் .... | 12 |
| மயிலணிச் சிலேடை வெண்பா .... | 14 |
| மயிலணி விசாலாட்சிஅம்மை பதிகம் .... | 17 |
| வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல் | 23 |
| குடந்தை வெண்பா .... .... | 26 |
| பதார்த்ததீபிகை .... .... | 41 |
| நீதிநூறு .... .... .... | 55 |
| தனிச் செய்யுட்கள் .... .... | 69 |
| முருகேச பண்டிதர் புகழ்மாலை .... | 70 |
| அநுபந்தம் .... .... .... | 77 |
| முருகேச பண்டிதர் வாழ்த்து .... | 80 |

# நூலாசிரியர் வரலாறு

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் தமிழ்ப் புலவர் பலர் தோன்றுவதற்கு இடமாக விளங்கிய பெருமையையுடையது. முதன்முதல் சுன்னாகத்தில் தோன்றிய தமிழ்ப்புலவர் காசிமாநகரினின்றும் வந்து குடியேறிய அரங்கநாதையர் மகன் வரதபண்டிதராவர். அவர் வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றுப் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். சிவராத்திரிப் புராணம், கிள்ளைவிடுதூது, அமுதாகரம் முதலிய பல அரிய நூல்களை இயற்றியவரும் அவரே. அவருக்குப் பின்னர் முத்தகக் கவிபாடுவதில் வித்தகராகிய முத்துக் குமார கவிராசரவர்கள் 1780-இல் தோன்றி ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம் முதலிய பல நூல்களை இயற்றிப் புகழ் படைத்தனர். 1824-ம் ஆண்டிற் றோன்றிய வடமொழிப் புலவர் நாகநாத பண்டிதரவர்கள் இதோபதேசம் முதலிய பல நூல்களை இயற்றினர். 1829-ம் ஆண்டிற் றோன்றிய சங்கரபண்டிதரவர்கள் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிகளிலும் வல்லுனரர்ய்ச் சைவப்பிரகாசனம், சப்த சங்கிரகம் முதலிய அரிய நூல்களை இயற்றிச் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றினர். அப்புலவர் வரிசையில் ஐந்தாவது பெரும் புலவராக விளங்கியவர் மகா கவியாகிய முருகேச பண்டிதராவர். அவர் யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் தன்னிகரில்லாத் தனிப்பெரும் புலவராக விளங்கியவர். கும்பகோணம் வைத்தியநாத தேசிகர் அவர்கள் அவரது கவிதாசக்தியை வியந்து "தோமறு தமிழ்ச்சொன்மாரி தொலைவின்றிப்

பொழியுமேகம்" என்று கூறிய செய்யுட்பகுதியும் அவர் பெருமையைப் புலப்படுத்துகின்றது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் இலக்கிய இலக்கண அறிவு நிரம்பப் பெற்ற பெரும் புலவர் முருகேச பண்டிதர் என்பது கூறாமலே அமையும்.

## தோற்றம்

முருகேச பண்டிதரவர்கள் யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தில் சைவ வேளாண் குலத்தில் உதித்த பூதப்பிள்ளை அவர்களுக்கும், அவர் மனைவி உமைநாச்சியம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக 1829-ம் ஆண்டு தோன்றினார். அவருடைய தந்தையார் சயம்புடையாருடைய மகன் சிற்றம்பலம் என்பவரின் புத்திரராவர். கல்வியறிவிற் சிறந்தவராதல் பற்றி அவர் 'சட்டம்பியார் பூதப்பிள்ளை' என்று யாவராலும் அழைக்கப்பட்டார். பண்டிதருடைய தாயார் வேதாரணியப் புலவர் மகன் சுப்பிரமணியர் என்பவரின் புத்திரியாவர். தாய்மரபுந் தந்தைமரபுந் தமிழ்க் கல்வி வளம் பொருந்தியதாதலின் முருகேச பண்டிதரும் இயல்பாகவே தமிழ்க் கல்வியில் அதிகம் ஊக்கம் காட்டினர். பண்டிதருடன் உடன் பிறந்தார் சுப்பிரமணியர், கதிர்காமர், நன்னியம்மை என்னும் மூவராவர். மூத்த தமையனாராகிய சுப்பிரமணியர் என்பவர் பாடசாலையிற் கற்கும்போதே கிறீஸ்தமதம் புகுந்து 'பிச்' (Fitch) என்னும் நாமமும் பூண்டு கிறீஸ்த போதகராய் இலங்கையிலும் இந்தியாவிலும் உத்தியோகம் பார்ப்பாராயினர். மற்றையோர் வேளாண் தொழிலைக் கடைப்பிடித்து சீருஞ் சிறப்போடும் வாழ்ந்தனர். அவர்களுடைய சந்ததியார் இன்றும் சிறப்போடு வாழ்கின்றனர்.

## இலக்கணக்கொட்டர்

முருகேசபண்டிதர் தமது இளமைக் காலத்தில் அவ் ஊர் வாசியாகிய சிவசங்கர பண்டிதரிடம் சித்தாந்த தருக்க சாஸ்திரங்களை முறையே கற்றார். அவ்வாறு கற்றமை யோடமையாது மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் அவா மேலீட்டினால் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை அடைந்து பஞ்சலக்கணங்களையும், பாரதம், இராமாயணம் முதலிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுத்தேறினர். அவருடைய பஞ்சலக்கணத் தேர்ச்சியையும் கவியியற்றுந் திறமையையும் யாவரும் மெச்சுவாராயினர். புன்னை வித்துவ சிரோமணி கணேசையரவர்கள் முருகேச பண்டிதருடைய இலக்கண அறிவை வியந்து 'எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள் பழுத்துள நாவினன்' என்று புகழ்ந்திருக்கின்றனர். பேசும்போதும் எழுதும் போதும் பண்டிதரவர்கள் இலக்கண வழுக்கள் விரவாத வசனநடையைக் கையாளும் வழக்குடையர். பிறர் எழுதும் நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து அவற்றிற் காணப் படும் இலக்கண வழுக்களைப் பத்திரிகைகள் மூலம் எழுதி வெளிப்படுத்தியும் வந்தனர். அவருடைய இலக்கண வன்மையை நன்கறிந்த எல்லோரும் அவரை 'இலக்கணக் கொட்டர்' என்று கூறினர்.

## கற்பித்த இடங்கள்

முருகேச பண்டிதருடைய கவிகள், கட்டுரைகள், பிர சங்கங்கள் அவருடைய புகழை எங்கும் பரவச்செய்தன. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்து மாணவர்கள் வந்து அவரிடம் பாடங் கேட்டுச் சென்றனர். முதலில்

சுன்னுகத்து மயிலணியில் ஓர் பாடசாலையைத் தாபித்து மாணவர்களுக்குத் தமிழ்க்கல்வி கற்பித்தனர். அக்காலத்தில் அவரிடம் பாடங் கேட்டவருள் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர், ஊரெழு சரவணமுத்துப் புலவர், மாணிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை ஆகிய மூவரும் சிறந்தவராவர். சிலகாலத்திற்குப் பின் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பல விடங்களுக்குஞ் சென்று மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார். அவர் யாழ்ப்பாணத்திற் படிப்பித்த இடங்களைப் பின்வரும் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் பாட்டால் அறியலாம்.

**சுன்னை நகர் புன்னை நகர் சொல்லியதென் கோவை நகர்**
**மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்**
**துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்**
**பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே**

## ஆறுமுகநாவலரை வெல்லக் கருதியது

அவர் யாழ்ப்பாணத்திற் படிப்பித்துப் புகழெய்திய விடங்கள் ஏழாலையும் கோப்பாயுமாம். ஏழாலையில் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் தொடங்கப் பெற்ற தமிழ் வித்தியாசாலையில் சிலகாலம் தலைமையாசிரியராகக் கடமை யாற்றினர். முன்னர் அவர் கோப்பாயில் பிரபலபிரபுவும் நீதவானுமாகிய அம்பலவாணத்துரையவர்களால் தொடங் கப்பெற்ற வித்தியாசாலையில் ஏறக்குறையப் பத்துவருட காலம் தலைமையாசிரியராகக் கடமை ஆற்றினர். அக்காலத் தில் முருகேச பண்டிதரது கல்வித்திறமையை யாவரும் அறியக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. நீதவானது ஆதரவும் பெருமையும் பண்டிதருடைய பெருமை விளங்கு வதற்கு ஏதுவாயின. தமிழுக்கும் சைவத்துக்கும் பலதிறப்

ணமார்க்கசபை
ஆரம் ம். 1934
தேம்பிட்டி
தெல்லிப்பழை



பட்ட தொண்டுகளாற்றி அரும்புகழை ஈட்டிய நாவலர் கந்தபுராணம் முதலிய அரிய நூல்களைப் பதிப்பித்து தமிழை வளர்த்த காலமும் அதுவாகும். யாவரும் மெச்சும் நாவலரை பண்டிதர் வெல்லக் கருதினர். ஆறுமுக நாவலர் பதிப்பு நூல்களில் இலக்கணப் பிழைகள் இருப்பதாகப் பண்டிதர் தமது நண்பருக்குக் கூறினர். பத்திரிகை வாயிலாக அவர் ஒன்றையும் வெளிப்படுத்தவில்லை. ஆறுமுகநாவலரும் தமது பதிப்பு நூல்களில் பண்டிதர் பிழைகண்டு கூறுகின்றாரெனக் கேள்விப்பட்டு அவரைப்பற்றி விசாரணை செய்தனர். பண்டிதருக்கு மாறாக அவரும் ஒன்றையும் எழுதி வெளிப்படுத்தவில்லை. இப்படி அவர்கள் இருவரும் முரண்பட்டிருக்குக்குங் காலத்தில் நாவலர் பிரசங்கமொன்று கோப்பாயில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நாவலருக்கு வரவேற்புரை கூறுமாறு பண்டிதர் நியமிக்கப்பட்டார். பண்டிதர் நாவலர் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்துவந்த ஒப்புயர்வற்ற தொண்டின் சிறப்பை மிகத் திறமையாக எடுத்துரைத்தனர். நாவலரும் தமது பிரசங்கத்தின் முடிவில் முருகேச பண்டிதருடைய தமிழ்ப்புலமையை வியந்து அவரைச் சிறந்த வித்துவானென்றும் பாராட்டினர். மேலும் நாவலர் அவரைத் தமது இல்லத்திற்கும் வரவழைத்தார். பண்டிதரும் நாவலர் வேண்டுகோட்கிணங்கி அவர் இல்லஞ் சென்று அவருடன் நெருங்கிய தொடர்பு பூண்டனர். அக்காலந் தொடக்கம் நாவலரவர்கள் புறச் சமயங்களைக் கண்டித்துச் சைவத்தை வளர்க்கும் வேலைக்கு முருகேச பண்டிதரை உறுதுணையாய்க் கொண்டனர். நாவலரிறந்ததைக் கேள்வியுற்றபோது பண்டிதரின் உணர்ச்சி ததும்பும் பாடல்கள் அவர் நாவலரிடத்தில் வைத்த பேரன்பை நன்கு புலப்படுத்தும்.

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன்போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ—வாரணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

## அருளப்ப முதலியாரை வாதுக்கழைத்தது

1878-ம் ஆண்டு இந்தியாவினின்று கிறீஸ்தமதப் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்த கத்தோலிக்க மதத்தினராகிய அருளப்பமுதலியார் என்பவர் இங்குள்ள சைவ சமயத்தவர்களை மதமாற்றஞ் செய்யத் தலைப்பட்டுச் சைவ நிந்தை மலிந்த பல துண்டுப்பத்திரங்களை வெளியிட்டனர். அவற்றிற்குப் பண்டிதர் பத்திரிகைகள் மூலம் கண்டனம் வெளியிட்டனர். அவரியற்றிய சிறு நூல்களிலொன்று அலங்காரபஞ்சகம். முதலியாரது சமயக் கொள்கைகளையும், மதமாற்றப் பிரசாரத்தையும் தடை செய்யும் நோக்கத்தோடு பண்டிதரவர்கள் அலங்கார பஞ்சகத்திற் காணப்படும் இலக்கண வழுக்களைத் திரட்டி "அலங்கார பஞ்சக சண்டமாருதம்" என்னும் கண்டனப்பத்திரத்தை வெளிப்படுத்தினர். இலக்கணக் கொட்டருடைய இலக்கண ஆராய்ச்சியின் திறமையை அவருடைய கண்டனத்தால் நன்கறியலாம்.

## அலங்கார பஞ்சக சண்டமாருதம்

(மூன்றும் செய்யுள்)

செய்யுள் வருமாறு :

அரும்பிராமணத் தினிய கனியுதவு
அருங்கொடி பரிதி யம்பரத்தி
இருந்தராசாத்தி கழுமொரு நீதி
யிறைமக ளிணையறு மறத்தி

பொருந்த வெஞ்ஞான்று ஞானசக்கிலிச்சி
புல்லனை யருள்க நன்குறத்தி
மருந்தெனப் புகழு மருதமடுவினில்
வதிஜெப மாலை மாமரியே.

“இப்பாட்டுரைத்த முதலியார் பதம் பிரித்துரைப் பதிற் பிழைபடுவதென்னை? ‘அருங்கொடி’ ‘இருந்தராசு’ என்னுந் தொடர்களை, அரும் - கொடி, இரும் - தராசு, எனப் பிரித்ததேன்? இவற்றிற்கு ‘மை’ இறுதியாவ தன்றி “இனமிகல்” என்பதனாற் றோன்றிய மகரவொற்று மிறுதியாகுமா? “மணத்தினியகனி” என்பதற்கு “வாச னையைக் கொண்ட இன்பமாகிய கனி” என்றுரைத்தவர் “மணத்து, இனிய” என்று பதம் பிரித்ததேன்? வினை யெச்சம் “வாசனையைக் கொண்ட” என்னும் பெயரெச்சப் பொருளைத்தருமா? அவ்விடத் தகரம் தொகுத்தல் விகா ரம் என்பதல்லவா தகுதி. அஃதன்றி அத்தொடரில் ‘இனிய’ எ - கு இன்பமாகிய எனப்பொருளுரைத்ததேன்? இனிமைக்கு இன்பம் பிரதிபதமாகுமோ? அது காரணத் தைக் காரியமாக உபசரித்தோர் வழக்கெனின் அதனை விசேடவுரையில் விளங்க வையாததேன்? விசேடமன் றென விடப்பட்டதெனின் முற்செய்யுள்களிலுரைத்த விசேடங்கள் இதனினும் விசேடமுள்ளனவா? “ஞானசக்கி லிச்சி” எ - ல். ‘இச்சி’ எ - கு. ‘விரும்புகின்ற’ எனப் பொருளுரைக்க ஆன்றோர் வழக்குண்டா? “இணையறு மறத்தி” என்பதன் பின்னர் ‘நன்குறத்தி’ ‘மாலைமாமரியே’ என்பவற்றையும் விசேடணங்களோடு சேர்த்தியுரைக்க அறியாமல் “அருள்க”, என முடித்துத் திரும்ப “நன் குறத்தி” எ - ம் ‘மாலைமாமரியே’ என்றும் விளித்த

தென்ன? இப்படி உரைப்பினும் பொருள் பொருந்து மெனின் பொழிப்புரையில் மாறியுரைத்ததென்ன?

இங்ஙனம் முருகேச பண்டிதரவர்கள் அலங்கார பஞ்சகத்தின் ஒவ்வொரு பாட்டுக்கும் இலங்கை நேசன் மூலம் கண்டனம் விடுத்தனர். முதலியார் முறையாகச் சமாதானங் கூறாது கத்தோலிக்க பாதுகாவலன் மூலம் சில கண்டனங்கள் வரைந்தனர். பண்டிதர் பத்திரிகை மூலம் கண்டிப்பதை விடுத்து பல புலவர் கூடிய மகா சபையிலே அருளப்ப முதலியாரை வாதுக்கு வருமாறு இலங்கை நேசன் (2-5-78) பத்திரிகையில் வாதவிளம்பரம் விடுத்தார். முதலியார் முன்வரவில்லை. பண்டிதரவர்கள் முதலியாரைக் கண்டித்து 'முத்தகந்திரயம்' என்ற பெயரோடு மூன்று பாக்கள் சிலேடைப் பொருளில் பாடினர். இத்துடன் அருளப்ப முதலியாரும் அடங்கினர். சண்டையும் முடிவுற்றது.

## இந்தியா சென்றது

1878-ம் ஆண்டு பண்டிதருடைய வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டன. அவருடைய மனைவி கதிராசிபம்மையார் கதிர்காம யாத்திரைக்கு அவரோடு சென்று திரும்பும்போது நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பண்டிதருக்குப் பிள்ளைகளுந் இல்லை. நெருங்கிய சுற்றத்தவரோடிணங்கி வாழ்ந்து பிற்காலத்தைச் சுன்னாகத்திற் கழிக்கும் கருத்தும் அவரிடம் இல்லை. குடும்பப் பிணக்குகளும் அவருடைய மனவமைதியைக் குலைத்தன. சைவத்துக்கும் தமிழுக்கும் உறைவிடமாக விளங்கும் தமிழ்

நாட்டில் தமது பிற்காலத்தைக் கழிப்பது உசிதமெனத் தீர்மானித்துக் கொண்டு 1878-ம் ஆண்டு அங்கு பிரயாண மானார். அவர் இந்தியாவில், கும்பகோணம், சென்னை, சிதம்பரம், காஞ்சீபுரம், சேலம், திருப்பாற்றூர் முதலிய இடங்களில் இருபத்திரண்டு வருடகாலம் கல்வி கற்பித்துக் கொண்டும், நூல்களியற்றிக் கொண்டும் காலம் கழித்தனர்.

## தியாகராசச் செட்டியாரைத் திகைக்கவைத்தது

முருகேச பண்டிதர் முதலில் கும்பகோணஞ் சென்று ஆசிரியராக வேலைபார்க்கக் கருதி ஆங்குள்ள உயர்தர பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் வேலை காலியாக இருப் பதைக் கேள்விப்பட்டு அவ்வேலைக்கு மனுப்பண்ணினர். மனுப்பண்ணியவர்கள் அநேகராய் இருந்தமையால் அவர்கள் எல்லோரையும் தமிழ்ப்பண்டிதர் தியாகராசச் செட்டியாரைக் கொண்டு பரீக்ஷிப்பித்து வேலை கொடுப்பதாக கும்பகோ ணம் கல்லூரி அதிபர் கோபாலறுவ் தீர்மானித்தனர். ஆறுமுகநாவலரை வெல்லக்கருதிய அவர் தமது ஐம்பதா வது வயசில் தியாகராசச் செட்டியாரது எழுத்துப் பரீ க்ஷைக்கிருப்பதென்பது அவருக்கு மிக்க வெறுப்பை உண்டு பண்ணியது. உத்தியோகக் கவர்ச்சியினுல் தூண்டப்பட்ட வராய்ப் பல பண்டிதர்களோடும் பரீக்ஷைக்குப் போயினர். கேள்விப்பத்திரம் கொடுக்கப்பட்டது. கேள்விப்பத்திரத் தில் உள்ள இலக்கணப் பிழைகளைக் கீறி, தக்க நியாயங் களுங் கூறி, கேள்வி கேட்கும் முறையையும் ஒரு பாட்டி லமைத்துத் தியாகராசச் செட்டியார் கேள்விப்பத்திரம் தயாரிக்கத் தகுதியற்றவரென்பதையுங் குறித்துத் தமது விடைப்பத்திரத்தை எல்லோருக்கும் முன்னர்க் கொடுத்து விட்டுச் சென்றனர். தியாகராசச் செட்டியார் பண்டிதரு

டைய விடைகளை வாசித்து அவருடைய பஞ்சலக்கணத் திறமையைக் கண்டு திகைத்துப்போயினர். கோபாலரும் பண்டிதருடைய மதிநுட்பத்தை வியந்து அவரையே பண்டித வேலையில் அமர்த்தினர். அப்பாடசாலையில் எட்டு வருடங்கள் வரையில் வேலை பார்த்தனர்.

## சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம்

முருகேச பண்டிதர் பட்டண உயர்தரக்கலாசாலையில் ஆசிரியராக இருக்கின்ற காலத்தில் கும்பகோணக் கல்லூரியில் டக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். ஐயரவர்கள் 1887-ம் ஆண்டு சீவக சிந்தாமணி என்னும் நூலை திருத்திப் பதிப்பித்தார், அதில் அநேகம் பிழைகள் இருப்பதைக் கண்ட பண்டிதரவர்கள் "சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம்" என்னும் கண்டனத்தை வரைந்தனர். பண்டிதருடைய கண்டனத்திற்கு மறுப்பாக ஐயரவர்கள் மாணக்கராகிய குடவாயில் சண்முகம்பிள்ளையவர்கள் ஓர் கண்டனம் எழுதினர். முருகேச பண்டிதர் அவர்களை வெல்லக்கருதி ஐயரவர்களையும் சண்முகம்பிள்ளை அவர்களையும் பகிரங்க வாதுக்கழைத்தனர். ஒருவரும் முன்வரவில்லை. வாதவிளம்பரம் கீழே தரப்படுகின்றது.

## வாத விளம்பரம்

"கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமத் சாமிநாதையரவர்களாவது, அவர்களுடைய மாணக்கராகிய குடவாயில் ம. ா. ா. ஸ்ரீ ஐ. சண்முகம் பிள்ளையாவது, அவர்களைச் சார்ந்த பிறராவது **சீவகசிந்தாமணி வழுப்பிரகரணத்தால்** காட்டிய பிழைகளைப் பிழைகளல்ல

என்று தக்க நியாயத்தோடு அறிஞர்கள் பலர் கூடிய சபையில் திக்கரித்துக் காட்டுவார்களாகில், சிக்கிநாயக்கன் பேட்டை இராகவாச்சாரியர் அவர்களும் தமது நியாய வாதா பாச நிராகரணத்தில் தாம் ஒப்புக்கொண்டு காட்டிய நியாயங்களையும் ஓர் ஆக்ஷேபத்துக்குமிடமின்றி அச்சபையில் தக்க நியாயத்தோடு தாபித்துக்காட்டச் சித்தமாயிருக்கின்றார்.

"சீவகசிந்தாமணிப் பதிப்பிற் காட்டிய பிழைகளைப் பிழைகளென்றே யாம் ஒத்துக் கொண்டோம். இராகவாச்சாரியரே நியாயவாதாபாச நிராகரண நிறுப்புச் செய்திடுக" என்னினும் தக்கவர்கள் முன்னிலையில் அவ்வாறு செய்தலும் அவருக்குச் சம்மதிதான். ஆதலால் அபிப்பிராயத்தோடு பொது இடமும் நாளுங் குறிக்க."

இங்ஙனம்

பூ. முருகேசபிள்ளை

(சந்திரபானு அச்சுக்கூடம்.

சர்வதாரிஹூ
ஐப்பசிமீ ௨௨௳
காஞ்சீபுரம், 1888.

பண்டிதர் காட்டிய பிழைகளுட் பல இரண்டாம் பதிப்பில் திருத்தமடைந்திருக்கின்றன. இச்சம்பவத்தின் பின்னர் ஐயரவர்களுக்கும் பண்டிதரவர்களுக்குமிடையில் மனவேற்றுமை ஏற்பட்டது,

## காஞ்சீபுரத்தில் வாழ்க்கை

பண்டிதரவர்கள் கும்பகோணம் பட்டண உயர்தரக் கலாசாலையில் எட்டு வருடகாலம் படிப்பித்த பின்னர் காஞ்சீபுரத்தில் சிலகாலந்தங்கிப் பல மாணவர்களுக்கு இலக்கிய இலக்கணங்கள் கற்பித்தனர். காஞ்சீபுரத்தில் பண்டிதர்

இருந்தபோது அவரோடு நெருங்கிப் பழகிய தமிழ்ப் பண்டிதர் திரு. கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் எனக்குப் பண்டிதரவர்களது வித்துவத்திறமையை விளக்கிக் கூறியிருக்கின்றார். அவர் பேசும்போது இலக்கணச் சுவையோடு பேசும் வழக்குடையவர் என்பதற்குப் பின்வரும் சம்பவத்தையும் எனக்குக் கூறினர். பண்டிதர் காஞ்சியில் சில புலவ நண்பர்களைப் பார்த்து "சாப்பாடாயிற்றா? என்று வினவப் புலவர்களும் 'ஆம் சாப்பாடாயிற்று' என்று விடை பகர்ந்தனர். பண்டிதர் "என்ன வேடிக்கை சாப்பாடாயிற்றெனின் நீவிர் உயிரோடு இருக்க முடியுமா? இறத்தற் பொருளைத் தரும் 'சா' அடியாகப் பிறந்த தொழிற் பெயராகிய சாப்பாட்டைப் பற்றியல்லவா கேட்டேன்" என்று கூறி யாவரையும் மகிழச் செய்தனர்.

## சென்னை வாசம்

பண்டிதரவர்கள் காஞ்சிபுரம், சிதம்பரம் முதலிய இடங்களில் ஏறக்குறைய ஐந்து வருடகாலந் தங்கிய பின்னர் சென்னைக்குச் சென்றார். அங்கு அவர் தமது பிற்கால வாழ்க்கைக் குறுதுணையா யிருந்தவர்களாகிய பெருமாள் நாடார், வெள்ளைய நாடார் என்போரின் நட்பைப்பெற்று அவர்களால் நடாத்தப் பெற்ற அச்சுக்கூடத்தில் நூற்பரிசோதகராக வேலைபார்த்து வந்தனர். தூய உள்ளமும் சீரிய எண்ணமும் படைத்த பண்டிதருக்கும் நாடார்களுக்குமிடையில் நட்பு வளர்ந்தது. அவர்கள் பண்டிதருடைய வித்துவத் திறமையையும் புலமையையும் நோக்கி அவரைக் கடைசிவரையும் தம்முடனே வைத்திருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். அவர்கள் சென்னையி லிருந்த தமது அச்சகத்தைச் சேலம் ஜில்லாவிலுள்ள

திருப்பாற்றூருக்கு கொண்டுபோய் அமைத்தபோது பண்டிதரையும் அங்கு கூட்டிச் சென்றனர். வெள்ளைய நாடாரின் வேண்டுகோட்படி அவர் தமது இறுதிக் காலத்தைத் திருப்பாற்றூரில் கழிக்க இயைந்தனர். திருப்பாற்றூரில் அவர் புத்தகங்கள் பதிப்பிப்பதிலும் நாடார்கள் நடாத்தி வந்த 'அமிர்தகுண போதினி' என்னும் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வதிலும் காலங் கழித்தனர்.

## நூல்கள்

முருகேச பண்டிதர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவை சந்திரசேகரப் பிள்ளையார் ஊஞ்சல், பூகராயர் ஊஞ்சல், மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல், மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல், வத்தாக்கை அம்மன் ஊஞ்சல், மயிலணி விசாலாட்சி அம்மன் பதிகம் (1877) குடந்தை வெண்பா (1882) மயிலணிச் சிலேடை வெண்பா, பதார்த்த தீபிகை, நீதிநூறு (1886) முதலியன.

## நூற்றிறன் முதலியன

யாழ்ப்பாணத்தில் வசித்த சிறந்த புலவர்களுள் ஆசுகவியாக விளங்கிய முருகேச பண்டிதரவர்களே சிறந்தவரென்பது மிகையாகாது. எவ்விஷயத்தைப் பற்றியும் உடனே கஷ்டமின்றிச் செய்யுளியற்றும் வன்மை மிக்கவர். அவர் இயற்றிய நூல்கள் தோறும் புராணவரலாறுகளும் சாஸ்திர உண்மைகளும் மலிந்து விளங்குகின்றன. பாக்களில் வரும் கற்பனைப் பெருமையும், கருத்துப் பெருமையும், கவித்துவமும், பிறநயங்களும் படிப்போருக்கு இன்பமும் பக்தியும் அளிக்க வல்லன. பண்டிதரியற்றிய

ஊஞ்சல்கள் அனுப்பிராசங்கள் அமைந்து ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் கொண்டு விளங்குகின்றன. **குடந்தை வெண்பா, நீதிநூறு, மயிலணிச்சிலேடை வெண்பா** என்னும் நூல்கள் வெண்பாக்களினால் ஆக்கப்பட்டவை. குடந்தை வெண்பாவில் வரும் ஒவ்வொரு வெண்பாவினுமுள்ள முதலிரண்டடிகளில் தல மகிமையை அடக்கிப் பின் இரண்டடியிலும் மடக்கமையப் பாடப்பட்டிருக்கிறது. இந்நூல் கும்பகோணம் வைத்தியநாத தேசிகர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மாணிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை கும்பகோணம் சபாபதிச் செட்டியார், இராகவ ஐயங்கார், உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் என்பவர்களுடைய சிறப்புப் பாயிரங்களோடு 1882-இல் வெளி வந்தது. **நீதிநூறு** கவிச் சிறப்பினாலும் பொருட்சிறப்பினாலும் நீதிநெறி விளக்கத்திற்கு இணையாக விளங்குகின்றது. அறம் பொருள் இன்பம் முதலியன இந்நூலில் பொதிந்து விளங்குகின்றன. இக்காலத்தில் இதுபோன்ற நூலை இயற்ற வல்லவர்கள் அரியரென்பது மிகையாது. **மயிலணிச் சிலேடை வெண்பாவில்** இருபத்தொரு பாக்கள் மாத்திரம் கிடைத்தன. **பதார்த்ததீபிகை** பண்டிதரது தருக்க நூலுணர்ச்சியை நன்கு புலப்படுத்துகின்றது. இது தருக்க நூலில் கூறப்படும் விஷயங்கள் எல்லாவற்றையும் எழுபத்தெட்டுக் கலித்துறைப் பாக்களில் அடக்கிச் சிறப்பாக இயற்றப் பட்டிருக்கின்றது.

## தோற்றம் குணம் முதலியன

பண்டிதர் தோற்றத்தாற் கரியவர் உருவத்தாற் சிறிது குறுகிய பருகிய உடலமைப்புடையவர் அவருடைய சரீர பௌதிக நிலைமைக்குக் காரமான உணவு அதிகம் வேண்டியிருந்தது. அவர் சாப்பிடும்போது அரைத்த

மிளகாய்த்திரள் ஒன்றைத் தின்னும் வழக்குடையவர். தலை முழுகும்போது மிளகாய் அரைத்துத் தலைக்குத் தப்பி முழுகுவரென்றும் அக்காரணம் பற்றி அவரை அவர் மாணாக்கர் "மிளகாய்ச் சட்டம்பியார்" என்று அழைப்பது வழக்கம் என்றும் கூறுவர். அவர் மிக்க கோபமும் வெடுவெடுப்பான பேச்சுமுடையவர். புலமை நிரம்பாதாரியற்றும் நூல்களிற் காணுங் குற்றங்களை இலங்கை நேசன், உதயபானு முதலிய பத்திரிகைகள் மூலம் கண்டிப்பவர். கண்டனமூலம் பிழைபட எழுதின புலவரை வெல்ல முடியாதாயின் அவரைப் பகிரங்க வாதுக்கழைப்பவர். அவரோடு வாதுபுரிய எவரும் அஞ்சுவர். நீதிக்கும் உண்மைக்குமன்றி வேறொன்றுக்கும் அஞ்சாதவர். சுயநலத்திற்காகத் தமது பெருமையையும் பண வருவாயையும் மதித்து பிறருக்குப் பணியாதவர். எல்லா நன்றியிலும் செய்நன்றியைச் சொல்லிலும் செயலிலும் மறவாதவர். தமது ஆசிரியர்களை மறவாது தாமியற்றும் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஆசிரிய வணக்கம் கூறும் வழக்கமுடையவர்.

## இறுதிக்காலம்

பண்டிதருடைய வயோதிககாலம் திருப்பாற்றூரிலே கழிந்தது. உடல் மெலிவுற்றபோதிலும் நூல்களியற்றுவதிலும் கல்வி கற்பிப்பதிலும் சோர்வின்றி யிருந்தனர். வெள்ளைய நாடாரவர்கள் அவருக்கு வேண்டிய வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினபடியால் அவர் மனவமைதியோடு இறுதிக்காலத்தை ஒரு குறையுமின்றிச் சந்தோஷமாகக் கழித்தனர். அவர் கடவுள்பக்தி மிக்கவராய்ச் சுப்பிரமணிய உபாசகராய் விளங்கினர். உடல் வலிமை வரவரக் குன்றினதின் காரணமாக அவர் 1900-ம் ஆண்டு விகாரி வருஷம் ஆவணி மாதம் 10-ந் திகதி தேகவியோகமாயினர். இவரது உடலம் சகல சிறப்புக்களோடும் சமாதி வைக்கப்பட்டது.

பண்டிதரின் பூதவுடல் மறைந்து விட்டாலும் அவரு டைய புகழுடம்பு என்றும் அழியாது நிலைக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

## நூலாசிரியர் வரலாற்றுக்கால அட்டவணை

| | |
|---|---|
| 1829 | பிறப்பு |
| 1841—49 | சங்கரபண்டிதரிடம் கல்விகற்றல். |
| 1850—53 | சிவசம்புப் புலவரிடம் கல்விகற்றல். சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல், மகாவிஷ்ணு ஊஞ்சல், விசாலாட்சியம்மை பதிகம் இயற்றல். |
| 1854—66 | புன்னாலைக்கட்டுவன், சிறுப்பிட்டி, அளவெட்டி, கல்வளை முதலிய இடங்களில் கல்வி கற்பித்தல், விவாகம். |
| 1867—76 | கோப்பாய் அம்பலவாண முதலியார் பாடசாலையில் தலைமையாசிரியர் பதவி. |
| 1877 | ஏழாலை சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழ் வித்தியாசாலையில் தலைமையாசிரியர் பதவி. மயிலணிச் சிலேடை வெண்பா இயற்றல். |
| 1878—85 | கதிர்காம யாத்திரை, மனைவி இறந்தது, இந்தியா சென்றது, கும்பகோணம் உயர்தரப்பாடசாலையில் பண்டிதர் வேலை, குடந்தை வெண்பா நீதிநூறு இயற்றல். |
| 1886—90 | சிதம்பர காஞ்சிபுர வாசம். சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம். |
| 1891—95 | சென்னை வாசம். C. N. அச்சுக்கூடத்தில், நூற்பரிசோதகர் வேலை. |
| 1896–1900 | திருப்பாற்றூர் வாசம், பதார்த்ததீபிகை. |
| 15-8-1900 | தேகவியோகம். |

உ
சிவமயம்

# முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டு

## சுன்னுகம்
## சந்திரசேகரப்பிள்ளையார்
## ஊஞ்சல்

### காப்பு

திருமேவு கனகமலைச் சிகர மாகித்
திகழிலங்கைக் கொருமுகமாய்த் திகழ்யாழ்ப் பாணத்(து)
உருமேவு திலகமென உலகம் எல்லாம்
ஓங்குபுகழ்ச் சுன்னைநகர் உவந்து வாழும்
அருள்மேவு சந்திரசே கரப்பேர் பெற்ற
அத்திமுகத் துத்தமனுக்(கு) ஐயிரண்டு
பொருள்மேவு கவிஊஞ்சல் இசையாற் பாடப்
போற்றுகவென்(று) அவனடியைப் போற்று வாமே.

### நூல்

மதியேறும் ஒலிதருமெய்ச் சைவ நூலும்
மறைநூலும் எனஇருதூண் வயங்க நாட்டி,
விதியேறு மவற்றுணர்முப் பொருளே என்ன
விட்டவளை யொடுபலகை கயிறு மாட்டிக்,
கதியேறு மும்மையுமற் றவையி லாய்ந்து,
கண்டவர்நெஞ் செனக்கண்ட பீடம் ஏறித்,
துதியேறு விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். (1)

தும்பைமுடித் துளதாதை திருக்கண் சாத்தத்,
துரகமயில் வருகுமரன் துதிகள் சாற்ற,
அம்புவிஉண் டருள்மாயன் அடிகள் போற்ற,
அயனுமா சாத்தனும் வந்(து) அன்பின் ஏத்தச்,

சிம்புள்வடி வாய்வருவோன் கரங்கள் கூப்பச்
செகமுழுது மானக்கஞ் சிறந்து தேங்கத்
தும்பிமுகம் படைத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (2)

கங்கைஉமைத் தாயர்மகிழ்ந்(து) அன்பு கூர,
கமலவனி தையரும்அருள் கண்டு சாரப்,
பங்கயவே தாவேத கீதம் பாடப்,
பழுதில்நா ரதமுனியாழ் பண்பின் நாடப்,
புங்கவர்கள் எங்குமலர் மழையே தூவப்,
பூரணா னந்தமுடன் அடியேன் வாழத்,
துங்ககண நாயகரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (3)

வெள்ளைவா ரணமகவான் கவரி புல்ல,
விரிகனலோன் விரியும்ஒளி விளக்கங் கொள்ளத்,
துள்ளிபடு பனிமழைநல் வருணன் தெள்ளச்,
சுரர்களா தியபதினெண் கணங்கள் துள்ள,
விள்ளரிய வேதமறை யோர்கள் விள்ள,
வெறுத்தடியேன் உலகாசை முழுதுந் தள்ளத்,
துள்ளுநதிச் சடையாரே! ஆடீர்! ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். (4)

கந்தருவர் பாடவர மகளிர் ஆடக்,
கவிகைகவித்(து) இரவிமதி யோர்கள் நீட,
முந்துசதா கதிஆல வட்டம் போட,
முதியநான் மறைமுழக்கம் விண்மண் மூட,
வந்துகண நாதர்புடை மகிழ்ந்து கூட,
வறுமையெனும் பாவினை மருவா(து) ஓடச்,
சுந்தரமா முகத்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். (5)

வல்லவையாம் வல்லவையும் சித்தி புத்தி
வல்லியர்க ளுங்கூட மகிழ்ந்து கூடும்
வல்லவனே! துப்புமலை வண்ணத் தானே!
வரதனே! வரனே!என் (று) அழுது நெஞ்சம்

சொல்லிஅடி பரவுமடித் தொண்ட ருகிச்,
சுகஃபெறீஇ வறுமைஎலாம் தொலைந்து வாழச்,
சொல்லரிய பூரணரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர்! ஊஞ்சல். (6)

சக்கரவார் கலிஉலகிற் தலைமை ஆகத்
தலைநாணின் றதுவென்னத் தரணி எங்கும்
புக்கபுக ழிந்நாடே நந்நா டாகிப்
பொலியஉம(து) அடிமலரின் பொற்பி னலே
பக்கமெலா முற்றவய னவ லாறு
பாயுநிலம் போல்விளையும் பண்பின் ஓங்கத்
துக்கவடி வற்றவரே! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (7)

எப்பொழுதும் அடிபணியும் அடியார் வாழ.
இலங்குதிரு விழாச்செய்யும் எழிலோர் வாழத்
தப்பில்திருக் கோயின்மதில் தந்தோர் வாழத்
தடாகமொடு நந்தவனஞ் சமைத்தோர் வாழச்,
செப்பியஉன் தளிபுதுக்கிப் பிரதிட்டை செய்த
செல்வர்களும் அல்லலெலாந் தீர்ந்து வாழத்,
துப்புமணி வண்ணத்தீர்! ஆடீர் ஊஞ்சல்,
சுன்னைநகர்க் கணேசரே; ஆடீர் ஊஞ்சல். (8)

சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்பும்,
தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்,
இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ், சென்னி
இலங்குமுடி யுங்கவரி இசைத்த காதும்,
புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்
பொற்பும்அடி யேன்காணப் புரிந்து கொன்றைத்
தொடைபுனையுஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (9)

திருப்பெறும் ஓர்கோடுடையீர்! ஆடீர், ஊஞ்சல்:
சேரார்தங் கோடுடையீர்! ஆடீர், ஊஞ்சல்:
அருப்புவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:
அரியவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்:

விருப்பொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்:
வில்லொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்:
சுருப்புமுதன் மதலையரே! ஆடீர் ஊஞ்சல்:
சுன்னை நகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல். (10)

## வாழி

தரைவாழி, வாழிதவ மறையோர் வாழி,
தனவசியர் பூவசியர் தழைத்து வாழி,
நிரைவாழி, மகளிர்பதி விரதம் வாழி,
நிலமன்னர் வாழி,மறை முகில்கள் வாழி,
புரைதீர்மூ ஷிகம்வாழி, சித்தி புத்தி
புனிதைகளும் வாழி,அருட் பொலிவினோடும்
மரைநேர்சே அடிவாழி, கணேசன் ஊஞ்சல்,
வாழி,சுன் னாகநகர் வாழி, வாழி.

## எச்சரீக்கை

சுன்னாகநன் னகர்மேவிய தூயா! எச்சரீக்கை
துணையாய்இருந் தருள்வாழ்வருள் துரியா! எச்சரீக்கை:
பொன்னாகவிற் பிடித்தான்அருள் புதல்வா! எச்சரீக்கை:
புவிமீதில்என் இடர்தீர்த்தருள் புனிதா! எச்சரீக்கை:

திறலார்கய முகவீரனைச் செகுத்தாய்! எச்சரீக்கை:
தினந்தோறும்மெய் அடியார்க்(கு)அருள் செய்வாய்! எச்சரீக்கை:
விறலார்வினை தீர்த்தாண்டருள் விமலா! எச்சரீக்கை:
வேண்டும்வரம் தந்தாளுமை பாலா! எச்சரீக்கை:

கல்லார்மனம் நில்லாஅருட் கடலே! எச்சரீக்கை:
கண்டார்தினம் கொண்டாடுசெங் கதிரே! எச்சரீக்கை:
சொல்லார்பிர ணவமாயொளிர் தூயா! எச்சரீக்கை:
சுரராதியர் தினமேதுதி சுடரே! எச்சரீக்கை:

## பராக்கு

எண்திசையு மண்டுபுகழ் இறையே! பராக்கு:
என்னுயிருக்(கு) உயிரான இனியாய்! பராக்கு:
தொண்டுசெயும் அடியருளச் சோதீ! பராக்கு:
சுகநிதியை அருளமுதச் சுவையே! பராக்கு:

சித்திபுத்தி மகிழின்பச் சிலா! பராக்கு:
சிறியேன்தன் பிழைபொறுக்குந் தேவா! பராக்கு:
பத்திசெயும் அன்பருளப் பதியே! பராக்கு:
பங்கயனுங் காணரிய பரனே! பராக்கு:

குலவுமருள் உமையீன்ற குமரா! பராக்கு:
குஞ்சர முகத்தரிய கோலா! பராக்கு:
நிலவுவிரி சடையாளர் நேயா! பராக்கு:
நேடரிய பதமருளும் நீதா! பராக்கு:

## சுன்னுகம்

# சிவபூதராயர் ஊஞ்சல்

### காப்பு

தென்சுன்னை வாழுஞ் சிவபூத ராயர்தமக்(கு)
இன்சொன் மணிஊஞ்சல் ஈரைந்து—தேன்சொல்லாற்
சொல்லத் துணையாய்ச் சுவைக்குங் கரிமுகவன்
செல்வக் கமலவடித் தேன்.

### நூல்

பொன்னுரும் பவளமணித் தூண்க ளாலும்,
பொற்புமிகும் வைரத்தின் வளையி னாலும்,
மின்னுருந் தரளமணி வடத்தி னாலும்,
விலைமதியா மாணிக்கப் பலகை யாலும்,
சுன்னுகந் தெற்குவாழ் வுறவே செய்த
சுடருமணி ஊஞ்சலின்பீ டத்தில் ஏறி
என்னுகங் குடிகொள்வீர்! ஆடீர் ஊஞ்சல்,
இறைசிவபூ தராயரே! ஆடீர் ஊஞ்சல். (1)

பக்கமெலா மிக்கமலர் மாலை யாலும்,
பந்தரெலாந் தொங்குமணி முத்தி னாலும்,
செக்கரெலாந் திரண்டனசெம் பட்டி னாலும்,
செய்துபல வாழைதோ ரணங்கள் நாட்டிச்

சொர்க்கமெனச் செய்தமணி மண்ட பத்தே
சுன்னுகந் தென்பதியோர் வாழ வாழ்ந்து
திக்கிறைவர் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (2)

வையமெலாங் காக்கின்ற வரதன் என்றும்,
மலர்கமலந் துலக்கமுறும் வரனு ரென்றும்,
மெய்யெலாம் நீறுபுனை விமல னென்றும்,
வேறுபல சொல்லி அவர்அடியின் மேவிச்
செய்திடுமத் துதியெல்லாஞ் செய்யும் அன்பர்
சித்திபெறச் சுன்னைநகர் தெற்கில் வாழும்
தெய்வமெலாந் தொழுகழலீர்! ஆடீர் ஊஞ்சல்.
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (3)

பத்திபுரி பத்தர்பலர் பாதம் போற்றப்,
பழமறைச்செந் தமிழ்வேதம் பலபேர் சாற்றச்
சுத்தமன முற்றவர்கள் மலர்கள் தூற்றத்,
துய்யபனி நீர்சிவிறி கொண்டே ஊற்ற,
சித்தமலர் மலர்ந்தருளின் தேவ னுகித்
தென்சுன்னை வாழுமன்பர் சிறந்து வாழச்
சித்திபல செய்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (4)

கற்றுணர்நா ரதமுனிவ னென்னுங் காட்சிக்
கைவீணை வல்லவர்கள் கனிந்த பாடல்
சுற்றியளத் திசையிலுறும் அவர்கட் கெல்லாம்
சுகானந்தம் விளைத்திடரின் தொடரைக் கீற
திற்றியமாம் பழம்வாழைப் பழங்கள் கொண்டு
சேவிக்குந் தென்சுன்னை சிறந்து வாழச்
சிற்றுணர்வில் லாதவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (5)

அண்டமெலாங் கைகுவிக்க அண்ட மீதே
ஆழிவரு மதியமென அநேக கோடி
தண்டரளஞ் சொரியும்வலம் புரிகள் ஆர்ப்பத்,
தவளமதிக் குடைகள்பல தயங்கிச் சூழத்

தெண்டிரை போற் கவரிபல இருபால் வீசத்,
தென்சுன்னை நன்னகரந் சிறந்து வாழத்,
தெண்டுகமண் டலக்கையீர்! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (6)

பூவடிக்குள் உலகளந்த மாயன் என்னப்,
பொழியுமழை நெடுமுகில்கள் பொலிந்து மின்ன,
மாவடிக்கண் மகளிரென மயில்கள் வன்ன,
வாசம்விரித் தாடுமெழின் மலிந்து மன்ன,
நாவடிக்கு மிசைகள்பல வண்டு பன்ன,
நந்தவன மோங்கியதென் சுன்னை வாழச்
சேவடிப்பா துகையுடையீர்! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (7)

பங்கமறு சம்பாவின் அமுதும், நெய்யும்,
பால்தயிரும், முக்கனியும், பழமுந், தேனும்,
தெங்கிளநீர் வெற்றிலைபாக் காதி யான
செய்யநிவே தனங்களொடு சேவை செய்து,
தங்கள்மன தாரஉம தடியில் தாழுந்
தன்மையினர் நன்மைபெறீஇத் தழைக்கு மாறு
செங்கமல மணிதொடையீர்! ஆடீர் ஊஞ்சல்
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (8)

மூத்ததாய், இளையதாய் என்னுந் தாய்மார்
முறையினிரு பால்வைக, முளரி கேள்வர்
பார்த்தென வார்காதுதனிற்கு ழைகள் தூங்கப்,
பனிமதியின் வதனஒளி பண்பின் ஓங்க,
ஏத்துமடி யார்கவலை யாவும் நீங்க,
எனைஉமது திருவடிக ளென்றுந் தாங்கச்
சேர்த்திடுமுப் புரிநூலீர் ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (9)

அன்பர்தமக் கினியாரே! ஆடீர் ஊஞ்சல்,
அகங்குழையார்க் கினியாரே! ஆடீர் ஊஞ்சல்,
பொன்புனைகா தணியாரே! ஆடீர் ஊஞ்சல்,
பொருளெனக்குத் தணியாரே! ஆடீர் ஊஞ்சல்,

வன்பரைக்காத் தளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
மதிநிகர்தண் அளியாரே! ஆடீர் ஊஞ்சல்,
தென்சுன்னை வாழ்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபூத ராயரே! ஆடீர் ஊஞ்சல். (10)

வாழி

வாழிபூ தலத்தோர்கள் மழையும் வாழி,
மறையவர்கா ராளரொடு வணிகர் வாழி,
வாழிபசு நிரைமகளிர் கற்பு வாழி,
செங்கோன் முறைமை மறையும் வாழி,
வாழி நாள் தோறும்அடி பணியுந் தொண்டர்,
திருப்பணி செய்துவைத்த மேலோர் வாழி,
வாழிதென் சுன்னைநகர்ப் பூத ராயன்,
வரதனரு ளாலவ்வூர் வாழி, வாழி.

## சுன்னாகம்

# மயிலணிச் சுப்பிரமணியர்

## ஊஞ்சல்

காப்பு

திருவேறு மணிமார்பன் முதலோர் போற்றுஞ்
செய்யமயி லணிவாழு முருகன் மீது
பொருளேறும் ஊஞ்சலிசை இனிது பாடப்
புகழேறும் அடியவர்கள் தழைக்க நாளும்
அருளேறு மும்மதமா மாரி பெய்யும்
அத்திமுகத் துத்தமனென் றரனுர் தந்த
திருவேறு விநாயகமுக் கண்ணன் பாதஞ்
சென்னிமிசை கொண்டுபவந் தீர்த்து வாழ்வாம்.

நூல்

திரைவளர்செம் பவளமணித் தூண்கள் நாட்டி
செங்கனகப் பைம்பொன்வளை விட்டம் ஓட்டி
நிரைவளருந் தரளமணிக் கயிறு மூட்டி
நிறைகிரணம் வீசுரத்னப் பலகை மாட்டி

1934

# சுப்பிரமணியர் ஊஞ்சல்

புரைவளரா வகையமைத்த பீட மீதிற்
புவிவளரும் உயிர்வளர இனிது வைகி
வரைநடஞ்செய் காலவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (1)

கண்ணனும்எண் கண்ணனும்கண் களித்துப் பாட,
கனலிமதி ஓர்கரத்திற் கவிகை நீட,
அண்ணன்மக வானெழிற்பூங் கவரி போட,
அமரர்துந் துபிமுழக்கம் விண்மண் மூட,
திண்ணமுறு கூற்றடப்பை கொண்டுள் நாடத்,
திகழால வட்டமொடு பவனன் கூட,
வண்ணமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணி வாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (2)

கங்கைமுடித் துளதாதைத் திருக்கண் சாத்தக்,
கணபதியா கியமுன்னோன் களித்து நோக்க,
செங்கையிற்சித் திரபானு தீபந் தூக்கத்,
திகழ்வருணன் பனிமழையே எங்கும் ஆக்க,
அங்கைமலர் தூவிமுனி வோர்கள் வாழ்த்த,
அரகரஎன்(று) அமரர்மறை யோர்கள் போற்ற,
மங்கைஉமை பாலகரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (3)

அந்தரிஅம் பிகைத்தாயுள் அன்பிற் பார்க்க,
அமரரா தியபதினெண் கணங்கள் ஆர்க்க,
கந்தருவர் இசைநறவஞ் செவியில் வார்க்க,
ககனநட மகளிரடி சதியிற் பேர்க்க,
முந்தியவாச் சியங்கள்கடல் ஒலியைத் தூர்க்க,
முருக!சர வணபவ!என்(று) அடியர் போற்ற,
வந்தவினை தீர்ப்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (4)

பன்னிருசெங் கதிர் ஆறாய் வந்த தென்னப்,
பலமணிகள் மிளிருமுடி சிரமேல் துன்ன,
மின்னுதுலி சாதிமலர்க் கரமேல் மன்ன,
விரிகடகக் கரங்கள் ஈராறும் துன்ன,

துன்னுமணித் தண்டைசதங் கைஎன்(று) இன்ன
சுடர்க்காலிற் கலின்கலினென்(று) ஒலித்து மின்ன,
வன்னமயில் வாகனரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (5)

தன்னனைய பின்னவர்கள் எண்ம ரோடு
தாழ்விலடல் வாகுவெனுந் தகையோர் போற்ற
மன்னும் எழிற் சேவல்கொடி மேல்நின்(று) ஆட,
மரகதஒள் நிறத்தூவி மயூரம் ஆட,
இந்நிலத்தின் மிசைஎங்கும் மகிழ்வே ஆட,
இருமருங்கில் நின்றுஇருசத் திகளும் ஆட,
வன்னமணிக் கடம்பினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர், ஊஞ்சல். (6)

அந்திசந்தி வந்துநின்சந் நிதியில் நின்றே
அடிவணங்கி அடிமைசெயும் அடியார் வாழ,
நந்தலிலா வகைபூசை நடக்கு மாறு
நற்பொருள்ஈட்(டு) உத்தமரும் நயந்து வாழ,
சிந்தைமகிழ் வுறக்கேணி மதில்நின் கோயில்
திருப்பணிசெய் தொண்டர்களும் சிறந்து வாழ,
மந்திரதந் திரப்பொருளே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர், ஊஞ்சல். 7)

சொலஅரிதாங் கருணைபொழி முகம்ஈ ராறும்,
துய்யமலர்க் கடம்புபுனை புயம்ஈ ராறும்,
குலஅயிலுங் குலிசாதி படையுந் தோன்றக்,
குறமகள்தெய் வதயானை அம்மை யோடு
கலபமர கதமயில்மேல் காட்சி ஆடுங்
காலம்எது வோஅறியாக் கடையேன் வாழ,
மலரகித பூரணரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (8)

அந்தமுதல் இல்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
ஆரணநல் லில்லவரே! ஆடீர் ஊஞ்சல்,
செந்தியில்வாழ்(வு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,
சிவபரனுர்க்(கு) உகந்தவரே! ஆடீர் ஊஞ்சல்,

தந்திமுகர்க்(கு) இளையவரே! ஆடீர் ஊஞ்சல்,
தருவரமர்க்(கு) இளையாரே! ஆடீர் ஊஞ்சல்,
வந்தெனையாள் கொள்பவரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் வேலவரே! ஆடீர் ஊஞ்சல். (9)

## வாழி

மறைவாழி, வாழிமறை யோரும், வாழி,
வணிகர்,வே ளாளர்குலந் தழைத்து வாழி,
சிறைவீசு மயிலயில்செஞ் சேவல் வாழி,
திருப்புயத்தின் விருப்பமர் சத்திகளும் வாழி,
நிறைவாழி மகளிரிடை, முகில்கள் வாழி,
நெடுஞ்சுரபி இனம்வாழி, நீலமீ தென்றும்
நறைவீசுஞ் சோலைமயி லணிவாழ் கந்தர்
நல்லருள்பெற்(று) அத்தலம்எந் நாளும் வாழி.

## எச்சரீக்கை

திருவார்மயி லணிவாழருட் செல்வா! எச்சரீக்கை:
சிறியேனிடர் தீர்த்தாண்டருள் தேவே! எச்சரீக்கை:
அருவாயரு உருவாய் வரும் அரசே! எச்சரீக்கை:
அடியாருளம் அகலாதுறை அமுதே! எச்சரீக்கை:

வானோர்சிறை மீட்டாண்டஎன் வாழ்வே எச்சரீக்கை:
மதியார்புரம் எரித்தானருள் வரதா! எச்சரீக்கை:
தேனார்மொழி உமையாள்தரு சிறுவா! எச்சரீக்கை:
தினந்தோறும்என் உளம்மேவிய தேனே! எச்சரீக்கை:

நினைவாருளம் பிரியாவரு நிமலா! எச்சரீக்கை:
நெடியோன்மரு மகனாகிய நேயா! எச்சரீக்கை:
முனையார்வடி வேலேந்திய முதல்வா! எச்சரீக்கை:
முதல்வார்க்கரு மறைபேசிய முருகா! எச்சரீக்கை:

## பராக்கு

நீலமயில் ஏறியருள் நித்தா! பராக்கு:
நேடுமடி யாரிடர்தீர் நிமலா! பராக்கு:
சீலமுறு வள்ளிமகிழ் தேவா! பராக்கு:
சிவனருளும் ஆறுமுகச் செல்வா! பராக்கு:

துய்யமயி லணியில்வளர் துணைவா! பராக்கு;
சூரனைவதைத் தருள்செய் துரியா! பராக்கு:
வையமிசை எனையாள வருவாய்! பராக்கு:
வானுலகர் வாழ்வுபெற வைத்தாய்! பராக்கு:

பந்தவினை தீர்க்கும்உமை பாலா! பராக்கு:
பகரரிய மெய்ஞ்ஞான பதியே! பராக்கு:
கந்தனென வந்தஅருட் கடலே! பராக்கு:
கருணைமழை பொழிபனிரு கண்ணு! பராக்கு:

லாலி

ஈசலாலிசெக தீச! லாலி:
பூசுரர் துதிக்குமுரு கேச! லாலி:
மங்கைதெய்வ யானைவள்ளி மதன! லாலி:
மனதினொடு உரைதொடர அரியை! லாலி:
துங்கமயில் ஏறிவரு சோதி! லாலி:
சூரனை வதைத்தசுப் பிரமண்ய! லாலி:
சாற்றுபெரு வாழ்வருளும் சாமி! லாலி:
சதுர்மறைப் பொருளுரைத்த சதுர! லாலி:
போற்றுநவ வீரர்புகழ் புனித! லாலி:
புங்கவற்கு வாழ்வளித்த புண்ய! லாலி:

## சுன்னுகம்

# மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல்

காப்பு

சீர்கொண்ட ஈழவள நாட்டின் ஓர்பால்
சிறப்பமரும் யாழ்ப்பாண தேசந் தன்னில்
பேர்கொண்ட சுன்னுக நகர மீது
பிறங்குமயி லணிப்பதியில் வாசஞ் செய்யும்

மார்கொண்ட சீதரனாய் உலகங் காத்து
மன்னுமகா விட்டுணுமேல் ஊஞ்சல் பாட
கார்கொண்ட யானைமுக முடைய தேவன்
கமலமலர் அடியிணைகள் காப்ப தாமே.

## நூல்

பேசரிய மேருவெனத் தூண்கள் நாட்டி,
பிறங்குமர கதப்பெரிய விட்டம் மூட்டி,
தேசுலவும் தரளமணிக் கயிறு பூட்டி,
செங்கனகத் தாலியலும் பலகை மாட்டி,
நேசமுடன் அமைத்தருளும் ஊஞ்சல் ஏறி,
நிலஉலக உயிர்கள்எல்லாம் தழைத்து வாழ,
வாசமுறுந் துளவினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்.

சந்திரனுஞ் சூரியனுங் கவிகை தாங்க,
சசிபதிசெங் கரதலத்திற் கவரி ஓங்க,
அந்தணர்கள் இருமலரின் மாரி தேங்க,
அன்புமிகும் அடியர்குழாம் இடரின் நீங்க,
நந்தலிலா வாச்சியங்கள் பலவும் ஆர்ப்ப,
நமநாரா யணஒலியே விண்மண் தூர்ப்ப,
வந்தனைசெய் வார்நிதியே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்.

மருவமருந் துளவமணி மாலை ஆட,
மன்னுதிருக் கரத்துளசக் கரமும் ஆட,
உருவமரும் முழக்கமுறு சங்கும் ஆட,
உயர்வுபெறு வில்லொடுவாள் தண்டம் ஆட,
பொருவரிய கனகமணித் துகிலும் ஆட,
பொன்னினியல் மணிமவுலி தானும் ஆட,
வரைகவித்த குடையினரே! ஆடீர் ஊஞ்சல்,
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்.

கிளர்பவள நிறத்தினரே! ஆடீர் ஊஞ்சல்;
கிரியின்மழை காத்தவரே! ஆடீர் ஊஞ்சல்:
துளைஅமைவே இசையினரே! ஆடீர் ஊஞ்சல்:
தொல்லுலகம் உண்டவரே! ஆடீர் ஊஞ்சல்:

வணேஅமரும் கரத்தினரே! ஆடீர் ஊஞ்சல்:
வராகவடி வத்தினரே! ஆடீர் ஊஞ்சல்:
வளர்கருட வாகனரே! ஆடீர் ஊஞ்சல்:
மயிலணிவாழ் திருமாலே! ஆடீர் ஊஞ்சல்.

மீக்குலவு மறைவாழி, மறையோர் வாழி,
வேந்தரொடு வணிகர்வே ளாளர் வாழி,
ஆக்களினம் வாழி,முகில் நிரைகள் வாழி,
அன்புமிகும் மகளிர்பதி விரதம் வாழி,
வாக்குலவும் துதிபேசும் அடியர் வாழி,
மன்னுதிருப் பணிசெய்வோர் நாளும் வாழி,
மாக்கமல நங்கைதிரு நோக்கம் வாழி,
மயிலணிவாழ் திருமாலின் அருளும் வாழி.

# மயிலணிச் சிலேடை வெண்பா

## காப்பு

வெற்றிவடி வேல்முருகன் மேவு மயிலணியைப்
பற்றிச் சிலேடைவெண் பாநூறு—சொற்றிடவே
கம்பொருகை யானனத்தன் காணு னருளுநன்மே
கம்பொருகை யானனத்தன் காப்பு.

## நூல்

பூவிரத நீத்தமுனி புங்கவரு மாவணமும்
மாவிரதஞ் சேரு மயிலணியே—மேவிருவர்
மாதனத்து வந்தார் மகிழ்ந்து வரைக்கந்த
மாதனத்து வந்தார் மணே. (1)

சேயவிளங் காளையரும் செய்தவரு மோதனத்து
வாயச மூட்டு மயிலணியே—பாயத்
தகரை நயந்துகைத்தான் தானவர்க ளாம்பா
தகரை நயந்துகைத்தான் சார்பு. (2)

பூங்குழலார் கண்ணும் புரவதன்றி யார்முகமும்
வாங்கலே நோக்கா மயிலணியே—மாங்கனியைக்
கண்ணிமையிற் சேவலார் கைக்கொளப்பூச் சூழ்கடம்பின்
கண்ணிமையிற் சேவலார் காப்பு. (3)

கோகனகப் பூமேலும் கோவேந்தர் வீதியிலும்
வாகனங்க ளேறு மயிலணியே—ஆகவத்தில்
வந்துகைக்குந் தேரார் மடிந்தருளப் பாகனென
வந்துகைக்குந் தேரார் மனே. (4)

விண்ட மலர்போல் விரும்பிவர மெஞ்ஞான்றும்
வண்டிசை பாடு மயிலணியே—தொண்டர்கள்போய்
ஆறக் கரத்தா னமைத்தங் கவர்க்கருளும்
ஆறக் கரத்தா னகம் (5)

போய்க்கழனி வித்துநரும் போரரச ருஞ்செவியின்
வாய்க்கவிதை நாடு மயிலணியே—சீர்க்கனற்கு
மாரனெனத் தோன்றினன் வள்ளிக்கு மையல்செய்
மாரனெனத் தோன்றினன் வாழ்வு. (6)

ஊற்றூர் புனற்றடமு மூர்ப்புறஞ்சே ருங்கடமும்
வாற்று மரைசேர் மயிலணியே—போற்று
தவருக் கினியான் றமிழ்முனிவ னுதியமா
தவருக் கினியான் றவம். (7)

மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே
வாணிவந் தோங்கு மயிலணியே—வேணுவைக்கொண்
டாக்குவித்தார் மெய்ய ரபத்தரெனக் கண்ணிடவன்
பாக்குவித்தார் மெய்ய ரகம். (8)

காரிகை யார்வதனங் கண்டமிவை கண்டுதட
வாரிசங் கோடு மயிலணியே—சேரமரர் [னுமொரு
வேந்தைக்கேட் டுக்களித்தார் மெய்மையைப் பொனென்
வேந்தைக்கேட் டுக்களித்தார் வீடு. (9)

பேறுபெற்றார் தம்மனமும் பேணிநக ரப்புறமும்
மாறுருக்கங் காட்டு மயிலணியே—சீறியபின்

வேட்டுவரை மேவினர் மெல்லியலாம் வள்ளிதனை
வேட்டுவரை மேவினர் வீடு. (10)

மாயாத வன்பினரும் வாள்வீரர் தூணிகளும்
வாயாரப் பாடு மயிலணியே—போயாத
வந்தருங்கா னங்கடந்தார் வண்டணி யின்வாழ்ந்து
வந்தருங்கா னங்கடந்தார் வாழ்வு. (11)

தப்பா மொழிப்புலவர் தாமுந் துவசமுங்கோ
வைப்பாடல் செய்யு மயிலணியே—இப்பாரில்
ஊரு மொருவினு ேனதுருகா திப்பெயரோ
டூரு மொருவினு னூர் (12)

வாதையின்மா மாத்திரரும் வண்டு மெழும்பித்த
வாதசுர மாற்று மயிலணியே—ஓதும்
வியாகத் துதித்திடுவார் வேடிச்சி யைத்தே
வியாகத் துதித்திடுவார் வீடு. (13)

அஞ்சநடை யாரடியு மம்பகமுஞ் செவ்விய
மஞ்சரியை மானு மயிலணியே—நஞ்சஞ்ச
வைத்தானை வேலினன் மல்குசுரந் தண்ணெனச்செய்
வைத்தானை வேலினன் வாழ்வு. (14)

தண்டலையும் பொன்னின் றளியும் தவமதுவார்
வண்டுறக்கங் காட்டு மயிலணியே—தொண்டிலரா
கத்தினிறை வாகநத்தார் காங்கேயர் மேலையுல
கத்தினிறை வாகநத்தார் காப்பு. (15)

விண்டலஞ்சேர் கோபுரமு மெய்யோ கருமேக
மண்டலந் தாங்கு மயிலணியே—வண்டரைத்துன்
பத்துக் களித்திடுவான் பாவைவள்ளி நாயகியின்
பத்துக் களித்திடுவான் பற்று. (16)

மாசுதவிர் தங்குழலின் மானுர்கண் மேனிலையில்
வாசம் புரியு மயிலணியே—மாசுறுசூர்
அங்கங் கெடுத்தா ரரிவைவள்ளி காணவுரு
அங்கங் கெடுத்தா ரகம் (17)

புஞ்சநிதி யெட்டியரும் போர்வீர ருங்கட்டா
மஞ்சிகையுள் வைக்கு மயிலணியே—தஞ்சமென
வேதனைமுன் னிட்டார் வினைகெடுத்தார் வெஞ்சிறையில்
வேதனைமுன் னிட்டார் வீடு. (18)

ஓசைபெறும் வண்டினமு மும்பரொடு நாடோறுங்
வாசவரும் பாடு மயிலணியே—பாசிழையாம்
அட்ட கலாபத்தா ராலடியேற் கெய்துவினை
அட்ட கலாபத்தா ரகம். (19)

பத்தர் மனமும் பதியோரு முன்னுபர
வத்து வரையா மயிலணியே—முத்தப்
பழனி மலையார் பயந்தருளும் வேற்கைப்
பழனி மலையார் பதி. (20)

கிள்ளைமொழி யார்விழியுங் கேள்கிளரும் வார்காதும்
வள்ளையிலை மானு மயிலணியே—கொள்ளானி
உத்தரத்திற் சாற்றினர் உண்மையைக்கும் பற்கிருக்கின்
உத்தரத்திற் சாற்றின ரூர். (21)

# மயிலணி

# விசாலாட்சி அம்மை பதிகம்

## விநாயக வணக்கம்

உலகெலா மொன்று வொன்று யொன்றியு நிற்ப தொன்றாய்
இலகுவ தெதுவோ வன்ன தெமக்கிறை யதற்கு லீலை
பலவுள வவற்று ளொன்றாய்ப் பணிந்தவர்க் கின்பம் பூக்குந்
திலகமா யானை யான செய்தியைச் சிந்தை செய்வாம்.

## நூல்

பூமேவு கொன்றையொடு திங்களணி மகுடமும்,
புதியதள வனையமூரற்
பொற்புமிரு விற்புருவ வழகுமுக் கண்களின்
பொலிவுமதி நுதலினெழிலுந்

தூமேவு கொவ்வையங் கனியைநிக ரிதழெளித்
தொன்மையும், நுதலிலிட்ட
சுந்தர மிகுத்தகுங் குமதிலக சேர்வையுந்,
தோன்றிய முகக்கருணையும்,
மாமேவு பசியமர கதநீல வண்ணமென
வாய்த்ததிரு வடிவுமாயென்
மனமலரும் விழிமலரு மிகமலர வெதிராகி
வந்துநற் காட்சிதருவாய்!
ஏமேவு கண்ணியே! உலகெலாம் ஈன்றருளும்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (1)

அந்திமதி புனைவேணி யமலனோ டபேதமாய்
அமருவாய் அகிலநடவ!
ஆரருளி னவனையா ளுகவும் நின்னையவன்
அன்புடன் மகிழ்ந்து வேட்கும்
பைந்தொடி ஒருத்தியென் ருகவுஞ் செய்தவன்
பாகத் தமர்ந்துவைகிப்
பாராதி அண்டப் பரப்பெலா நொடியினிற்
பண்புட னமைத்தருளுவாய்
இந்தவித மாகநீ தந்தருளும் விளையாடல்
எத்தனை யெனப்படுபவோ?
ஏகாந்த நின்றுணரு வாருணர்வ தன்றியிதை
என்போலு வாருணர்வரோ?
இந்தனைய நுதலியே; வந்தனைசெய் வார்க்கருளும்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (2)

திக்குமுக மாயினேன் மாதர்மூ வரைமணஞ்,
செய்துவாழ் கின்றசீருஞ்
செந்திருவை அம்புவி மடந்தையை மணந்தரி
திரைக்கடல் படுக்கும்வாழ்வும்,

மைக்கறை மிடற்றினே னைந்தொழி னடாத்தியவ்
வானோர்கண் மகுட சூடா
மணியாகி அணியாய கயிலாச பதியாகி
வாழ்வுபெறு மப்பெருமையும்,
கைக்கிளி தரித்தன்ன மூர்ந்துவரு கண்ணிநின்
கண்ணினரு ளில்லையென் னிற்
கணமெனினு நிற்குமோ? இவ்வுலகெ லாநினது
கருணைவடி வென்றுகாண்,
இக்கனைய சொல்லியே நற்பெருமை தந்தருள்க,
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (3)

தந்தையொடு தாயென்ன வந்தவிவர் தந்ததென்
சகசரென வந்துதித்தோர்
தாமெனக் குதவியதென் மகவினொடு தாரமுஞ்
சஞ்சலந் தந்தவன்றி
வந்தவோ ரின்பமெட் டுணையும்யா னறிகிலேன்
மற்றவர் தமக்கின்பமாய்
வந்திடுவ தேதுலக மிந்தவித மாய்மாய
வைத்திடுவ தன்றியொன்றைச்
சிந்தைசெய விடுவதிலை முந்தைவினை யாலீது
தீர்வகையு மேதுமில்லை,
திருகா திருந்துமன முருகா நினைந்துனைக்
சேவிப்ப தெந்தவிதமோ?
எந்தவடி வும்உனது வடிவமெனு நினைவருள்க
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே? என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (4)

கைப்பொருளி லாசையோ ரெட்டுணையு மறிகிலேன்
காணியிஃ தெனதிடமெனுங்
கவலையுங் காண்கிலேன், அவலமாய் மகளிரைக்
காண்டொறும் நெஞ்சமென்னும்

பொய்ப்பிசா சஞ்சுழன் றெழுமியாம லவர்தமது
பூரித்த கும்பமுலையிற்
புரணவை வேல்விழியி னிற்கிரண முகமதிப்
பொலிவினிற் சொல்லினல்குன்
மைப்படியும் வேலையிற் கைப்பதும வீச்சின்மேல்
மருவுமொரு துரிதநடையின்
மயலுழுற் வுலையுமிஃ தியல்பென்ப தமையுமோ?
வரைவுசெய் தாரிருக்க
எப்படியு மிதுதொலைய நீயருள வருகுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (5)

கண்ணுகி நின்றுருவு காண்பதுவு நீ; உடற்
கற்பிதம தாயிருந்து
கடுகுமூ றுதிகளை உணர்வதுந் நீ; மணிற்
கந்தமறி நாசியுநீ;
பண்ணுதி ஓசையைக் கவர்செவியு நீ; இரச
பக்குவம் பார்ப்பதும்நீ;
பற்றியிவ் வைந்தின்வழி உற்றுநின் றுழன்மனப்
படிவமுந் நீகொலென்றுற்
பண்ணுதி மூன்றின்வரு பயனுமறி வன்கொலோ?
பெற்றியிவ் வாறிருக்கப்
பிழைகள்செய் தனனென்று துயர்வதுந் நன்மையிற்
பெரியனெனு மகிழ்வுமருவி
எண்ணுத எண்ணங்கள் எண்ணுமல் அருளுவாய்!
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே! (6)

நன்றுதீ தென்றுலகி லெண்ணியே மையலுறு
நாடகமென் யானறிகிலேன்,
நம்மைவை தாலுமவ் வைவிலுறு பயன்யாது?
நண்ணிப் புகழ்ந்தாலுமென்?

துன்றுசுவை நாவன்றி மட்கலமு மறியுமோ?
தோகைநீ யலதுமனுடத்
தொகுதிகளு மறியுமோ? ஒருவனுள் ளத்தினுள்
தொக்கவப் பக்குவங்கள்
பின்றையுண ராமலே வைதாரை நொந்துமிசை
பேசினரின் மகிழ்வாகியும்
பேதிலுலை வன்கொலோ? வீதிவந் தென்னுளம்
பேதைநீ குடியிருக்க
என்றுமெவ் விடமுமெப் பொருள்வரினு மெனதெனேன்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (7)

ஆரெனக் கென்செய்வ ரஃதன்றி அவர்தமக்(கு)
அடியேனும் என்னசெய்வேன்?
அறமென்ப தார்வழிய! தல்லாமை யார்வழிய?
தாயினின் வழியவன்றோ?
சீரெனக் கண்டறஞ் செய்தே னியானென்று
செப்புவா ரலதுதீமை
செய்தே னியானென்று சொல்லுவா ரலதுபிறர்
செய்ததென வவர்கள்யாவர்?
நீரெனக் கடலெனப் பிறிதாகு மோவிந்த
நிலைமையை நுனித்துநோக்கி
நின்றநிலை தவறுமல் நின்றபடி யாகியே
நின்றருக நீயருளுவாய்!
ஏரெனக் கண்டதொன் றேனுமிப் புவியிலலை
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (8)

இச்சித்த படிநன்மை தீமைகள் புரிந்திடற்(கு)
எய்துமோ? அஃதில்லையே!
இல்லையெனில் வல்லபங் கொண்டவை களைத்தள்ள
ஏலுமோ? அதுவுமில்லை,
இச்சையிஃ திவ்வா றிருத்தலிற் றீமைகளை
விட்டுவிட வேண்டுமென்னும்
விதிருநன் மைகள்செய்ய வேண்டுமெனு மாசையு
மேவிலேன் வந்தவெல்லாம்

அச்சமகிழ் வின்றியே நினதருளை மறவாமல்
அனுபவித் தேதொலைப்பேன்
அறிவின்மை கொண்டுபலர் குறைநிறைகள் பேசலுக்
கசைவனோ? உலகுயிரெலாம்?
எச்சமென அருள்கின்ற தாயாகி வந்திடுமோர்
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே! என்னையாள்
எழில்விசா லாட்சியுமையே. (9)

ஊழின்வழி வருபவரு முறுவோரும் இதனைவெலல்
ஒல்லுமோ கல்வியில்லார்
ஒருவனிடர் உயர்வுகளின் இகழ்புகழ் புரீஇப்பிறப்
பொன்றிலே பயனுய்குவார்
காழின்வழி மரமுமதன் வழியினிற் கனியுமே
காணுமல் லாதுபிறழா
கன்மம் புசிக்குநாட் சென்மமிஃ திற்செயல்
கலப்பதிலை போகமாகப்
பாழினெழு நயமீது முனிவர்சின மகிழ்வினிற்
பார்த்திலே மென்னினுங்கும்
பார்க்கலா முன்பினு யினமோக மொழியீது
பண்பிதிவ் வாறிருக்க
ஏழினெழு மிவ்வுடற் கஞ்சுகோ? தஞ்சநீ
இறைவியே! மயிலணியில்வாழ்
ஈசனுக் கிடமான தேவியே என்னையாள்
எழில்விசா லாட்சி யுமையே! (10)

வாழி

செம்மையா மறைமுடிவின் துணிபு வாழி,
திரிசயந்தீர்ந் தொன்றுமெய்ச் செல்வம் வாழி,
நம்மையறிந் தவருயர்ந்தோர் சங்கம் வாழி,
சார்ந்தவரை ஒழுகுபவர் தாமும் வாழி,
நம்மையா ரெனவறிய நமக்கு நன்மை
நல்கிமயி லணிப்பதிவாழ் நம்பன் பாங்கர்
அம்மைவிசா லாட்சியுமை யருளா னுளும்
அத்தலமும் மறையவரும் வாழி, வாழி.

**கந்தரோடை**

# வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்

சீர்பூத்த முடிமீது நிலவு பூத்த
நிமலனார் திருவருளின் நிறைவு பூத்த
ஏர்பூத்த யானைமுகத் தெழிலே பூத்த
இறைவனடித் தாமரைகள் இறைஞ்சி ஏத்திக்
கார்பூத்த மலர்ச்சோலை கவினப் பூத்த
கந்தநகர் செறிவத்தாக் கையில் வாழும்
பேர்பூத்த விசாலாட்சி அம்மை மீது
பெயர்பூத்த ஊஞ்சலிசை பேச லாமே. (1)

துதிமேவு ஞானநடந் தூண்க ளாக,
துணையாகு மூனநடங் கயிற தாக,
விதிமேவு மவற்றிடைதான் விட்ட மாக,
விளங்கியஓங் காரமது பீட மாக,
கதிமேவும் ஐந்தெழுத்தின் தோற்ற மாக,
கண்டமணி ஊஞ்சலிடைக் கவின ஏறி,
மதிமேவு முகத்தணங்கே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (2)

பூவகையா மீசருமுச் சீவர் தாமும்
முத்தேகந் தொறுமொருமை பன்மை யாக,
மேவியவா பாசஅபி மானம் எல்லாம்
விளிந்ததுநீ நீயதுவே யானாய் என்னும்
பாவகமாய் அகண்டிதபூ ரணமே யாகிப்,
பாவியேன் வாழஅருட் பார்வை நல்கி,
மாவிலிளங் குயிலனையீர்! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (3)

தடமருவுங் குவளையென விழிகள் மின்ன,
சலதியெனக் கருணையவைக் கிடையே துன்ன,
நடமருவு மீசர் வலப் பாகமன்ன,
நாயகியே என்றடியார் துதிகள் பன்ன,

கடமருவு கரியுரியே காயஞ் சொன்னக்
கடமருவி மார்பினிடைக் கவின வன்ன
மடமருவு மலைமகளே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (4)

மேருவென விளங்குமிகு தூண்க ணாட்டி,
விரவுமண்ட கோளகையின் விட்ட மோட்டி,
சீரியவன் பினரன்பிற் கயிறு பூட்டி,
செப்பியவிப் புவியைநிகர் பலகை மாட்டி,
தேரியநல் லறிஞர்கள்கைத் திறமை காட்டி,
செய்தமணிப் பீடமிசை திகழ வைகி,
வாரியரங் கணையானாய்! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (5)

கொண்டபர னன்புடையின் முறுவல் கொள்ள,
கும்பிமுக னோடிளைய குமரன் மெல்ல,
மண்டியபே ரன்பினொடு மடியின் வைக,
மறைகளெலாம் வேதமுனி வோர்கள் விள்ள,
தொண்டர்கட முளத்திலா னந்த மெள்ளத்,
தோன்றும னுழைந்திருளின் துயரைத் தள்ள
வண்டுறுகை மலரணங்கே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (6)

கங்கைகளங் கிருபாலும் கவரி வீசக்,
காளிகள்கைக் குடைமதிகள் கொண்டு கூடப்,
பங்கையமென் பாவையர்கள் துதிகள் பேசப்,
பலபணிகள் குலவுமொழி யிருளை மூச,
மங்கைஅயி ராணிசசி மடவி லாச,
மாதரொடும் வெள்ளடப்பை கொண்டு லாவ,
மங்கலபூ ரணவாழ்வே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (7)

இந்துமுக விடைஅசைய அயில்மே னட்டத்(து)
அரமகளிர் சதிமுறையில் நடனங் காட்டத்,
தொந்தமென முரசுகண நாதர் மாட்ட,
தும்புருநா ரதர்யாழின் சுருதி கூட்ட,

கந்தருவ மகளிரிசை நாவால் மூட்ட,
கமலினியும், அனுந்திதையும் வடந்தொட் டாட்ட,
வந்தணைசெய் வார்மருந்தே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (8)

மாயோனுக்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்,
மகிடமுகற்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்,
தீயவருக்(கு) இனியாளே! ஆடீர் ஊஞ்சல்,
செய்தவருக்(கு) இனியாளே! ஆடீர் ஊஞ்சல்,
தூயமறை முடியாளே! ஆடீர் ஊஞ்சல்
சுடருமதி உடையாளே! ஆடீர் ஊஞ்சல்,
வாயமுத மொழியாளே! ஆடீர் ஊஞ்சல்,
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (9)

தன்னனைய கோபுரமும் மதிலு மேரு
தானென்ன விளங்கவொரு தளியுந் தந்து
கின்னைஅதில் தாபனஞ்செய் தேத்து மாறு
நினைதருமிக் கந்தநகர்ப் பதியின் ஓங்கிப்
பொன்னுலக மெனவாழ்வு பொருந்து மாறு
பொற்புறு மற்றவை விரைவிற் பொலியுமாறு
மன்னுயிருக் கொருதாயே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல். (10)

## வாழி

வாழிபுவி, அதிலுறுநான் மரபு வாழி,
மறையினொடா கமங்களுமவ் வழியே வாழி,
வாழிமுகில், மகளிர்பதி விரதம் வாழி,
வாழிபசு நிரையொடுநல் வாய்மை வாழி,
வாழிமுக மதிகருணை வாழி வாழி,
வாழிமல ரடியுநாற் கரமும் வாழி,
வாழியவத் தாக்கைவிசா லாட்சி யம்மை
மனத்தருளால் அன்னகரம் வாழி வாழி.

# குடந்தை வெண்பா

## ஆசிரிய வணக்கம்

### அகவல்

ஆகம வேத மனைத்தையு மளித்த
ஏகனே யிவ்வுரு வென்னத் தோன்றிய
சங்கர பண்டிதன் தாள்மலர் தமியேற்(கு)
எங்குமாய் நிற்கு மிலை பிறவெனவே.
உடுப்பை நகரா னுயர்கவி வாணன்
அடுத்தவென் பொய்ந்நிலைக் காயிரங் கதிரோன்
சிவசம்புப் புலவன் சேவடி
என்னையுந் தனக்கா ளென்ன இருத்துமே.

## அவையடக்கம்

### கட்டளைக்கலித்துறை

கல்லார் பிழையறி யாரிந்த நூலிற் கலையின்மிக
வல்லார் பிழையுரை யாரிருந் தாலு மதியிலென்போ
லல்லா தவருரைப் பாருரைத் தாவதெ னம்புவியி
லெல்லாம் வல்லாருமொன் றேனும்வல் லாரு மிருப்பதின்றே.

## தலைவிநாயக வணக்கம்

கூர வுவந்தடிமை கொண்டு குடந்தைவெண்பா
சாரவொரு நூறெனக்குத் தந்தருள்வார்—மேருவெனுஞ்
சோதி விஞயகஞர் தோன்றலெனத் தோன்றுமரு
ளாதி விநாயகனு ரன்பு.

## நூல்

பூவும் பணியும் புனையு மகளிரெதிர்
கூவு மெயில்சூழ் குடந்தையே—தாவுமொரு
செச்சையா னத்தன் றிகழும் பகன்புனையும்
செச்சையா னத்தன் செனிப்பு. (1)

மையாடு சோலைதொறும் வந்தமரர் பூசைசெயக்
கொய்யா மலர்கொள் குடந்தையே—செய்யாள்சேர்
ஐயான னத்த அடியார்க் கருள்புரியும்
ஐயான னத்த னகம். (2)

காரிகையார் போயொளித்துக் காணுகெனு முன்னவர்போற்
கோரகைகூய்க் காட்டுங் குடந்தையே—ஓரிளையால்
மாய்ந்தவரங் கத்தான் மகிழத் துளவளித்தான்
மாய்ந்தவரங் கத்தான் மனை. (3)

செங்கரும்பு வேலியெனச் சேரத் திலகமொடு
குங்குமமு மோங்குங் குடந்தையே—கொங்கையிற்செய்
கல்லாட னூற்றினர் கந்துளக்கிக் கேட்டவொரு
கல்லாட நூற்றினர் காப்பு. (4)

மாதகலத் தானுதி வானவர்கன் மாமகநீர்
கோதகலத் தோயுங் குடந்தையே—தாதுபொலி
கள்ளருக்குத் தாரார் கதியறிவு மேன்மைதிரு
கள்ளருக்குத் தாரார் கலப்பு. (5)

வெள்ள முறுகலசம் வெங்கணையி னுற்சிதைவு
கொள்ளமிர்த நீர்சேர் குடந்தையே—வெள்ளொளிசேர்
நந்தரத்த ரந்தரத்தர் நாளும் பணியவருள்
நந்தரத்த ரந்தரத்தர் நாடு. (6)

அண்டமதி போய்க்கதலி யாடுங் குருத்துமதன்
கொண்டகுடைக் காம்பாங் குடந்தையே—எண்டகுசீர்
ஆசை யுடையா ரருளுடையா ரம்பிகைபால்
ஆசை யுடையா ரகம். (7)

அண்ட ருலகிற் கமைத்தவழி போற்புரிசை
குண்டலத்தி னீடுங் குடந்தையே—கொண்டுவலை
வாங்கு திரையார் மயிலைபடுத் தார்மறையாம்
வாங்கு திரையார் மனை. (8)

உற்றமகப் பேற்றி னுவந்துமக நீர்படிந்தோர்
கொற்றவ னேத்துங் குடந்தையே—முற்றெவையுங்
கட்டங்கங் கைப்படையார் கட்டுமர ஞர்சுடருங்
கடடங்கங் கைப்படையார் காப்பு. (9)

வாகனமாய் வேதன் வரங்கிடத்தல் போற்பலசெங்
கோகனக மேறுங் குடந்தையே—தேகநிலை
மாலத் திரியார் மனத்திரியார் வண்டுளவ
மாலத் திரியார் மனை. (10)

மாமியொடு கூடி மகிழ்ந்து மனைதோறுங்
கோமி யுறையுங் குடந்தையே—ஏமுனையில்
தாரணித் தேரார் தமையெரித்தார் பூமகனூர்
தாரணித் தேரார் தலம். (11)

தீதின் முனிமகளாய்ச் செந்திருபொற் றாமரைநீர்க்
கோதின் மலர்சேர் குடந்தையே—போதனயன்
காணுத வக்கரத்தார் கண்ணெனவிக் காசினிக்காக்
காணுத வக்கரத்தார் காப்பு. (12)

தாவா வருபொன்னித் தண்கரையில் வந்தவெண்பு
கோவா ரிசமாங் குடந்தையே—சாவாது
செய்யவனை மாற்றினன் சேர்துயர்நஞ் சுண்டுமுன்னாட்
செய்யவனை மாற்றினன் சேர்பு. (13)

சந்தமலை வந்துதமிழ் தந்தமுனி சிந்தையணு
குந்தொடரின் வந்தேய் குடந்தையே—தந்திரமென்
றுயவடி வாக்கினு னுடிநிழ லைத்தொண்ட
ராயவடி வாக்கினு னூர்வு. (14)

பொள்ளா வகண்டப் பொருள்போற் பலபொருளும்
கொள்ளா வணஞ்சூழ் குடந்தையே—தள்ளாடும்
வைதிகக் கோலத்தார் வன்றொண்ட ரோலைகிழீஇ
வைதிகக் கோலத்தார் வாழ்வு. (15)

காசியி னீங்காக் கடும்பவமுங் கண்டளவிற்
கூசி நடுங்குங் குடந்தையே—நேசமுள
பத்தரைக் கையான் பரசுமுதற் கொண்டவிரு
பத்தரைக் கையான் பதி. (16)

நீடு மமிர்தரும்ப நின்றுவிழுங் காயின்முளை
கூடியொரு தெங்காங் குடந்தையே—பாடுமொழித்
தேவாரப் பாட்டினுர் செல்லப்பல் லக்குதவு
தேவாரப் பாட்டினுர் சேர்பு. (17)

ஆபத்தின் வந்துதொழு மாதித்தன் றன்மாமன்
கோபத்தி னீங்குங் குடத்தையே—வீபத்தின்
வெய்யகோ டீரத்தர் மேதினியைக் காய்ந்தமுந்தாள்
வெய்யகோ டீரத்தர் வீடு. (18)

தாவு மமிர்தகடஞ் சஞ்சலிக்க வாங்குவிழுங்
கூவிளைநின் ருேங்குங் குடந்தையே—மேவுநுதற்
கண்ணக் கினியார் கனிந்துதொழு வார்கருத்திற்
கண்ணக் கினியார் கலப்பு. (19)

உண்டதிகங் காசியினென் ருேர்விரலி னுற்பகவர்
கொண்டு குறிக்குங் குடந்தையே—விண்டலருந்
தாமத் தொடையார் தயங்குசடை யார்மதியத்
தாமத் தொடையார் தலம். (20)

பட்டிமணி மண்டபத்துப் பாமழைபெய் பாவாணர்
கொட்டி முழங்குங் குடந்தையே—எட்டியர்கள்
செங்கைத்தி னத்தினுர் சிற்சபையிற் காட்சிதரு
செங்கைத் தினத்தினுர் சேர்பு. (21)

சொக்கியதொண் டர்க்குதவச் சொன்னமொடு நின்ருர்போற்
கொக்குப் பழுக்குங் குடந்தையே—கட்கமலப்
பூதி வணத்தர் புரியத் திகிரியருள்
பூதி வணத்தர் புரம். (22)

துன்று மெழுநிலைய சோதிமணி மாடங்கள்
குன்று நிகருங் குடந்தையே—அன்றொருபொய்
ஆவணங் காட்டினு ரன்பின் வழுதிபணி
யாவணங் காட்டினு ரார்வு. (23)

நாவிருக் கோதிவலம் நாளுமறை யோர்புரியோர்
கோவிருக்க மோங்குங் குடந்தையே—பூவிருக்கு
மாலூர வஞ்சடையார் வாழ்த்தவருள் சத்திமய
மாலூர வஞ்சடையார் வாழ்வு. (24)

சந்திரனுக் காரருளைத் தந்துகுரு நிந்தையைத்தீர்க்
குந்தடஞ் சேருங் குடந்தையே—கந்தரஞ்சேர்
ஆல வனத்த ரகங்குறையக் காளியொடா
டால வனத்த ரகம். (25)

ஆரெனினுஞ் செய்தபவ மத்தனையு நீக்கவொரு
கோரவா ளொக்குங் குடந்தையே—தாரமெனுங்
கங்கா தரனுர் கனன்றுசம னுந்தியநா
கங்கா தரனுர் கலப்பு. (26)

ஆதிகும்ப சூத்திரத்தி னுதரித்த நாதரைநற்
கோதம னேத்துங் குடந்தையே—ஏதுமின்றிக்
கற்பத் திருப்பார் கயவர்செயு நூல்களையான்
கற்பத் திருப்பார் கலப்பு. (27)

செந்திரு வந்துமுனி செல்வியாய் வைகிடவை
குந்தனு மேவுங் குடந்தையே—ஐந்துபெருந்
தானவரைக் கொன்றுர் தமையளவு கண்டிடவெண்
டானவரைக் கொன்றுர் தலம். (28)

பற்றறுத்த காசிபனைப் பற்று மலிவடிவக்
குற்ற மகற்றுங் குடந்தையே—நிற்றலுநல்
காப்பணி யாரணியார் காணநடிக் கும்பணியாங்
காப்பணி யாரணியார் காப்பு. (29)

தொக்கபலி யுண்டுவலஞ் சூழ்ந்திறக்க முத்திதனைக்
குக்குர னுக் கீயுங் குடந்தையே—பிக்கையெடாப்
பாரவல மோட்டினர் பண்டுமழைக் கோளையுண்ட
பாரவல மோட்டினர் பற்று. (30)

தெள்ளமிர்த கும்பச் சிமிலிசிக்க நாதரெனக்
கொள்ள விழுஞ்சீர்க் குடந்தையே—பள்ளநெடு
வாரிதிநஞ் சார்ந்தார் மதுரையெனக் கூடரவின்
வாரிதினஞ் சார்ந்தார் மனே. (31)

பாப்பரசன் வந்துவினை பாறப் பணிந்திருகை
கூப்பி வணங்குங் குடந்தையே—சேப்பிலைநீர்
ஆநிலை யாரகத்த ரைந்து நிலையகத்தர்
ஆநிலை யாரகத்த ரார்வு. (32)

மாட்டி வணிகனையோர் வண்கரும்புக் காயிரங்கொள்
கோட்டு முகன்வாழ் குடந்தையே—வீட்டியெழுங்
காலனைத் தாக்கினர் கான்மலராற் காய்ந்தசினக்
காலனைத் தாக்கினர் காப்பு. (33)

போய்நிலை யாவும் புகநீ ரரியரியாக்
கூநிலையத் தாங்குங் குடந்தையே—நானிலையென்
றுய விருந்தாரே ரன்மாற னார்மனையி
லாய விருந்தா னகம். (34)

ஞாலமெலா மேத்துமக நாளதனி லீராறு
கோலநெடுந் தேரூர் குடந்தையே—ஆலமுதி
ரந்தரிக்கா ரந்தரித்தா ரார்ந்து மதுரையில்வந்
தந்தரிக்கா ரந்தரித்தா ரார்வு. (35)

ஆடரங்கு மாளிகையு மாடெழிலா ராடுதொறுங்
கோடரங்க ளாடுங் குடந்தையே—நீடரங்கச்
சேக்கைபற் றுக்கையார் தீயவெரித் தார்முழுதுஞ்
சேக்கைபற் றுக்கையார் சேர்பு. (36)

ஆடி யெனமதிய மம்பொனெழிற் கோபுரத்திற்
கூடியெழில் காட்டுங் குடந்தையே—நீடுதலைப்
பாத்திரக் கையார் படர்ந்திருடி மார்வனத்திற்
பாத்திரக் கையார் பதி. (37)

பாயரியி னீள்குரத்தாற் பாயநெய்த்தோர் பார்த்தசென்னி
கோயி லமைக்குங் குடந்தையே—போயிலங்கை
காவலனை ரைக்கடுத்தான் கைதொழுவான் கண்ணருணல்
காவலநா ரைக்கடுத்தான் காப்பு. (38)

அம்பிற் சிதைந்தமிர்த மைந்துகுரோ சத்தவதி
கும்பம் பெருகுங் குடந்தையே—வெம்பிவருந்
தந்தமலை யாரிடத்தார் தாழவுரித் தாரிடையாந்
தந்தமலை யாரிடத்தார் சார்பு. (39)

அம்புலிநல் லாடுதொறு மாதித்தன் றன்கரத்தாற்
கும்பிடுவா னெய்துங் குடந்தையே—தும்பைமுடித்
தாரக மாயினுர் சாரா தவர்முருகாற்
ருரக மாயினுர் சார்பு. (40)

ஏலு மமிர்தகட மெய்யக் கணையொடுவிற்
கோலு மிடஞ்சேர் குடந்தையே—நாலுமறைப்
பாயம் பரியார் படிவயத்தார் பால்வேலைப்
பாயம் பரியார் பதி. (41)

பாடன்மறை வேதன் பணிந்துபடைக் குந்தொழிலைக்
கோடல் புரியுங் குடந்தையே—ஆடலைச்சித்
அம்பரத்திற் கண்டா ரறியினுல கெங்கணுமாய்
அம்பரத்திற் கண்டா ரகம். (42)

மாற்றி யபிமுகமாய் வந்தருள வந்தொன்பான்
கோற்றொடியா ரேத்துங் குடந்தையே—சேற்றெழும்பூ
வைத்தகங்கை யாற்றினன் வண்புலுகுத் தான்சடையில்
வைத்தகங்கை யாற்றினன் வாழ்வு. (43)

என்றுஞ்சூதாடியன மிட்டுநன் மூர்க்கர்மலங்
கொன்றுமுத்தி சேருங் குடந்தையே—மன்றினொரு
நாடவா தாடினார் நக்கீரர் நற்பொருளை
நாடவா தாடினார் நாடு. (44)

நாட்டியமேற் கோட்டமுத னற்பன் னிருகோட்டக்
கூட்ட மருவுங் குடந்தையே—வேட்டுவனாய்
வல்லுளி யெய்தார் வயங்கு விடங்கரென
வல்லுளி பெய்தார் மனை. (45)

முன்னிருவர் கங்கையிடை மூழ்கிமக நீரெழுந்து
குன்னந் தெரிக்குங் குடந்தையே—தந்நிலையைக்
கல்லானை யுண்பித்தார் காணார் கரும்புதவிக்
கல்லானை யுண்பித்தார் காப்பு. (46)

ஆசரித்த கும்பத் தமைத்த சகபீசங்
கோசரித் தோங்குங் குடந்தையே—நேசரன்பின்
வட்டரங்கத் தாடினார் மாதுமையா ளோடிருந்து
வட்டரங்கத் தாடினார் வாழ்வு. (47)

அம்புயன் கும்பத் தமைத்தசமி வீழ்ந்துமுளைக்
கும்பரி செய்துங் குடந்தையே—அம்பர்மா
காளவிட மார்ந்தான் கடவுளரைக் காக்கவெழு
காளவிட மார்ந்தான் கலப்பு. (48)

ஆட்டாலை வெம்புகைகண் டாடமயி லங்குயில்கள்
கோட்டாலை யெய்துங் குடந்தையே—தாட்டாளை
நீடுவச னத்த னிகமா கமமெனச்சொ
னீடுவச னத்த னிலம். (49)

பூருவமாய்ப் பொன்னி புரண்டிருபா லும்பெருகிக்
கூர வருள்செய் குடந்தையே—சூரியனைக்
கண்ணிடந் தோட்டினார் காரணிபா லாய்க்காதின்
கண்ணிடந் தோட்டினார் காப்பு. (50)

சாரம் பரத்தகந்தி தாவிவிளை யாடுமரி
கோரம்ப ரொக்குங் குடந்தையே—ஆரின்சீர்
மாலை முடித்தார் மதிமுடித்தார் வல்வினையேன்
மாலை முடித்தார் மனை. (51)

அஞ்சத்தன் வாழ்வு மரிவாழ்வும் வாழ்வார்க்குக்
குஞ்சத் துணையாம் குடந்தையே—நெஞ்சத்தில்
வாரம் படைத்தார் மதுரையினில் வந்துவையை
வாரம் படைத்தார் மனை. (52)

வேறு தலத்துவினை வீப்பதன்றித் தன்வினையுங்
கூறு படுத்துங் குடந்தையே—நீறுபுனை
காயம் பவளத்தர் கண்ணெனக்கண் ணூருயிரைக்
காயம் பவளத்தர் காப்பு. (53)

அஞ்சு தொழிலு மமையக்கீழ்க் கோட்டத்திற்
குஞ்சிதத்தா ளோங்குங் குடந்தையே—வஞ்சியெனக்
கட்டா மரையர் கலக்கவையற் றந்தவராக்
கட்டா மரையர் கலப்பு. (54)

பூவி லிருக்கும் புனிதற்கும் பொற்புடனோர்
கோவி லிருக்குங் குடந்தையே—தாவிலிருக்
காலு மறியா ரளவறியா ரங்கையிருந்
தாலு மறியா ரகம். (55)

செய்தமணிக் கோயிலின்முத் தேவரைவைத் தேயுலகங்
கொய்தளித்துக் காக்குங் குடந்தையே—கைதவர்கள்
கண்டுபணி யக்கிட்டார் கையரைதோள் சென்னியருள்
கண்டுபணி யக்கிட்டார் காப்பு. (56)

ஏலா வரிகரிதே ரெய்திமறு கொன்றொன்று
கோலா கலஞ்செய் குடந்தையே—மேலாகுந்
தங்கநக வில்லினர் தண்கயிலை யாதியெனத்
தங்கநக வில்லினர் சார்பு. (57)

பாடுமறை பூவைகிளி பார்த்திருந்து பொன்னியின்பைங்
கோடிருபா லுஞ்சொல் குடந்தையே—ஓடுமுளம்
நாட்டியஞ் செய்தார் நயக்கவனஞ் சென்றுபின்னோர்
நாட்டியஞ் செய்தார் நகர். (58)

சாபந் தவிர்த்தம்மை சந்நிதியிற் சந்திரர்க்காங்
கூபமொன் றோங்குங் குடந்தையே—தாபரநற்
சங்கமங்க ளூறிஞன் றந்துவருந் தத்தேவ
சங்கமங்க ளூறிஞன் சார்பு. (59)

தேடி யளமுதவுஞ் செல்வர்பனை வீதிதொறுங்
கோடியினு மல்குங் குடந்தையே—நாடவொணூர்
பாத கமலத்தார் பார்த்து மறைச்சிலம்பூர்
பாத கமலத்தார் பற்று. (60)

கைத்தொழிலைக் கண்டகில கம்மியனு நாணமனைக்
கொத்து நெருங்குங் குடந்தையே—துய்ப்பதின்றி
ஆவிநைந் தாடினு ராரூரர்க் கேற்றளித்தார்
ஆவிநைந் தாடினு ரார்வு. (61)

பாளை யுயர்கமுகிற் பைங்கழைகண் மேலண்ட
கோளகையி னீடுங் குடந்தையே—மாளிகைப்பொற்
கோகனக னத்தன் குலவிருபா கத்தனெண்சீர்க்
கோகனக னத்தன் குடி. (62)

கேசவற்கு மாசை கிளரப்பொ னூலமைத்துக்
கோசிகங்க ணெய்யுங் குடந்தையே—வாசியொடு
வாதவூ ரர்க்குவந்தார் வைதுமனப் பத்தியொரு
வாதவூ ரர்க்குவந்தார் வாழ்வு. (63)

சாமளவும் பொன்னி தனிலாடி நோயின்றித்
கோமளம்யா ருஞ்சேர் குடந்தையே—மாமதுரை
அங்கயற் கேதனத்தா னுயினு னஞ்சலிக்கும்
அங்கயர்க் கேதனத்தா னூர்வு. (64)

தீமுகரு மின்பச் செருக்கிலழுந் தித்தேவர்
கோமகனுய் வாழுங் குடந்தையே—வீமளவில்
வெம்பசிய வித்தான் விழைந்துடன்றிக் குட்டிகட்கு
வெம்பசிய வித்தான் விருப்பு. (65)

சீமானே வென்றுபிச்சை செய்வோர் மகிழ்ந்தியக்கர்
கோமானே யேசுங் குடந்தையே—தேமாவின்
கச்சிநக ரத்தன் கனிந்துபூச லார்புரியா
கச்சினக ரத்தன் கலப்பு. (66)

ஏலக்கா யின்கனியை யிச்சித் தமரர்வரக்
கோலக்கா வான்போங் குடந்தையே—ஞாலக்கா
பத்துமடங் கற்படுத்தான் பத்திபுரி தொண்டருக்கோ
பத்துமடங் கற்படுத்தான் பற்று. (67)

ஆட்படு தொண்டருளத் தானந்த வாரியெனக்
கோட்பலவு தேன்சோர் குடந்தையே—சேட்படுத்துக்
கோவணங் கேட்டார் குலவுதிரு நாவலூர்க்
கோவணங் கேட்டார் குடி. (68)

பச்சைத்தே ரான்பரிமா பார்த்துயர்ந்த பைங்கதலிக்
குச்சத்தி ருணுங் குடந்தையே—இச்சகமுற்
றுங்கார மாட்டிடு ரன்றுமகம் போய்த்தக்க
ஞுங்கார மாட்டிஞ ரார்வு. (69)

நாளவதி வந்துமிடர் நல்கவெரீஇ நின்றுநவக்
கோளவதி யெய்துங் குடந்தையே—மாளவதி
போகத் துணையார் புகஞுவ லூரர்வழி
போகத் துணையார் புரம். (70)

பார்முழுது நீக்கியநற் பண்ணவர்க ளொந்தவித்துக்
கூர்மமென வைகுங் குடந்தையே—நீர்முறையின்
ஆறுமத மாஞ ரடைந்துதம்மைக் கண்டளவில்
ஆறுமத மாஞ ரகம். (71)

ஆபுரத்த வென்ன வநேக விடிவிளக்குக்
கோபுரத்தி னீடுங் குடந்தையே—தீபுரத்தில்
வைத்த வருளினூர் மாயா மலங்களைய
வைத்த வருளினூர் வைப்பு. (72)

பாற்புணரி நாற்புறமும் பாய்ந்ததென வெண்ணீற்றிற்
கூர்த்தமெய்யர் சூழுங் குடந்தையே—கார்க்கடலின்
மீனாக வென்றான் விடைமுகனைக் கண்ணாகு
மீனாக வென்றான் விருப்பு. (73)

அல்லிமலர்க் கொன்றைபொரு ளாகவடி யார்களெனக்
கொல்லியளி பாடுங் குடந்தையே—புல்லடியார்
நாட்டச் செவிமுனியார் நாடநடித் தார்புரந்தீ
நாட்டச் செவிமுனியார் நாடு. (74)

தாரா சுரன்வணங்குந் தாரா சுரமுமெழில்
கூரா விளங்குங் குடந்தையே—நேராகப்
பாதியுருப் பச்சென்றார் பற்றறக்கா சிக்கரசு
பாதியுருப் பச்சென்றார் பற்று. (75)

சண்டனுக்கு நல்லருளைத் தந்தசண்ட தீர்த்தநிலை
கொண்டு விளக்குங் குடந்தையே—விண்டமது
மத்தச் சடையார் வழிபடுவார் தங்களைக்கா
மத்தச் சடையார் மனை. (76)

நாலு மறைப்பொருளு நன்றாய் விளங்கவநு
கூலியா யோங்குங் குடந்தையே—வாலரியாய்
அப்பரையார் வத்திரத்தா ராக்கிமறைத் தட்டருள்செய்
அப்பரையார் வத்திரத்தா ரார்வு. (77)

நோற்றவரிற் றீமைபுரி நொய்யவரு மையமொரீஇக்
கூற்றுவனை யஞ்சாக் குடந்தையே—மூற்றையுவ்விச்
சத்தியத்த ரத்தியத்தர் சங்கரியைப் பொங்கியவற்
சத்தியத்த ரத்தியத்தர் சார்பு, (78)

மாதண்டர் கொள்ள வதைக்க வளைத்தநெடுங்
கோதண்ட னும்வாழ் குடந்தையே—தீதண்ட
என்னைப் படையா னிறந்துசிலர் போற்பிறந்தான்
என்னைப் படையா னிடம். (79)

தஞ்சமென யாமுமுன்னோர் தந்தியிற்றூழ் வேமெனல்போற்
குஞ்சரங்கள் சூழுங் குடந்தையே—நெஞ்சமுற
வெள்ளத்தை யாற்றினார் மேவுநந்தி நீராதி
வெள்ளத்தை யாற்றினார் வீடு. (80)

சாத்திரத்தார் பஞ்சமுக சன்மத்தா ராதிசைவ
கோத்திரத்தா ரேத்துங் குடந்தையே—ஏத்திக்
கலியாண நாட்டினார் கைதொழுநஞ் சுண்டு
கலியாண நாட்டினார் காப்பு. (81)

கண்டுமதின் மேலமைத்த காரிடப மேலிடஞ்செல்
குண்டை வெருவுங் குடந்தையே—கண்டமுறும்
அஞ்செவிய மையா னடியார்சொ லன்றியொன்றை
அஞ்செவிய மையா னகம். (82)

அற்றமிலா மேனிலைமே லாயிழையார் கற்பகப்பூக்
குற்றுவந்து சூடுங் குடந்தையே—உற்றுங்
கொலைக்கு முடுக்கையா ரோர்தொண் டரைக்கொண்
டொலிக்கு முடுக்கையா னூர். (83)

பாணம் படச்சிதைகும் பத்துகுமூக் கிற்கும்ப
கோணமென வோங்குங் குடந்தையே—ஆணவப்பேய்
ஆடலை வீட்டினு ரைவகையொன் றில்வழிசேர்த்
தாடலை வீட்டினு ரார்வு. (84)

நீள்கோ புரத்தலையி னீடுமரி யோரையதிற்
கோளரிவைத் தொக்குங் குடந்தையே—வேளெரியக்
கண்டநய னத்தர் கவின்றே டெனக்காதிற்
கண்டநய நத்தர் கலப்பு. (85)

சாலுநிறை யென்றிப்பர் தன்னையர்மா டத்துவிண்சொல்
கோலினிற்கைந் நீட்டுங் குடந்தையே—நாலுமறை
கட்டுமொழி யாவிருப்பார் கைதொழுமூ வர்க்குமெயில்
கட்டுமொழி யாவிருப்பார் காப்பு. (86)

பாடவதி மேனிலையார் பற்றிவிண்ணிற் சென்மிதுனங்
கோடவதி யாகுங் குடந்தையே—நாடவதி
ஒன்றுமிலான் வல்லா னுகைப்பான் மறையெனப்பேர்
ஒன்றுமிலான் வல்லா னுவப்பு. (87)

கும்பமொன்பான் பத்தென்னக் கோபுரத்தின் மீதுவிண்செல்
கும்பமுங் கூடுங் குடந்தையே—உம்பருடன்
காராமை யோட்டினன் கைதொழநன் மார்பணிந்த
காராமை யோட்டினன் காப்பு. (88)

அண்டரைக் கூவிமறை யந்தணர்கள் வேள்விபுரி
குண்டநிரை சூழுங் குடந்தையே—தொண்டரெறி
கல்லா லமர்ந்தார் கதியளித்தார் நால்வருக்காக்
கல்லா லமர்ந்தார் கலப்பு. (89)

கோதாட்டி னருமுத்தி கூடலா மென்றுநிதங்
கோதாட்டி வாழுங் குடந்தையே—சூதாட்டில்
அந்தரிக்குத் தோற்ற ரதுவிதுவோ வென்றுளஞ்செய்
அந்தரிக்குத் தோற்ற ரகம். (90)

பாடார் கலியுலகு பாய்ந்துறினும் பல்லுயிர்க்குங்
கோடா வளமாங் குடந்தையே—கோடாதி
கோலங்க ளேந்தார் குலவுசிவ மாதியவாங்
கோலங்க ளேந்தார் குடி. (91)

நாடிக்கை யாற்புனைவோர் நண்ணி நவநவமாய்க்
கோடிக்க வோங்குங் குடந்தையே—சூடிப்பாம்
பம்புலிப்போர் வையா ரமைத்தா ரரைக்கசைத்த
வம்புலிப்போர் வையா ரகம். (92)

காட்டிய வெத்தலமுங் காணு வதிசயங்கள்
கூட்டி யுணருங் குடந்தையே—தேட்டமின்றிச்
சாதியடி பட்டார் தமக்கெளியார் பாண்டியன்கைச்
சாதியடி பட்டார் தலம். (93)

நற்றவ மன்புகொடை நல்லறிவு மேன்மையொடு
கொற்றநிலை கொள்ளுங் குடந்தையே—பற்றுநரை
யோக வனத்தா ருவப்ப ருளந்தெளியார்
யோகவ நத்தா ருவப்பு. (94)

கண்டபடி கண்டுறினுங் காணுக் கதிமறையிற்
கொண்டபடி யுண்டாங் குடந்தையே—குண்டமென
வாயுதரக் கூட்டினன் வையைதனை யூமையுரு
வாய்தரக் கூட்டினன் வாழ்வு. (95)

எல்லா மறைக்கு மிலக்கியமா யெவ்வுயிருங்
கொல்லாமை போலுங் குடந்தையே—இல்லாமே
தற்போதங் கெட்டார் தமக்கெளியார் யுத்தியினுய்
தற்போதங் கெட்டார் தலம். (96)

வீமுகனு மாரு விதியாற் றனதகம்போய்க்
கோமுகனுந் தேறுங் குடந்தையே—காமுகராய்ச்
செய்யவத்தி ரத்தினர் சேரார் திசையொடுச்சிச்
செய்யவத்தி ரத்தினர் சேர்பு. (97)

காண வினவக் கலைதெரியக் கண்டுணரக்
கோணடை யெய்தாக் குடந்தையே—காணுலகம்
நாட்டி நொடித்தா னயந்துபொரு ஊான்மாறன்
நாட்டி நொடித்தா னகர். (98)

ஓடாத நுண்மதியு மோடித் தனதுவளக்
கோடாய்ந் தறியாக் குடந்தையே—நீடானைக்
காப்புக் குறைந்திடுவார் கைதொழார் தங்களிடங்
காப்புக் குறைந்திடுவார் காப்பு. (99)

தேவ வடிவாய்த் திருவடிவாய்த் தேவருக்கோர்
கோவில் வடிவாங் குடந்தையே—மூவடிவம்
ஆய்வடி வானு னறியவரு ளிவ்வடிவுக்
காய்வடி வானு னகம். (100)

வாழி

தந்திரமும் வாழி சதுர்மறையுந் தான்வாழி
அந்தணரும் வாழி யறம்வாழி—பைந்தமிழிற்
றந்தகுடந் தைவெண்பாத் தன்னையுணர் வோர்களெல்லாம்
சந்ததமும் வாழி தக.

# பதார்த்ததீபிகை

## விநாயகவணக்கம்

தந்திமாமுகத் தெந்தைதாளிணைச்
சிந்தையா லருந் தொந்தநீங்குமே.

## ஆக்குவித்தோன் பெயர்

தென்னுக நேர்சிவ சம்புப் புலவனைத் தெய்வமறை
தன்னுக நேர்சிவ சங்கர பண்டிதன் றன்னைமலர்ப்
பொன்னுக நீடு புனித பதங்களிற் போற்றிசெய்யும்
சுன்னுக நாடன் முருகேச பண்டிதன் சொல்லிதுவே.

## ஆக்குவித்தோன் பெயர்

காப்போல் வளருங் கவிகையன் செந்தமிழ்க் காவலரைக்
காப்பானற் சேலத் துயர்திருப் பத்தூர்க் கடிநகரான்
யாப்பா லிசைக்க கலியாண சுந்தர னீதெனலால்
யாழ்ப்பாணச் சுன்னை முருகேச பண்டிதன் யாத்தனனே.

## அவையடக்கம்

பெற்றமுன் பெற்ற பெரியவன் வாரி பெயர்ந்திலங்கை
முற்றிய முற்றென முற்ற வெறும்பு முயன்றதுபோல்
சற்றுமோர் வட்குணர் வில்லா வெளியனுந் தட்கலின்றிக்
கற்றவன் போலப் பதப்பொருட் டீபிகை காட்டினனே.

## நூல்செய்த கால முதலியன

தர்க்க சங்கிர கப்பொரு டான்மிகத்
தொக்க சொற்பொருட் டீபிகை சொற்றனன்
மிக்கொ ரொன்றினை விட்டவை யாயிரந்
தக்க வாண்டு தழையுங் கலியினே.

## நூல்

## பதார்த்தோத்தேசம்

பொருள்பண்பு கன்மம் பொதுமை விசேடம் பொருந்துகின்ற
ஒருசம வாய மபாவ மெனப்பதத் துப்பொருள்கள்
உரைதரி னேழுவை யெல்லா முறைமுறை யோதிடுவன்
வரைவள ருந்தமி ழைப்பயி லுந்திரு மாமயிலே (1)

## திரவிய குணங்களின் வகை

மண்புன றீவளி வான்போழ்து திக்காத்து மாமனமென்
றெுன்பது முற்பொருண் மூவெண் குணங்க ளுருவஞ்சுவை
பின்பகர் நாற்ற முறலெண் ணளவு பிறிதியைபு
கண்பெறு நீக்கம் பரத்துவம் பின்மை கடுந்திண்மையே (2)

காணு நெகிழ்ச்சி சிநேக மொலிபுத்தி கண்டசுகங்
கோணும் பருவர லிச்சை வெறுப்புக் கொளுமுயற்சி
பேணும் தரும மதன்மம் பழக்கம் பிறங்குமிவை
மாணும் பொருள்வயி னுள்ளன வென்று மதித்தனரே (3)

## வினைமுதலிய நான்கின் வகை.

மீயெழல் வீழ்தல் வளைத னிமிர்தல் வினைநடத்தல்
ருய்வுழி யைவகை யென்பர்சா மானிய மாமிரண்டே

ஏயும் பராபர மென்ன விசேடமெண் ணில்லனவாய்
வாய்தரு நித்தப் பொருளி னிடைச்சம வாயமொன்றே (4)

## இன்மை வகை

முன்னின்மை பின்னின்மை யொன்றினென் றின்மை முழுது
பன்னும பாவப் பகுப்பொரு நான்கு பதார்த்தமெனச் [மின்மை
சொன்னவை யேழுக்கு முள்ளவகையிவை தோகை நல்லாய்
இன்னினிச் சொல்வன் பிருதிவி யாதி யெடுத்துவந்தே (5)

## பிருதிவி முதலிய நான்கின் விவரணம்

தரைமுத னன்குந் தனித்தனி நித்த மநித்தமெனப்
பிரிதரு நித்த மணுக்கா ரியங்கள் பெயரநித்தம்
வரையுமங் நாற்பொரு ளுக்கும் பகுப்பு வகுப்பர்பின்னும்
உரைதரு மாக்கை பொறிபுல னுமென வொண்டொடியே. (6)

செப்பிய நாற்பொருட் டேயத் திருப்பது தேகம்பொறி
வைப்பென நாசி நுனிநா விழிமுழு மையுடல்கொண்
டப்பெரு நாற்றஞ் சுவையொளி யூறற லாயுமவைக்
கொப்புங் கிராண மிரசனங் கண்டுவக் குப்பெயரே. (7)

விடயங்க ளாவன மண்கன் முதலிய மேதினிக்குப்
படரு நதிகட லாதிய நீர்க்குப் படிவிசும்பு
தொடரும் பிலன்வயி னுள்ளன தீக்குத் துளக்கமுற
அடரு மரமு னலைக்கு மருத்தங் கருங்கலிக்கே. (8)

வன்னி முதலிய பாரி லிருப்பன வானிலுள்ள
மின்னன் முதலிய நீரை விராயென மேவுவதின்
அன்னஞ் சமைக்கு மனல்வயிற் றெய்துவ தாகரசம்
பொன்னை முதலிய நாற்றீ விடயங்கள் போந்தனவே. (9)

உள்ளுடல் வாயுப் பிராணனென் றும துபாதிதனாற்
றள்ளும் பிராண னபானதி பேர்பெறுந் தன்னுருவின்
றுள்ளும் பரிசத் ததுகா லெரிவெம்மை யூற்றதுநீர்
சிள்ளென் றுடற்றுப் பிருதிவி நாற்றஞ்செய் சீரியதே. (10)

ஆகாய முதலிய மூன்றின் விவரணம்

பின்னைந்துள் வானொலி யுள்ளது காலம் பெறுங்குணமோ
முன்னது வாத விறப்பாதி மூன்றிற்கு மூளுந்திசைக்
குன்னுங் கிழக்கு முதல வழக்கிற் கொருமுதன்மை
மன்னழி யாமை நிறைவே கமும்பொது மற்றிவைக்கே. (11)

ஆன்மாவின் விவரணம்

அறிவுக் கிருப்பிட மான்மா விருதிற னுவனெல்லாம்
அறிபவ னீச னொருவன் சுகதுக்க மற்றவன்காண்
பிறிது பிறிதுமெய் தோறும் வெவ்வேறு பிரிந்துநித்தம்
உறையும் வியாபகன் சீவாத்து மாவென உன்னுதியே. (12)

மனத்தின் விவரணம்

இன்பதுன் பம்முத லெய்துங் கருவி யெழின்மனமாம்
மன்பதை தோறும் பிரியாம னிற்கும் வழக்குண்மையின்
என்ப தனந்தம் பரமாணு ரூபமெப் போதுமுள்ள
தொன்பது நீயறி சொற்றே னினிக்குண மோதுவனே. (13)

உருவ விவரணம்

திருக்குவின் மாத்திரங் கொள்ளுங் குணமொழி சித்திரமுன்
உரைக்கு மெழுவகை பார்முதன் மூன்றி லுறுநிலத்தே
புரைக்கு மெழுமையு நீரின் மறைவெண்மை பொற்றழலின்
இருக்கும் வெளிப்பட வெண்மையென் ருய்ந்தறி யேந்திழையே.

இரச விவரணம்

ஆயு மிரச மிரசனங் கொள்குண மன்மதுகாண்
தோயு மதுரமுன் னுக வறுவகை தொல்புவியும்
பாயும் புனலு மிருப்பது பாரிற் படருமெல்லாம்
தூய மதுரமொன் றேகாணு நீரிற் றுகளறவே. (15)

கந்தஸ்பரிசங்களின் விவரணம்

நாற்றங் கிராணங் கவருங் குணங்கிதி நண்ணுவது
சாற்று மிருவகை நன்றெனத் தீதெனச் சாருந்துவக்

கூற்றள வோர்குண மன்னது மூவகை யூதையந்தம்
தோற்றுங் குளிர்சுட ரீநீ ரவைபிற தோற்றமின்றே. (16)

## உருவ முதலிய நான்கிற்குமுள்ள நித்தா நித்தங்களின் விவரணம்

உருவமு ஞன்கும் புவியினிற் பாகத் துதிப்பனவாய்
மருவு மநித்தம் பிறவற்றி னித்தமு மாறுதலும்
விரவுமப் பாக விதிதமக் கின்றி விளங்குநித்தப்
பொருளிடை நித்த மநித்தத் தநித்தம் பொருந்திடுமே. (17)

## சங்கியா விவரணம்

ஒருமை முதல வழக்கினுக் கேதுவெண் ணென்பதுமாம்
ஒருமை முதலிப் பரார்த்த பரியந்த முள்ளதன்ன
தொருமை யநித்திய நித்தியஞ் சேரினவ் வுண்மையுறும்
ஒருமை யலாதன வெங்கு மநித்திய மொண்பொருட்கே. (18)

## பரிமாண விவரணம்

அளப்ப வருஞ்சிறப் பாகிய காரண மாமிதனைக்
கிளத்திடு வார்பரி மாணமென் றேயணுக் கேடின்மகத்
துளப்பி லிரச்சுவந் தீர்க்கமு நால்வகை யுள்ளதுமேற்
கொளப்படு மொன்ப தெனும்பொருள் யாவுங் கொளப்படுமே.

## பிருதத்துவ சையோகங்களின் விவரணம்

வேரு மெனற்குச் சிறப்புக் கருவியை வேற்றுமையாக்
கூரு கிடப்பர் பொருள்யாவுங் கூடிடுங் கூடியதென்
மாரு வழக்கினுக் கேதுசை யோகமன் மற்றதுதான்
ஏரு வருபொரு ளொன்பது மேறு மிதுசிறப்பே. (20)

## விபாகபரத் துவாபரத்துவங்களின் விவரணம்

கூடிய கூட்டக் கெடுதி புரியுங் குணம்பிரிவு
பாடிய வெப்பொரு டோறு மிருக்கும் பராபரமென்
ருடிய முன்மையும் பின்மையுங் காரண மக்குணங்கள்
தேடும் புவிமூத ஞன்கு மனத்துந் திகழுமன்றே. (21)

திக்கிற் பரத்துவந் திக்கப ரத்துவஞ் சேணணிமை
யொக்க விரண்டினுங் காண்பன காலத்தி னேரினவை
தக்கதம் முன்னினும் பின்னே னினுமுறுஞ் சாரிரண்டு
மிக்கபராபர மென்னும் வழக்கின் விகற்பறியே. (22)

## குருத்துவதிரவத்துவ ஸ்நேகங்களின் விவரணம்

நீரும் புவியு மிருக்குங் குருத்துவ நின்றுயர்விற்
றீருமுன் வீழ்ச்சிக் கசமாயி யென்ப திரவத்துவஞ்
சாரு முதலி லொழுகற்கக் காரணந் தானியல்பு
பேருநை மித்திக மென்றிரு பாங்குறும் பேசிடினே. (23)

நாரத் தியல்பு நெருப்பிற் புவியினை மித்திகமாம் [கிழ்ந்
பாரிற் கனற்றொட ரானெய்ந் நெகிழ்ச்சிநற் பைம்பொனெ
தாரு நெகிழ்ச்சி கனலிடைக் கண்ட துறுந்துகண்முன்
சேரத் திரட்டுஞ் சிநேகம் புனன்மட்டுஞ் சேருமன்றே. (24)

## சத்த விவரணம்

வழுத்திய காது கவர்குண மோசைவிண் வைப்பிரண்டே
எழுத்தின் வடிவுந் தொனியின் வடிவு மெனவகைமுன்
எழுத்து முதலிய முன்னது பின்ன தெறிபறையின்
எழுப்பு மொலியை முதலிய புத்தி யினிச்சொல்வனே. (25)

## புத்தியின் விவரணம்

புத்தி யறிவெவ் வழக்கிற்கு மேது புகன்மிருது
வைத்த வநுபவ மென்னு மிருவகை மற்றதுமுன்
ஒத்த பழக்கத்தின் மாத்திரங் காண்ப துதற்கன்னியம்
மெத்து மநுபவ மன்ன திருவகை மெய்பொயென்றே. (26)

தன்னை யுடையதிற் றனடை யாகந் தருதன்மெய்யே
என்னை யிதுவெள்ளி வெள்ளியென் றோர்த லிதுபிரமை
தன்னை யிலாததிற் றனடையாகத் தருதல்பின்னே
என்னை யிதுவெள்ளி யிப்பி யெனலப் பிரமையிதே. (27)

## புத்தியின் மெய்யநுபவ விவரணம்

பிரத்தியக் கம்மநு மித்தி யுபமிதி பேசுமுயர்
தரத்தியல் சாத்த மெனநால் வகைப்படுஞ் சாருமெய்ம்மை
யுரைத்திடுங் காண்டல் கருத லுவமை யுரையெனவே
வரைத்த கரணமு நால்வகைத் தாகு மயிலதற்கே. (28

## அதிற்கரண விவரணம்

மிக்க தொழிலுடை முக்கிய கார ண மேற்கரணங்
தக்கவக் காரணங் காரியங் காணத் தகுநியதங்
தொக்குமுன் னிற்பது வேறு வழியினிற் சூழ்வதின்றி
புக்கமுன் னின்மைக் கெதிர்மறை காரியம் பொற்றொடியே.

நேர்சம வாயி யசமாயி யோடு நிமித்தமெனக்
காரண மூவகை யொற்றுமை யாயெதிற் காரியந்தான்
சாரு மதுசம வாயி யுதாரணந் தந்துமடிக்
காரு மடியுந் தனது நிறத்தினுக் காமதுவே. (30)

காரியத் தோடெனுங் காரணத் தோடெனுங் கண்டபொருள்
ஓரிடத் தொற்றுமை யாயுறுங் காரண முற்றவிடை
பாரிடைத் தந்துசை யோகம் படத்திற்கப் பாநிறமுஞ்
சாரும் படத்தி னிறத்துக் குதாரணந் தாழ்குழலே. (31)

அன்ன விரண்டிற்கும் பின்ல நிமித்த மதுதறிபா
மன்னுங் குழலே முதலிய வென்ப மடிதனக்கே
இன்ன வியலுறுங் காரண மூன்று ளெதுசிறந்த
தன்னது முன்சொல் கரண மநுபவத் தாய்ந்தறியே (32)

## பிரத்தியக்ஷப் பிரமாண விவரணம்

காட்சி யறிவின் கரணநற் காண்டலக் காட்சியது
மாட்சி நிதியுட னிந்தியங் கூடிட மன்னறிவு
காட்சி விகற்பம் விகற்பிலி யென்றிரு காட்சியதா
மாட்சியிற் காண்ப லறிவே விகற்பிலி வாள்விழியே. (33)

மற்றது சாத்த னிவன்மறை யோனிவன் மாநிறத்தன்
மற்றிவ னென்னப் பெயராதி கொண்டு வகுத்தறிதல்
உற்ற வறிவிதற் கேது வறுவகை யுய்த்துணரத்
தெற்ற வுரைக்குவன் சையோக மாதி தெரிந்துகொள்ளே. (34)

பிரத்தியக்ஷத்தில் அறுவகைக் காட்சிக்கும் விவரணம்

கண்ணிற் பொருளு முருவமுஞ் சாதியுங் காணறிவே
எண்ணிற்சை யோகத் தொடர்முதன் மூன்றி னியலுவன
வண்ணச் செவித்துளை வாளுெலி சாதி மயங்கறிவே
விண்ணப் பெறுஞ்சம வாய முடன்சம வேதறிவே. (35)

கொண்ட விசேட விசேடிய பாவங் குடமில்லநிம்
மண்டலமென்று மருவுறக் காணுதன் மானுவசிர்க்
கண்டலங் காது கரண மறுவகைக் காட்சிகட்கும்
விண்ட பொறிகள் பிரமாண மென்பது மேவியதே. (36)

அநுமானப் பிரமாண விவரணம்

கருத்துக் கரண மநுமிதி காணவக் காணுகையே
பொருத்தும் விமரிச ஜன்னிய ஞானம் புகன்றவிது
அருத்த வியாத்திய பக்க தருமதை யாமறிவு
நெருப்பு வியாப்பிய தூமி யெனலது நெஞ்சுணரே. (37)

அடுக்க லதிலன லுள்ளதென் றோர்த லநுமிதியாம்
எடுத்த வியாத்தி யெவண்புகை புண்டவ் விடத்திலனல்
அடுக்குமென் ஞானம் வியாப்பியம் வெற்பினை யாதிதம்மில்
தடுத்தங் கிருக்கும் விருத்தித் துவம்பக்க தன்மதையே. (38)

தன்னநு மானம் பிறரநு மான மெனவிரண்டு
முன்னநு மான மடுக்களை யாதியின் முன்னிவைத்துப்
பின்னை மலையிடை யன்ன வியாத்தியைப் பேணறிவே
தன்னநு மான மிலங்க பராமரி சம்பதுவே. (39)

பிரதிஞ்ஞை யாதிய வைந்துறுப் போதிப் பிறர்தமக்கவ்
வுரனை யுதிப்பிப் பதுபின் னதுமலை யுள்ளதுதீ
பிரதிஞ்ஞை யேது புகையா லெனல்சுள்ளை போலெனல்காட்
டுரவுற மாட்டி முடிப்பன வேனைய வொண்ணுதலே. (40)

இன்னது மன்ன தெனலு மிற்றே யிதனுலெனலும்
சொன்ன விரண்டின் சொரூபங் குறிக்கொண்டு சூழுவதே
முன்னநு மான மிரண்டின் கரண மொழியிதனுல்
பின்ன வருமலை தீயுடைத் தென்று பெறுகுவரே. (41)

உடம்பா டுடன்மறை கூடிப் பிரிந்திங் குறுவதினுற்
றிடம்பா டிலிங்க மொருமூ வகைப்படுஞ் செப்புமுன்ன
திடம்பா டிரண்டினுங் கொள்ளும் வியாத்தித் தெரித்துணிவில்
புடம்பாடு தூம முடைமை யிதற்குப் பொருந்துவதே. (42)

என்னை யெனிற்புகை யுண்டெவ ணங்ங னெரியட்டில்போற்
றுன்னு மெனுமுடன் பாட்டு வியாத்தியுஞ் சூழுமெரி
மன்னுவ தின்றெவண் மன்னு தவண்புகை மாமடுப்போல்
என்னு மறையின் வியாத்தியுங் காண விருக்குமதே. (43)

அன்வய மட்டின் வியாத்தி யதுகேவ லான்வயிபார்
துன்னபி தேயம் பிரமேயத் தன்மையிற் சூழ்கடல்போல்
என்னு மதுவெதி ரேக வியாத்திக் கியைவதின்றி
மன்னு மெவையு மவையாக வந்திடு வாய்மையினே. (44)

வெதிரேக மட்டின் வியாத்திய னேவெதி ரேகியென்ப
கிதிவேறு வேறு வகையின் மணமுறு கேண்மையினென்
றெதிரேது காண்பின்றி யெங்குந்தன் பக்க மெனவிருக்கு
மதிமா னிவனை மறுப்புரை யான்மதி மாமயிலே. (45)

பக்கஞ் சபக்கம் விபக்கவிம் மூன்றிற் பருப்பதமே
பக்கஞ் சபக்க மடுக்களை தொக்கவி பக்கமடு
தொக்கவிம் மூன்றும் புகையா லனலைத் துணியத்தொகு
மிக்க விரண்டு மிரண்டிற் றுணிந்திட மேவிடுமே. (46)

இரட்டுற நோக்கித் துணியும் பொருட்கிட மேபக்கமாம்
மருட்கை யிலாமற் றுணிந்த பொருட்கிட மற்றதுபின்
பொருட்பட லின்றித் துணியாப் பொருட்கிடம் போந்திவற்ருல்
தெருட்பட லிங்க மொருமூன் றையுமறி தேன்மொழியே. (47)

## போலியே துக்கள்

உள்ள பிறழ்ச்சித் துளபதி பக்கத் தொடு விருத்தந்
தள்ளு மசித்தந் தனடயெனப் போலிக டாமைந்துள
கொள்ளு மநைகாந் திகமூ வகைப்படுங் கூறிற்பொது
விள்ளுஞ் சிறப்பொ ரநுபசங் காரி விதமெனவே. (48)

வேண்டுஞ் சபக்க விபக்க மிரண்டினு மேவுவது
தூண்டுஞ்சா தாரண மங்கியின் மாமலை தூமத்ததென்
றீண்டு முதாரண மாண்டு வியாத்தி யெடுப்பதற்குத்
தேண்டும் பொழுது தடைவந்து நேருந் திறனியதே. (49)

மிக்க சபக்க விபக்கத்தி லின்றி விரும்புகின்ற
பக்கத்தின் மாத்திரந் தங்கல் சிறப்புப் பகருமொலி
திக்கென நித்திய மத்தன்மை யாலெனச் செப்புவது
புக்கமை காட்டி தநுமிதி ஞானத்தைப் போக்கிடுமே. (50)

காட்டினைக் காணுத லின்றிரு பக்கமுங் கையறவை
நீட்டு மநுபசங் காரி வியாத்திக்கு நேர்தடையாம்
நாட்டத் துணியும் பொருளி னபாவத்தி னண்ணிநின்று
வேட்ட வநுமிதி ஞான விரோதி விருத்தமதே. (51)

நித்த மலபொருள் யாவு மழிந்திடு நீளளவை
யுய்ந்தங் களக்கப் படுதலி னென்று மொலிநித்தியம்
அத்தகு காரியப் பாட்டா லெனவு மறியிரண்டின்
மெத்து முதாரண மாரண மாமிடை மெல்லியலே. (52)

சாத்திய வின்மையைச் சாதிக்கும் வேறொரு சாதகமாம்
ஏத்துவை யேற்றது வேசற் பதிபக்க மில்லதுயிர்
பாத்திரம் போலுரை யின்மையிற் புள்ளுடல் பாருமென்று
வாய்த்துரை யாட லநுமிதிக் கீதொரு வன்பகையே. (53)

சார்பங் கசித்த முருவங் கசித்தந் தனைநிகர
ஏலும வியாப்பியத் தன்மை யசித்த மெனவசித்தம்.
ஓரின் வகையொரு மூவித மாகு முரைக்குமிது
சாரும் பராமரி சத்தடை யாமிது தானறியே. (54)

பக்க தயினவச் சேதகத் தின்மையைப் பற்றிக்கொண்ட
பக்க முடைய தேசார் பசித்தப் பராமரிசம்
உக்கு நிலைய துதாரணம் வான்மலர்க் குண்டுமடுப்
புக்க மலரென நன்மண மென்று புகலுவதே. (55)

தன்னியல் பின்மையிற் சாத்திய மாமெனச் சார்பிலதே
இன்னய மான வுருவ வசித்த மிதுவுமதே
என்னப் பராமரி சத்தடை சத்த மெழிற்குணங்கட்
கன்னது கானப் படுதலி னென்பதை யாய்ந்தறியே. (56)

சாத்தியந் தன்னில் வியாத்தி தழைந்துயர் சாதனத்திற்
போய்ப்பர வாம லிருப்ப துபாதி புகலுமிதை
யார்ப்பது தன்னை வியாப்பியத் தன்மை யசித்தமெனச்
சேர்ப்பர் புகைத்தன லான்மலை யென்பதிற் றேர்ந்துகொள்ளே.

பாதித மற்றொ ரளவையிற் சாத்தியப் பாடுதனைச்
சாதனை செய்திடத் தானிட மீந்துபின் சார்பலத்தை
மோதலை நீரெனத் தட்கு மனலென முட்டுறுத்தும்
ஏதுவின் போலிக ளைந்து மிவைமுறை யிட்டனனே. (58)

## உபமானப்பிரமாண விவரணம்

கரண முபமிதிக் கேயுப மானங் கருதுபெயர்
பொருளுடன் கூடு மறிவே யுயமிதி போலுமறி
வுரைசெய் கரண மதிதேச வாக்கியத் துள்ளபொருண்
மரண மவாந்தரச் செய்கையென் றுய்குதி மாமயிலே. (59)

ஆமான் மொழியின் பொருளறி யாம லரணியம்வாழ்
பூமான் மொழிந்த பொருளா லரணியம் போய்க்கவயம்
ஆமானு மின்ன ததனு லதன்பொரு ளாமென்றுன்னிச்
சீமா னொருவன் றெளிதலி னன்னது தேருதியே. (60)

## சத்தப்பிரமாண விவரணம்

ஆத்த னுரைத்த வுரைத்தொடர் சத்தமவ் வாத்தனுண்மை
பார்த்துரை செய்பவன் வாக்கிய மென்ப பதசமுகம்
ஆத்தனை யுய்க்கென லாதி யதுபத மாற்றலது
தீர்த்தன் கருதுசங் கேதநற் சத்திசொற் றேர்பொருட்கே. (61)

அண்மை தகுதி யவாய்கிலே யேதவ் வரும்பொருட்கே
எண்ணிற் பொருள்பெற மற்றோர் பதத்தினை யெண்ணலவா
கண்ணும் பதப்பொரு ளொன்றுட னென்று கலகமின்றி
நண்ண றகுதி யொழிபின்றிச் சோறன்முன் னுட்டியதே. (62)

வாக்கியம் வைதிகந் தன்னொ டிலௌகிக மற்றிரண்டே
ஆக்கிய வீசன் பிரமாணம் யாவு மதுவைதிகம்
தேக்கிய வாத்த னுரைத்தவு மன்ன திடத்துறினும்
போக்கிய மெய்ம்மை யுடையன வேனைப போக்கிலவே. (63)

ஆத்தரு மீசனு மாக்கிய வாக்கிய வத்தமதி
சாத்தமெய்ஞ் ஞான மெனவுரை யாடுவர் தற்கரணங்
கோத்துரை சத்தப் பிரமாண மாகுங் குறுகினவே
பாத்திய நால்வகை பெய்ம்மை யநுபவம் பார்த்தறியே. (64)

## பொய்யனுபவ விவரணம்

ஐயந் திரிவு தருக்க மெனப்பொய் யநுபவந்தான்
செய்யும் வகை யொருமூவித மையந் தெரியுமிது
மொய்ய தறிகொல் புமானொரு வன்கொன் மொழியினென்று
நைய விரட்டுற நோக்கி மலைவுறு ஞானமதே. (65)

சுத்தியிடையிது வெள்ளி யெனமதி தோன்றறிவு
மித்தை திரிவு வியாப்பியத் தீர்வின் வியாபகத்தை
பொத்தென றர்க்க நெருப்பில்லை யாயிற் புகையுமில்லை
உய்த்த வுதாரண மென்க வளவைக் குதவியிதே. (66)

## மிருதிசுகங்களின் விவரணம்

உண்மையும் பொய்ம்மையு மென்று மிருதியு மோரிரண்டு
வண்மை யுறும்பிர மாஜன் னியமுதன் மற்றையது
பெண்மை யிலேயப் பிரமையிற் றோன்றும் பெறுஞ்சுகந்தான்
தண்மையில் யார்க்கு மநுகூல மாயுணர் தன்மையதே. (67)

## துக்கமுதலிய ஆறின் விவரணம்

துக்க மெவர்க்கும் பதிகூல மாயுணர் தோற்றத்தது
புக்க விருப்பிச்சை கோதம் வெறுப்புப் புகன்முயற்சி

தக்க கிருதி விகிதகன் மப்பிளை தன்மங் கண்டாய்
ஒக்க விலக்கிய கன்மத்திற் பாப முறுவதுவே. (68)

## மீட்டும் புத்திமுதலிய எட்டின் விவரணம்

புத்திமு னெட்டுமவ் வாத்துமத் தேயுறும் பொற்குணங்கள்
புத்தி விருப்பு முயற்சி யிருவகை பொன்றுவதும்
நித்திய மாவது மென்ன வநித்திய நீளுயிர்க்கண்
நித்திய மீச னிடத்திலம் மூன்று நிலாவகையே. (69)

## சமஸ்கார விவரணம்

ஒருசமற் கார மொருமூ வகையுறு முய்த்துணர்ந்தாற்
பரவிய வேக நிலைபெறப் பண்ணுகை பாவனையென்
றுரவிய வேகம் புவிமுத னான்கு முளத்துமுறு
மருவி நிலைபெறப் பண்ணுகை பாய்முதன் மண்ணுறுமே. (70)

முன்ன பநுபவத் தன்னயை யாகி மொழிமிருதிக்
கன்னை யெனவரும் பாவனை யாத்துமத் தல்கியுறும்
இன்ன வறிகுதி மூவெண் குணங்க ளெனமயிலே
பின்னை வினைமுத லைந்தையு மின்னினிப் பேசுவனே. (71)

## கன்மசாமானிய விசேஷங்களின் விவரணம்

உலவு சலன வடிவுடைத் தேவினை யுன்னதங்கீழ்
கலவசை யோகந் தமக்கேது மீயெழல் காண்விழுதல்
குலவு சரீரங் குனிந்து நிமிர்ந்துகை கூடுதற்கு
நிலவுறு கூட்ட மவைக்கேது கூன னிமிருதலே. (72)

ஏனைய யாவு நடத்த லெனப்படு மிவ்வனைத்து
மானளை யாய்மகி யாதிய நான்கு மனத்துமுறும்
ஆன பொதுமை யழிவின் றநேக மடைத்தவொன்றாய்
மேன பராபர மென்ன விருவகை மேவியதே. (73)

அத்தமுன் மூன்றினு மெய்தும் பொருட்டன்மை யாதியகீழ்
மெத்திய மேலுண்மைத் தன்மை விசேடம் வெளிமுனைந்தும்
இத்தரை முன்னொரு நான்கி னணுவு மெனவிசைக்கு
நித்தியஞ் சேர்ந்தவை வெவ்வே றெனச்சொல்வ நீயறியே. (74)

## சமவாய விவரணம்

சாதி வியத்தி யுறுப்பி யுறுப்புத் தலைவன்வினை
போதுங் குணகுணி யோடு விசேடம் பொருணித்தியந்
திதின் றிரண்டிரண் டாய்வரு மிவ்விடைச் சேருந்தொடர்
ஓது மொருசம வாய மழிவிலி யோருகவே. (75)

## முன்னின்மை பின்னின்மைகளின் விவரணம்

இன்மைகளுள் கனுண் முன்னின்மை தோன்றுத லின்றிக்கெடுந்
தன்மையின ததுகாரியக்காட்சிமுன் ருனுளது
பின்னின்மையென்பதுகாரியத்தோற்றத்தின் பின்னுளதாய்த்
தன்னின்மை யென்ப தொருபோதுந் தீர்வி றகையதுவே. (76)

## முழுதும் பாவவிவரணம்

முந்துமுக் காலத் துளதாய சஞ்சர்க்க மொய்த்தொடரால்
வந்து வரைந்து கொளப்ப டெதிர்மறை வண்மையது
பந்த மிலாத முழுது மபாவம் பகருவதற்
கெந்த நிலத்துங் குடமில்லை யென்ப தெடுத்துரையே. (77)

## அந்நியோந்நியா பாவவிவரணமும் முடிந்தது முடித்தலும்

ஒன்றினொன் றின்மை யதன்வடி வான்வரைந் தூள்பொருளை
என்று மெதிர்மறை யாக வுடையதொ ரின்மையதாம்
அன்று மடிகுட மென்பதுதாரண மாய்ந்தவற்றுள்
மன்ற வடங்கலிற் சொற்பொரு ளேழென மன்னியதே. (78)

# நீதி நூறு

## ஆசிரிய வணக்கம்

மறைமுடிபு மந்த வழியும்பன் மார்க்கத்
துறைமுடிபுந் தன்னுட் டுணிந்து—பிறைமுடியான்
றன்னடிக்கீழ் நின்முனற் சங்கர பண்டிதனே
யென்னையறி வால்வளர்த்த யாய்.

செந்தமிழில் வல்ல சிவசம்பு வென்றுரைக்கு
மந்தண் மதுரகவி யல்லாமற்—கந்தனடி
கைதொழூஉ மன்புநிலை காட்டிக் கலைதெருட்டி
மெய்யிலெனை வைத்தவரார் வேறு.

## அவையடக்கம்

முன்னூல் பலவான் மொழிவதே னென்றுசில்லோர்
சொன்னார்கள் பேய்மதியாற் சொன்னேன்கா—ணென்னினு
மாய்ந்தறிந்தார் கொள்ளா ரதனைப் புடைநூலென்
றேய்ந்துபல நூலிருக்கு மென்று.

தாழ்ந்தேன் பெரியோர் தமது திருவடியைத்
தாழ்ந்தேன்சொன் னூலிதனைத் தள்ளாமற்—சூழ்ந்த
குருவிந்த மென்னினுங் கொள்ளுவார் கொண்டால்
ஒருநிந்தை யில்லை யுலகு.

## நூல் செய்த காலம் முதலியன

செய்யசக ணண்டுதிகழ்பதினெண் ணூற்றேழில்
வையம்புகழ்குடந்தைமாநகரில்—துய்யதொரு
யாழ்ப்பாணச்சுன்னைநகரெய்துமுருகேசனியான்
நூற்பாடினேனீதிநூறு.

## நூல்

எழுத்துப் பலவகர மெய்திஞற் போல
வழுத்து மொருதனேப்பன் மார்க்க—விழுத்தகையர்
கொண்டிறைஞ்ச நிற்பான் குலவு திருப்பாதங்
கண்டிறைஞ்சி ஞகுங் கதி. (1)

வேதத் துறையறிந்த வித்தகருங் கண்டறியா
நீதிக்கு ணின்ற நெறியென்ப—சோதிக்குட்
சோதியா யன்பிற் ருெழுவா ருளக்கருத்திற்
சோதிக்கு மோர்மெய்ச் சுடர். (2)

இல்லேபய னில்செயன் மற்றென்னி னரகொடுமேல்
இல்லேயென லாகு மிஃதுணரார்—எல்லவருந்
தீமை புரிவதெனே தீர்ந்துஞ் செகதீசற்
காமுறை நிற்பதன்ரே வாம், (3)

கள்ளொடு காமங் களவு பெருங்கொலே
தள்ளாது நாளுந் தருகுவார்—வள்ளல்
ஒருவனிலே யென்ன வுரைத்தானே வைது
பொருதுநிற்ப தென்ன பொருள். (4)

நீக்கமிலா வன்பா னெறிதொறுஞ்செய் செய்கையின்றி
யாக்கா தருளே யயலொன் றுங்—கூக்குரலிட்
டாடுவா ரொக்கு மகில சமயிகளும்
தேடுவ தென்று தெருள். (5)

வேடம் பலவாஞல் வீடும் பலவாமோ
நாடுமதஞ் சாதியினி னன்னுவதென்—கூடுமுண்மைச்
சாக்கியர்நன் னந்தஞர் சான்றுமெய் யன்பொன்றே
யாக்குமுயா முத்தியதை. (6)

ஆடு குதிரை அனேத்திற்குஞ் சாதிவகை
நாடுங்கா லுண்டென்று நாட்டலாம்—கூடுமோ
மானுடருக் கீது மரமொன்றே பல்கிளேகள்
ஈனுமோ வெவ்வே றென. (7)

1934



தோன்றுமிட மொன்றேனுந் தொல்லுலகிற் சாதிவகை
ஆன்றதொழி லால்வெவ்வே ருகுமால்—ஊன்றவிது
சாதியென்று கொள்ளுவார் சக்கிரி மட்கலம்போல்
ஆதலை யாய்ந்தறியா தார். (8)

பாவிப்பார்க் கந்தந்தப் பாவனையாய் நிற்குமிறை
பூவொப்ப நிற்கும் புனலொப்ப—சேவிப்பார்
ஆசை யொழிந்தங் கறிவு வருந்துணையும்
பேசுமத நீத்தல் பிழை. (9)

தம்மத நீத்துத் தவறுவார்த் தேற்றலலால்
எம்மத மேனு மிகழற்க—அம்மவொரு
கல்லூரி யன்றோ கருது பலசமயம்
புல்லிய விந்தப் புவி. (10)

உலகிலுறு மூன்றினடு வுற்றதனுன் மற்ற
இலகுமெனி னுங்கல்வி யின்றேல் — நலமிசைமற்
றெப்பொருளு மெய்தா விதனினூஉங் குற்றதுணை
மக்களுயிர்க் கில்லை மகி. (11)

ஈவ பெரிதலமற் றீவோ னெவனெனினும்
தேவனென வெண்ணிச் செவிவாயா—ஆவலுடன்
கேட்டுணர்ந்து நாளுமது கேடபடா தோம்புவனேல்
வாட்டமிலை கல்வி வர. (12)

தன்மொழியை முன்மொழிந்து தக்கதெனக் கொண்மொழியும்
பின்மொழிந்து நிற்பிற் பிழையில்லை—தன்மனையாள்
மிக்க வறியளென விட்டயலிற் கற்பிறந்தாள்
தக்கவளென் றேக றகா. (13)

கல்வி யுடையர் பொருளுடைய ரென்பதெலாம்
இல்லையென்ஞு தியு மியல்புடைமை—உள்ளதுகொல்
சேம நிதியுந் திகழாக் கலவிளக்கும்
போல விருந்தாற் பொருள். (14)

ஈதலை யஞ்சா ரிழவஞ்சா ரெவ்வழியும்
போதலை யஞ்சார் பொதுவஞ்சார்—சாதல்

வரினுஞ் சுகமாவர் வண்புலவர்க் கொப்போ
பொருளுடையா ரின்பிற் புறம். (15)

இன்பத்தை நாடி யெனினும் பொருளீட்டடந்
துன்பத் தினுக்குமது தூதாகும்—துன்பந்
தருவதுபோற் றேன்றிடினும் தாவாத வின்பம்
புரியுமோ கல்வியைப் போல். (16)

அறிய வறிய வருங்கல்வி தன்னை
மறியு மறியாமை வஞ்சம்—அறியகிலேன்
பாலுண்டு நஞ்சுமிழும் பாம்பி னினைப்போல
நூலுண்டு தீயுமிழ்வார் நோக்கு. (17)

மக்கட்குத் தந்தை வருந்திவைக்கு மாநிதியம்
விச்சைமற் றல்லாது வேறில்லை—துய்க்கநிதி
கோடியென வைத்தார் குலமக்க டம்முயிரைக்
கோடியென வைத்தாரோர் கூற்று. (18)

ஊரை யடைந்திடுத லொக்கு மிருவருக்குந்
தேரிற் குருடன் றெளிவதில்லை—சீரெல்லாம்
கண்ணுடையான் போலெழுத்தெண் கல்லா தவர்நூலில்
எண்ணுடைய ரென்ப தெவன். (19)

கற்றவனை மற்றவர்கள் காணு ரவர்தமக்கு
சொற்புலவன் பற்பல்கதை சொல்லுவான்—பொற்பழருன்
வாழை தனையுருக்க வல்லதோ செய்யசுடர்
மாழையொடு வெண்ணெயலான் மற்று. (20)

எந்நாளுங் கற்க விடும்பையி லாரிளமை
என்னினும் வாரா திருந்திடினே—என்னின்
அறிந்தவரோ பொன்னை யடைந்தா ரடையார்
பொருந்திலரோ கல்விப் பொருள். (21)

கற்பனவெல் லாங்கற்றுக் கற்றபினர்க் கற்றதிலை
மற்றிவன்பா லென்று வழங்குமவன்—பெற்றவனைத்
தந்தையலன் குண்டகியென் றூர மெனச்சாற்று
நிந்தகனே யாவ னிலத்து. (22)

முற்ற முடியார் முடித்து மொருவேலை
பெற்றிலரா யுள்ளமது பேதுறுவார்—தெற்றெனமுன்
கற்றிருப்பிற் றங்கள் கலையைச் சிறிதேனு
மற்ற றுதவாதோ வந்து. (23)

கள்ளொடு காமங் கடுங்கோபஞ் செய்தகுடி
தள்ளரிய துன்பந் தனில்வீழும்—பிள்ளைகளைப்
பெற்றுவ தென்ன பெரும்பழக்க மன்னவர்க்குக்
கற்பிப்ப தேயரிது காண். (24)

படியெடுத்துக் காணும் பயனிங் கறிவின்
அடியெடுத்து முத்தி யடைதல்—குடிகெடுத்து
வாழ்ந்தாரு மில்லை வறுமையினு நீதிநின்று
தாழ்ந்தாரு மில்லை தரை. (25)

பெற்றவரை விட்டுப் பெருந்தூரம் போய்க்கல்வி
கற்றுப் பொருள்செயலாற் காண்பதெனை—முத்தி
தருமொருவன் செய்ய தளிரடியைப் போற்றி
அறநெறியி னில்லா தவர். (26)

காலத்துக் கேற்பக் கலைபிறிது கற்றுலுஞ்
சீலத்தைக் கைவிடுதல் சீர்மைத்தோ—கோலித்தைத்
தள்ளுமோ யார்க்குஞ் சமமன்றே நான்மறையோர்
எள்ளுவதென் றங்க ளியல். (27)

சாதி மதநோய் தமரெனுநோய் தன்னீதிச்
சோதி விழியதனிற் றேன்றுமல்—ஓதுமிரு
பாலு நிறைகோற் பரிசிற் பயனளிக்கும்
கோலன்றே மேவுங் குடி. (28)

சுத்தரையு மிக்கபழி சொல்லவைக்குங் கோலிரண்டும்
எத்தரையு மேலாக்கு மேர்க்கோலொன்—றித்தரையில்
ஏர்த்தொழிலின் மிக்கோ வெழில்வா ணிபமரசு
பார்த்தாலு மிக்க பழி. (29)

ஏர்த்தொழிலான் மிக்க வியல்புடைய ராயிருந்தும்
பார்த்திவர்கீழ் வேலையிலார் பார்த்தற்க—ஊழ்த்திறமோ

உள்ளது போதுமென் றுன்னு துடையவரும்
அன்னவர்கீழ் நிற்கு மவா. (30)

வல்லாரை வல்லுநரா வல்லுநரை வல்லாராச்
செல்லவைக்க வல்ல திருவறியாள்—கல்விதனை
கற்று ரிவரென்றுங் கல்லா ருவரென்றும்
மற்று ரறிவார் வரைந்து. (31)

ஈந்து கவரு மிறைமையா லெவ்வுலகும்
போந்து விளங்கும் பொதுமையால்—ஆய்ந்துகண்போற்
காட்டு முறையாலிக் காசினியி னன்னீதி
காட்டுமிறை யேபாஸ் கரன். (32)

நீச னெனினு நெறியி லரசாள்வோன்
ஈச னவனே யிருகண்ணும்—பூசுரனே
என்னினுங் கீழ்ப்பட் டிருத்தன் முறையாகும்
தன்னெறியி னீங்காமற் றுன். (33)

ஆய்ந்தின்புந் துன்பு மருங்குடிகட் கீதலால்
வேந்தனே கண்டதொரு மெய்க்கடவுள்—சார்ந்தகுடி
கள்ளொடு காமநெறி காணச் செலுத்திவரின்
கொள்ளார்க ணல்லதெனக் கோல். (34)

அந்தணர்க்கு வேத மரசர்க்குச் செங்கோன்மை
வந்த வசியர்க்கு வாய்மையுரை—முந்தும்
உழவர்க்கு மேழி யுறுதிமற் றீதே
பளகறுத்து வைக்கும் படி. (35)

கள்ளருந்தும் பார்ப்பானுங் கையேந்தும் பார்த்திவனும்
உள்ள நிறைகுறைக்கு மூருசனும்—வெள்ளம்
வருகையில் வித்தாக மண்மகனுந் துன்பம்
பெறுகையி லையமில பின். (36)

சாதிமுறை நீங்கித் தரணிபரைச் சேவித்து
வேதனத்திற் பொய்வழக்கை வெல்லவைப்பார்—போததனில்
வாழ்வதுபோற் றேன்றிடினும் வாய்க்கும் பொரியின்றி
வீழ்வர்தஞ் சுற்றமொடு மேல். (37)

ஆசை யருத வறிவிலிக டம்மைநமன்
ஆசையாய்ப் பெண்ணு யருமகவாய்க்—காசினியாய்
வந்து வடிவுகொளா மாய்க்கு மறினிவைகள்
அந்தமிலா வாரருளி ஞம். (38)

பெறுவ சிறிதெனினும் பேதையதி காரம்
அரசனிலு மேலா மறிஞர்—வெறுவியனென்
றுண்ணகைத்து நீங்குவா ரூணர்கே சாகேசி
பண்ணிநிற்பா ருள்ளம் பரிந்து. (39)

கண்ட விடத்தினிமை காணு விடத்தின்னு
விண்டொழுகும் பேதையரை வேண்டற்க—மண்டும்
உடற்கரந்த நோயோ உடற்புறத்து நோயோ
அடற்கெழூஉங் காலத்தா லாங்கு. (40)

அச்சத்தா னட்புறினு மல்லோன் மறைந்துபழிச்
சொற்களையே சொல்லிமிகத் தூறுவான்—சிச்சீ
குரைமுக ஞென்றே குவலயத்தி னட்புப்
பெறவெவரா லீது முடிம் பேது. (41)

மிக்கன கொண்டு விடலு மருவுதலும்
தக்கதலா லோரொன்றற் றக்கதன்று—குற்றம்
இலாதவரு மில்லை யேதேனு நன்றிற்
செலாதவரு மில்லை தெரின். (42)

வையம்பு நேரிதுயிர் மாய்க்கும் வளைவேனும்
செய்யு மினிமை திருந்தியாழ்—மெய்யிற்
குறைவுடைய ரேனுங் குணமாவர் நல்லோர்
பெறுதியரோ தீயோர் பிறர்க்கு. (43)

உற்றுழித் தேர்வதலா லொண்ணுது நட்டவரைத்
தெற்றெனத் தேரத் தெளியுங்கால்—உற்றபதர்
காற்றடிக்கும் போதல்லாற் கண்டு தெளிவதற்கு
வேற்றுமை யுண்டோ வெளி. (44)

ஆக்கமுங் கேடு மறியா ரறிந்தார்போல்
ஆக்கமிலை செய்யு மறத்தென்பர்—தூக்கினெலாம்

வித்தும் பழமும்போன் மேவலல்லா லெவ்வுயிர்க்கும்
இப்பிறப்ப திப்பிறப்பி லில். (45)

நீதி யுடையர் நெறியுடையர் நிந்தையிலாச்
சாதி யுடையர் தகையுடையர்—ஓதிமிகத்
தேர்ந்துடைய ரென்பதெலாந் தீதாம் பணமொன்று
சேர்ந்துடைய தானாற் சிலர்க்கு. (46)

எல்லா மறிந்தாரு மேதொன் றறியாரு
மில்லை யுலகத் திதுநிசமே—கொல்லரிமுன்
தாழ்ந்த சிறுமுயலாற் றுவியதன் றேருகுழியில்
வீழ்ந்ததவனே ஆங்காரம் வீண். (47)

வல்ல விதியவெனின் மாயுமோ மாய்த்தாலும்
இல்லையெனிற் போம்போ மெவர்காத்தும்—மல்லடுதோட்
பஞ்சவர் சேயான பரிச்சித்து நீருறைந்தும்
துஞ்சினன் பாம்பிற் சுழன்று. (48)

நன்மை செயலா னணுகுந் துயரினிதாம்
அன்மையா லின்பெனினு மாகாதே—வன்மைபெறு
நோய்க்களித்த நன்மருந்தோ நுங்குங் களிமதுவோ
ஆக்குந் துயர மதை. (49)

எக்குணமு மில்லெனினு மேது நிதியிருந்தாற்
றக்கவனென் றியாருந் தலைக்கொள்வர்—தொக்கநிதி
இல்லானைக் கற்றா னெனினுங் கொளாருலகில்
இல்லா ரிருந்தாவ தென். (50)

தன்னுக்கம் வேண்டிப் பிறர்க்குத் தகாவியற்றின்
முன்னுக்க மோடு முடிந்திடுமால்—மன்னுக்கம்
பூண்ட கிளையொடுமுன் பொன்றினன் கண்ணிலிசேய்
பாண்டவ ரோடு பகைத்து. (51)

தாழ்ந்து நடந்தாற் றலையாகுங் கீழெனினும்
தாழ்ந்துவிடு மேலெனினுந் தாழாக்கால்—போந்தபொருள்

தன்னு லறஞ்செய்து தக்கோ ரடிபரவி
முன்னுதல் யார்க்கு முறை. (52)

நல்லறஞ் செய்தாரிந் நானிலத்து நற்புகழும்
எல்லையின் மேலுலகு மெய்துவார்—புல்லரோ
புல்லுருவி யாவர் பொருட்குங் கிளைக்கும்பின்
செல்லுவர் திநரகுந் தீர்ந்து. (53)

நல்லோ ரிடரி னடுங்குவதல் லாலுலகம்
அல்லோ ரிடரி னசையாதே—அல்லோன்
அடங்கி னழுங்குவ தல்லா திருள்போய்
மடங்கி னழுங்குவரோ மற்று (54)

கற்றுய்ந்த மேலோர் கடவனசெய் தற்கல்லால்
மற்றேதுஞ் செய்ய மதியாரே—புற்றினுமோ
வேங்கை யறப்பசித்தும் வெய்ய மிடிவரினுந்
தாங்கரிய நோய்வரினுந் தாம். (55)

ஆனு ரழிந்தா ரழிந்தார் பலரானுர்
ஏனுருந் தேடி யிழக்கின் றீர்—நோலாதிங்
காகுமோ லாகு மளித்தார்க்கு வையன்மின்
போகுமேற் போகும் பொருள். (56)

வையம் புரக்கு மகிபால ரென்றுலும்
ஐயம் புசிக்கவுமா மையமில்லை—செய்யுங்கள்
தேடிவைக்க வேண்டா திரவியத்தை நல்லறமேற்
றேடிவைப்ப தாகுந் திரு. (57)

செத்தார் பிழைத்தார் செறுநோ யிலாதவரார்
மற்று ரிவைபிழைத்து வைகுவார்—பொத்திப்
பயன் யாதெனவே பயணங் தனக்கு
முயல்வா ரறிவுடையார் முன். (58)

பற்றித் தொலையும் படியுதித்தா ரல்லாம
லுற்றுத் தொலைவா ரொருவரில்லை—சுற்றியனல்
பற்றும் பொழுதுதமைப் பற்றிப் புறப்படலாற்
சுற்றமெனுஞ் சந்தைத் தொகை. (59)

பெற்றன பெற்ற பெருத பெருதவென
உற்றுணர்ந் தாசை யொழியாமற்—கற்றவரும்
தேடிவைப்ப ரென்னிற் றெளியார் திரவியத்தை
நாடிவைப்ப தென்ன நகை. (60)

பெற்றவரு மில்லை பெறுதற்கு மேதுவில்லை
பெற்றன யாவுந்தம் பின்னாட்கென்—றுற்றுவைப்பார்
மற்றவை துய்க்க வருந்துதவ முன்னில்லா
அற்றமறு பேய்க்கணமே யாம். (61)

ஊற்றுமன் மொண்டா லுறுமோ புனறுமம்
போற்றுமல் வைத்தாற் பொருளாமோ—ஏற்றம்
படைத்தாலும் பொன்வேறு பாத்திரநீர் போலத்
தடைத்தாகும் தான்கொள்ளத் தான். (63)

நிதிநல் வழியின்றி நேடிய துப்பாற்றித்
பொதியிருக்கப் போனதுபோற் போகும்—விதியிழந்த
பூதமெனக் காத்தோன் புலம்புந்தன் புத்திரரா
லேது மிலாம லெதிர். (63)

தன்னுயிர் போலப் பிறவுயிருந் தான்பேணி
லென்ன வறமு மிவன்பால—தன்னை
வருத்துவிர தாதியினுன் மன்னிடுவ தென்சுக்
கரைத்தருந்திற் போமோ வயம். (64)

அன்னவருக் கன்னவரா யாடிப் பொருள்பறிப்பார்
இன்னியரோ செய்ந்நன்றி யெண்ணுரே—அன்னவரை
நம்பற்க வோர்துணையா நட்டாற்றில் விட்டகலும்
வம்பரவ ரற்றம் வரின். (65)

தீயன் செயும்வணக்கந் தீதாம் புலிப்பதுக்கம்
பாய்வதற் கன்றோ பகருங்கால்—தூயர்
பகைத்தாலு நன்று பகுத்தறிய மாட்டார்
நகைத்து வெகுள்வர் நனி. (66)

சாதி முறையெண்ணார் தங்குடிமை தானெண்ணார்
பாதகமென் றெண்ணார் பழியெண்ணார்—மாதுமுன்னாள்
வந்துகுடி கொள்ள மதுவுண் பெரும்புலையர்
முந்தையரோ நீதி முறை. (67)

தன்கையிற் சாதந் தனக்குதவா தாகப்போய்ப்
பின்னொருவன் கைச்சாதம் பேணுவதென்—அன்னோ
விதியிருந்த வாறிதுவோ மெல்லியலை விட்டுப்
பதியயலிற் செல்லப் பயந்து. (68)

கண்ணின்றித் தன்னயலான் காதலியைக் கள்ளத்தில்
நண்ணுவதோ ரின்பமென நாடுகின்ற—புண்ணியர்தன்
காதலியைக் கூடிக் களித்தா னெனக்கண்ட
ஏதிலனை நோவ தெவன். (69)

உண்டவெச்சி லுண்கை யுடனுண்கை யுண்ணவெனக்
கொண்டவுணா வுண்கை கொளாதுண்கை—கண்டவெலாம்
நல்லவோ வன்னதுபோ னங்கையரை நீதிதப்பிப்
புல்லவெண லென்ன பொருள். (70)

ஆயிரங்கண் பெற்றா னரியிலங்கை காவலனும்
போயுயிரு நாடும் புறங்கொடுத்தான்—சாயகமற்
றொன்றா லுருண்டா னுயிர்வாலி யன்னியரிற்
சென்றாகுவ தென்ன சீர். (71)

காரிகையென் றேயுரைத்த காரணத்தை யோராமற்
பாரியையாக் கொள்ளப் பரிகின்ற—காரணவென்
செய்கருவி யாலுயிரைச் சேதியா தேகருமம்
செய்வதன்றோ நல்லோர் திறம். (72)

உண்டியிசைந் தியா ளொளித்துநிதி சேமிப்பாள்
அண்டுமச்சத் தாற்பணிக ளாற்றுவாள்—கொண்டவனைத்
தன்னழ கின்பொருட்டுத் தாங்கநினை வாள்பொருட்பெண்
பின்னொருத்தி யென்கை பிழை. (73)

ஈகையே கஞ்சுகமா வெவ்வறமும் வெல்படையா
வாய்மைதவஞ் சீலமன்பு வாகினியா—நாயகனும்

இல்லாளு மொத்திங் கெதிர்ப்பரேற் பாவமெனும்
அல்லான் புறங்கொடுக்கு மாங்கு. (74)

காக்கை விழிமணிபோற் காதலனுங் காதலியும்
ஆக்கை யிரண்டிற்கோ ராருயிராய்—நீக்கமிலாப்
பத்தியு மெய்தப் பெறுவரேற் பாருலகோ
எத்தனையு மேத்து மெடுத்து. (75)

நீட்டி மழித்து நெடுந்துறவி போல்வேடங்
காட்டிச்சாந் தானிகங் கைக்கொண்டார்—பூட்டை
யறுத்தவரு மல்ல ரறுப்பவரு மல்லர்
பொறுத்தவரே கூடாப் பொறை. (76)

ஊர்தியும் பொன்னி னுடுக்கையு நல்லுணவும்
பாரரசர் போற்றுங்கும் பள்ளிகளும்—சீருறுமோ
உள்ளத் துறவில்லார்க் கோர்நாய் தவிசிருந்தால்
தள்ளுமோ பவ்வீயைத் தான். (77)

தேராத கொண்டு தெளிந்தார்போ னல்லறிவு
கூராதார் பேதையரைக் கோட்டிகொள்வர்—ஆராயின்
மூர்க்கரை மூர்க்கர் முகப்பரல்லாற் பால்விரும்பும்
காக்கையு முண்டோ கலந்து. (78)

கற்ற விடமுங் கலையின் றுருகுதிகளும்
சொற்றுவ தென்ன சொலவறியார்—வெற்றிபெறும்
வாளு மனுவும் வயக்குமோ ஆண்டகைமை
ஆளு நெறியில் லவர்க்கு. (79)

யார்க்கும் பொதுவா விருங்கோ னடத்திடினும்
பார்த்தரசன் செய்கையெனப் பாரொழுகும்—கூர்த்தசொலிற்
காட்டு வலிதுவளி காட்டுங் கருவியெறி
காற்றின் வழியதே காண். (80)

வையத்திற் செல்வம் வறுமை யெனற்பால
ஐயத்திற் றீர்நுண் ணறிவின்மை—சையொத்துஞ்
செய்வன செய்யார் சிலர்செல்வ மின்றிருந்துஞ்
செய்வன செய்வர் சிலர். (81)

முற்று வலியான் முயன்றுரே மூதுலகிற்
பெற்றுர் பெருமை பெருங்காதி—பெற்றுன்
கரியிதனுக் கூழின்வழிக் காணலா மென்னுங்
கரிசார் சுமப்பார் கடை. (82)

நல்வினையுந் தீவினையு நாதனுக்கென் றெப்பித்த
தொல்வினை யாளரெனச் சொல்லுவதோ—எல்லாம்
இறைவன் செயலென் றிருவினை யாளர்
பெறுமா றறியாது பின். (83)

தன்னிலத்தைத் தன்மனையா டன்னகையைத் தான்விற்றுத்
தின்னிலத்தை நன்றென்று செப்பார்கள்—துன்னலரும்
பஞ்சம் வரினும் பழியி ரொழில்புரிந்
துய்ஞ்சுயிர்காப் பியார்க்கு முறும். (84)

வாங்கியுண்ட வக்கடனுன் மானங் கெடுமென்றும்
சோம்பலிலா வாழ்க்கை சுகமாகும்—தேம்பிச்
சிவிகை சுமந்தேனுஞ் செய்யாது பாவம்
அவிகை தருமான மது. (85)

ஒல்லுவ செய்வா ருரவோ ரறிவிலர்தா
மெல்லையின் மேற்செய் திடருறுவார்—நல்லறமும்
தன்னைமிஞ்சி யில்லை தனையுணரான் பட்டகடன்
என்ன விதமா விறும். (86)

நன்றறியார்ச் சேவித்து நானூறு வாங்கலினும்
ஒன்றுமின்றி நல்லோர்பா லுத்தமமாம்—நன்று
புரிவார் தமையும் புரியார் தமையும்
அறியார் நடத்துவ தால். (87)

ஒருவினையுஞ் செய்யா ருடையராவார் செய்தும்
ஒருபயனு மின்றி யுலைவார்—ஒருவினையைச்
செய்யவே ரென்றுதாஞ் சேர்வர் பொருளிழப்பர்
ஐயன் செயலறிவா ரார். (88)

மண்ணியி னெண்மடங்கு வந்தநீர்க் கொள்ளிடத்தி
னண்ணுபய னத்தனையா நண்ணுதே—என்னபயன்

நல்லவருக் கீயாம னுளு மவத்திறைக்கும்
புல்லரிடம் வந்த பொருள். (89)

சாதிக்குத் தக்க குணமென் று சான்றோர்கள்
போதித்துச் சொன்ன புறமாக—யாதிற்கு
மேலென்றூர் கீழாஞர் மேலானூர் கீழென்றூர்
நாலிற்கு மெல்லையிலி நாள். (90)

எல்லாரை யும்வலிய ராக்கு மிரும்பொருளோ
கல்வியோ மிக்கதெனக் காணுங்கால்—கல்விதான்
வல்லாரை வல்லாராச் செய்யு மறிவொன் று
மில்லாரை யென்ன செயும். (91)

செல்லா விடத்திற் சினம்போலச் செல்லிடத்தும்
நல்லாடல் செய்வானே நற்கலைஞன்—எல்லாம்
அறிந்தோமென் றுன்னு மவரிவனிற் சற்றே
இரைந்திடுவர் நூலை எடுத்து. (92)

ஈச னடியை யிறைஞ்சுவார்க் கெய்துதுயர்
மாசகலு மாறன்றி மற்றில்லை—பேசின்
மறந்தாருக் கெய்துவது மன்னு நரகன்றி
இகர்தன்னி லெய்த விலை. (93)

கொண்ட சினத்தாற் கொடுஞ்சொ லுரைப்பானை
கண்டொன்று சொல்லார்கள் கற்றறிந்தோர்—மண்டமண்டக்
கூர்த்துக் குரைக்குங் குரைமுகனைக் கண்டாற்கோல்
நீத்திடுத லன்றே நெறி. (94)

பொய்யுரை யாடும் பொறியிலிக ளோரொன்றின்
மெய்யுரை யாடினைய மேவுமே—பொய்யுரையார்
தங்களுக் கல்ல றலைப்படினுஞ் சாய்தறிரி
சங்குமகன் சொல்லுமே சான்று. (95)

காலத்தைச் சூதிற் கழிப்பார் பொருளைவிற்று
ஞாலத் தெவரு நகையாட— நூலத்தைப்
பெண்டீ ரிழக்கப் பிழைப்பேனென் றெண்ணியெண்ணிக்
கண்டவரே யின்மை கடை. (96)

வாதஞ்சுட் டுண்ணுதற்கு வாஞ்சிப்பார் சூதாடி
ஏதந் தவிர்ந்திருக்க வெண்ணுவார்—நீதந்தீர்
வம்பரை நம்பியுயிர் வாழநினை வாரிலவை
நம்பகிளி யாவர் நக. (97)

சூடுகுளி ராற்பிரியுஞ் சொற்றே றுணவுடையும்
நீடு மதற்கதற்கு நேர்படவே—மூடர்களோ
அன்னநடை போன அரிட்டமெனத் தந்நடையுங்
கின்னமுற நிற்பதென்ன கேடு. (98)

தெரியாத தொன்றைத் தெரியுமெனச் சொல்லி
யருமை குலைவா ரறியார்—தெரியுமெனும்
ஒன்று முரையா ருரவோர்க ளேகமிலார்க்
கென்று மிடரே யெழும். (99)

ஈச னொருவ னுளனுகு மெவ்வுயிரும்
பாச மகலும் படியருகே—நேசமுடன்
செய்குவான் வன்கண்மை செய்யா னவனடியைக்
கைதொழுமி னுள்ளங் கனிந்து. (100)

# தனிச் செய்யுட்கள்

## நடுவெழுத்தலங்காரம்

மைந்தன்விரை மாமிகவர் வழிமீ னூரன்
மதனவேள் புறவிதழிவ் வேழின் மீது
வந்தநடு வெழுத்துமாற் கண்டற் காக்கி
மற்றைவரி பதினன்குந் தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி தரித்துத் தன்கண்
ணுக்கியமர்ந் திருத்தியென வங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் முளே.

அலங்கார பஞ்சக சண்ட மாருதம்

அரும்பிரா மணத்தினிய கனியுதவு மருங்கொடி
பரிதியம் பரத்தி
இருந்தரா சாத்திகழு மொருநீதி யிறைமகள்
இணையறு மறத்தி
பொருந்தவெஞ் ஞான்று ஞானசக் கிலிச்சி
புல்லனை அருள்கநன் குறத்தி
மருந்தெனப் புகழுமருத மடுவினில் வதிசெப
மாலைமா மரியே.

# முருகேசபண்டிதர் புகழ்மாலை

## சிறப்புப் பாயிரங்கள்

### மயிலணி விசாலாட்சியம்மை பதிகம்

கங்காதரன் சுன்னை மேவும் மயிலணிக் கண்ணுதலோன்
பங்கா தரிக்கும் விசாலாட்சி யம்மை பதமலரிற்
தங்கார்வ மொடு பதிகம் புனைந்தனன் தாரிணியில்
மங்காத கீர்த்தி முருகேச பண்டித மாமணியே.

(அ. குமாரசுவாமிப்புலவர்.)

வாவித் தடவயற் சுன்னாக மேவு மயிலணிவாழ்
தேவிக் கினிய பதிகத் தொடையினைச் சேர்த்தணிந்தான்
சேவற் கொடிய னடியே பணியுந் திறமுடையான்
பாவிற் சிறந்த முருகேச பண்டித பாஸ்கரனே.

(ஊரெழு. சு. சரவணமுத்துப்புலவர்.)

ஒருகேச வன்றங்கை சுன்னை மயிலணி யுற்றநறை
வருகேச வம்மை விசாலாட்சி சீர்ச்செவி வாக்கினடி
டிருகேச மன்பட ரேயன்பர்க் கோட்டுநஞ் சேந்தனைத்தாழ்
முருகேச பண்டிதன் வாய்வாய் பதிகமுதிர் நறவே.

(உடுப்பிட்டி, அ. சிவசம்புப்புலவர்.)

பூவுலகம் புகழ்சுன்னைப் புரியமரும் விசாலாட்சி
புரிய வுண்மை
மேவியநல் லனுபவத்தான் விளம்பினனோர் பதிகமது
விருத்தப் பாவிற்
சேவலருந் தனிக்கொடியான் திருவடியே சரணமெனச்
சேர்ந்து வாழ்வோன்
பாவலர்கண் போற்றிசைக்கு முருகேச பண்டிதன்
பாவாண ரேறே.

(நல்லூர், அ. சபாபதிச்செட்டியார்.)

## குடந்தை வெண்பா

பூமகட் குறையுளாகப் பொலிதரும் யாழ்ப்பாணத்து
ணுமகனுரு நண்ணி நயந்துறை சுன்னுகத்தில்
காமரு கதிர்வேற்கந்தன் கண்ணருள் பெற்றுப்போந்து
தோமறுதமிழ்ச் சொன்மாரி தொலேவின்றிப் பொழியுமேகம்.

திருமறு மார்பனுகுஞ் செங்கண்மால் பணிந்துபோற்றும்
பொருவறு குடந்தைமேய பூரணபுனிதன் ருளில்
மருவுபின் மடக்குவெண்பா மாலேவேய்ந் தணிந்தான்பாரில்
புரவலர் பணிந்துபோற்றும் முருகேச பூபன்ருனே.

(கும்பகோணம் வைத்தியநாததேசிகர்)

முத்திதருந் தலமேன்மை முன்னடக்கிப் பின்மடக்காய்
முறையே மேவிப்
பத்தழகுங் குதிகொள்ளக் குடந்தைவெண்பா வெனவொரு
நூல் பகன்ருன்சைவ
வித்தகன்ரு இலக்கியமும் இலக்கணமும் கரைகண்
டவிதூரன் நாயேன்
பத்திபுரி யாசிரியன் முருகேச பண்டிதன்
பாவாண ரேறே.

(சுன்ஞகம் அ. குமாரசுவாமிப்புலவர்)

தக்க புகழேந்தி தனக்குப் புகழேந்தி
மிக்கவெண்பா மிக்கபுகழ் மேவுமோ—அக்காற்

குடந்தை வெண்பாச் சுன்னைநகர்க் கோமுருகேச
மடங்க லுரைத்திருந்தால் வந்து.

(மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை)

சீர்பெருகும் புவிமகளுக் கணியே போலத்
திகழ்தருயாழ்ப் பாணமதிற் சிறப்புற் றோங்கும்
ஏர்மலிசுன் னாகஞ்செய் தவத்தி னலங்
கியங்குமுரு கேசனெனு மிபங்கும் பேச
வார்மலிசெஞ் சடைக்கடவு ளருட்க வாளம்
வண்மைபெற வருந்திமிக மனங்க ளித்துப்
பார்புகழுங் குடந்தைவெண்பாத் தானம் பெய்த
பண்புடைய கவிவாணர் பருகுந் தேனே.

(கும்பகோணம் சா. சபாபதிச்செட்டியார்)

தடங்கடல் சூழ்புவி விற்பன்ன ரென்னுந் தகுபயிர்சீர்
அடங்கலு மாமுரு கேசவின் கல்வி யலையருந்தி
மடங்குபின் னையிரு பத்துவெண் பாக்கண் மருவத்திருக்
குடந்தை வெண்பா வெனுந்தேன்மாரி பெய்யக் குளிர்ந்தனவே.

(கும்பகோணம் இராகவஐயங்கார்)

உலகெலாம்பரவு மொருபெருந்தலைமைவாய்ந்
தலகிலாவொளிவள ரருங்கயிலாசத்
துறுமெழுநதிகளி லுயர்ந்துகும்பக்
குறுமுனிதிருக்கரக் குண்டிகைப்பட்டொரீஇ
யடல்விரிபார்முதி ரரவமாருக்
கடல்விளிம்புடுத்த காசினிநிலையீஇய
பொன்னிலாவியசுகப் பொன்னியார்ந்தொழுகுறாஉஞ்
சென்னிமாநாட்டிடைச் சென்னியாயோங்கி
யாரணங்கதிதரு மாகமமுதலவுள்
ளாரணங்கதிரநன் றதிர்திருமடமு
மற்பகலாதுலர்க் கறுசுவையுணவகை
அற்பகலாதுத வன்னசத்திரமு
மாவணங்குறைதரு மலைநிகர்நிதிகெழூஉ
மாவணங்குறைபெரு மணிமுடிமனைகளு

மாசிரியருங்கலைக் காதரமைந்தரோ
டாசிரியருங்களி யருதமர்கழகமுஞ்
சுந்தரமாந்தருத் தோளரும்பனுவல்பே
சுந்தரமாந்தருந் தொகுமணிமன்றமும்
வந்துவந்துலவுறு மலர்மணமளாச்சிறு

வந்துவந்துலவுறு மழைத்தண்டலையுந்
தவனந்தணித்தெருத் தலைதொறுஞ்சாருநர்
தவனந்தணித்திடுந் தண்ணீர்ப்பந்தருங்
கோட்டுக்கணந்தருங் குளிரலைபொரற்கெதிர்
கோட்டுக்கணந்தருங் குமுறனீடடமுங்

குடங்கணிதந்தபக் கொளப்பயநதிபெயுங்
குடங்கணிதந்தகக் குலவெழிற்கோட்டமும்
வரவானந்த வனநதிபோலுயிர்
வரவானந்த மசத்தருடீர்த்தமும்
மம்பரவளங்குல வலைப்புவிவளத்தொடெண்

ணம்பரவளங்களு மமைந்தவாவணமும்
பலவாமிக்குறப் பணைத்தெழுமரம்பைதென்
பலவாமிக்குயர் பணைக்கொக்கினமு
மாதவந்தகைதர வான்முதல்விடவிவீ
யாதவந்தகைநிழ லளித்திடும்வட்டையுங்

கடக்கருமலைவிறற் காய்சினத்தேழ்திறக்
கடக்கருமலைமாய் கதிர்க்குலக்கழனியு
மிரவியனந்தமா யெழுதருங்காட்சியி
னிரவியனந்த விலங்குநெய்ச்சுடர்களு
மேறுமகங்கழித் தின்பருள்பூசையுஞ்

சாறுமகங்களுந் தவாதியல்சிறப்பு
மிக்கமாலைத்தெறும் வெண்ணீற்றுடனணி
யக்கமாலைத்திரு வருதொளிர்பெருமையுந்
தேரூர்வீதியுந் திருவநீள்செல்வச்
சீரூர்தெருவுமாந் திறம்பலதாங்கி

யெல்லாம்வல்லான் கல்லாம்வில்லா
னல்லார்பல்லார் சொல்லார்தொல்லா

ஞரணப்பரியான் வாரணத்துரியா
ஞரணற்கரியான் காரணப்பெரியான்
றிங்களங்கண்ணிதாழ் செய்யமத்தகத்தான்
பொங்கனலம்பகம் புனைந்தமத்தகத்தான்
கருமுகில்வெளுத்த கறைக்கந்தரத்தன்
மருளனேநெஞ்சினும் வாழ்கந்தரத்தன்
சகந்தனக்கியலுபா தானமூன்று
னுகந்தவன்றிண்ணணு ருதவுமூன்றன்
சத்திகாரியமாந் தனித்திருமெய்யான்
பத்தியாம்வலையிடைப் பட்டருண்மெய்யான்
வாணுதலுமைமுலை வளைத்தழும்புடையான்
மாணுறுமன்பர்கள் வளைத்தழும்புடையான்
மாறெழுமறலிதன் மதமாற்றடியான்
வீறெழுமேனியில் வேண்டுமாற்றடியான்
வேள்வாய்ப்பான்முக மிடைவாசத்தா
னீள்வான்றிசையென நிகழ்வாசத்தான்
வந்திதனுளாய் மண்டலையேற்றான்
மைந்துறுநரைநிற மண்டலையேற்றான்
சீலமாரைந்தொகைத் திருவானனத்தான்
கோலவார்குழையியற் குருவானனத்தான்
மனநெகிழாதவர் வருந்தலையோட்டான்
மனைதொறும்பலிகொள வருந்தலையோட்டான்
றரத்துலகெலாநிறைந் தவளக்காப்பான்
றரித்தமாமேத்திய தவளக்காப்பான்
மாயையின்மலவலி வாட்டுந்தகையான்
றீயுழைசூன்மழுத் திகழ்ந்தமர்தகையான்
பங்சநிசாசரர் படப்பொருந்திடத்தான்
மங்கலநாயகி மனம்பொருந்திடத்தான்
மாற்றிருந்தகையபொன் மணியணையும்பரின்
வீற்றிருந்தருளும் வியன்றலமாகி

நஞ்சனவஞ்சகர்க ணெஞ்செனவிஞ்சிரு
ளஞ்சனமஞ்சுக டுஞ்சியவிஞ்சிக
டுன்றுபுசூழ்ந்திடத் துங்கமார்கோபுரக்

குன்றெனநின்ற குடந்தையம்பதிமே
லுயர்வடவேங்கட மொப்பிறென்குமரியா
நயனுறுதலைமைசா னடைவையெல்லையிற்
போக்கறுமுந்துநூற் பொருண்மொழிகூட்டுணு
நீக்கமிலறிஞர்க ணிறைவிருந்தயிலவுந்

தீர்த்தமூர்த்தி திருத்தலப்பெருமைநா
டார்த்தியினுருணர்ந் தாம்பயனடையவுந்
சுவைவளர்பனுவல்க டொடுக்கநின்றுரெலா
மவைவளர்காட்டிதென் றகங்களிதுளும்பவுஞ்
சங்கக்கவியினுந் தவறுரைத்தெழுமதித்

துங்கக்கவிஞர்க டுதித்துவியப்பவும்
விழுமியவண்ணமு மேதகுமடக்கும்
வழுவியலலையா வருணனைமாட்சியுங்
கிளர்தருநாளி கேரநற்கதலியாய்
வளர்தருபாக மதுரமுநிலவ

வொண்பாவகையினு ளோங்கியநேரிசை
வெண்பாநூறு விழைவொடுபுனைந்தனன்
பொன்னின்றிரிசொலாய்ப் போதருமீழமா
நன்னயக்காரண நண்ணியநேத்தி
லுணப்படுவளங்களு முரைக்கியல்வளங்களுந்

தணப்பறவிளைவுறாஉந் தலைநாடென்றுஞ்
சங்கமரீஇய தகையொடன்றோங்கிய
மங்கலப்பாண்டி வளநாடாதிய
வீவருநாணினில் விளியமேன்மேலெழூஉந்
தாவகறனிச்செந் தமிழ்நாடென்றுங்

கோளியறிரிந்துபைங் கொண்மூவறங்கூர்
நாளினுமிடிவிட நலிவறியாதுதான்

பிறநாடிரக்கப் பெரிதளித்தோம்பு
மறநாடென்று மனைவரும்புகல
மன்னியநெடுஞ்சீர் வாய்ந்தயாழ்ப்பாணமேற்
றன்னியதொன்னிலைச் சுன்னைநன்னுடன்
வும்பவிழுற்பல மலர்த்தொடைப்பூதத்
தம்பிநரபதி தவத்தினிலுதித்தோன்
குரவராங்கடலிடைக் குளித்துப்பொருண்மணி
மரபுளியுளக்கையால் வாரிவாரி
யன்புறுநல்லமா ணுக்கராந்தினருக்
கின்புறவழங்கு மிருங்கொடைவள்ள
லூழ்படுதிறந்தலை யுறக்கலையனைத்தையுங்
காழ்படுகடுமையிற் கற்றுநிறைந்தோன்
சைவசித்தாந்த சாத்திரப்பொருடெரீஇ
மெய்வளர்சபைதொறும் விரிக்குநற்போதகன்
மைச்சளமானிலை மலிந்தபரமத
கச்சளமுழுதையுங் காயுந்திவாகர
னக்கரமைந்தையு மாறையுமிரட்டும்
பக்குவமுதிர்ந்த பத்திநியமத்தோ
னிருத்தன்புகழையு நீலமயிலூர்
கருத்தன்புகழையுங் கனவிலும்பாடுவோன்
றீங்கடர்பவமயல் சிதைத்தழியாவளப்
பாங்கருணீற்றொளி பழுத்தமேனியோன்
ரூழ்வறக்கலைபல தந்தூதேசிகரை
வாழ்வருடெய்வமாய் வழுத்துமன்பன்
றெய்வப்புலவருந் தேனுறைதமிழென
வெவ்வெப்பனுவலு மினிதுடனிசைப்போன்
பாரறுநெடுந்தவப் பரசிவன்றொண்டர்கள்
சீரடியகத்தொடு சிரத்திலிருத்தினோன்
றலங்கிளர் பதிதொறுந்தழீஇ
யிலங்கிசைவளர்முரு கேசபண்டிதனே.

(உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்.)

### வேறு

### இறந்தகாலம்

ஆண்டு விகாரிவரு மாவணி மூவேழுசெவ்வாய்
மாண்ட முதற்பிரத மைத்திமார்த் — தாண்டனுள்
மூடுபெருங் கீர்த்தி முருகேச பண்டிதனுர்
நாடுங் கதிக்குரிய நாள்.

### கற்பித்த இடங்கள்

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியளை வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

(சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர்.)

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்
பழுத்துள நாவினன் பாக்களொர் நான்கொடு பாவினங்கள்
வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்
தொழத்தகு விற்பனன் சென்று பரகதி துன்னினனே.

(வித்துவான் சி. கணேசையர்.)

### ஈழமண்டல சதகம்

பன்னுகத் தானங் குடந்தைவெண் பாமடக் காப்பகர்ந்த
வன்னுகத் தானபொதியத் தகத்திய மாமுனிநேர்
சுன்னுத் தான்பண் டிதன்றிரு நீற்றினன் ருேமிலொளி
மன்னுகத் தான்முரு கேசனு மீழநன் மண்டலமே.

(அல்வாய் கணபதிப்பிள்ளைப் பண்டிதர்.)

## அனுபந்தம்

## ஆறுமுகநாவலர்

(முருகேசபண்டிதர் பாடியது)

ஆறுமுக நாவலனை யாருமுணராப் பொருளைத்
தேறுமுகங் கொண்டு தெளிந்தானை — ஆறுமுகம்
என்றிருக்க ஓர்முகமும் எங்களுக்குத் தோற்ருமற்
சென்ருெளித்தான் அந்தோ சிவா.

காணுங்கண் ணின்னுமொன்று கண்டுகொண்டோ மென்றியாழ்ப்
பாணமகிழும் பருவத்தில்—தானுவெனுஞ்
சங்கர பண்டிதன்முன் சாய்ந்தான்பின் ஆறுமுகப்
புங்கவநீ யும்மறைந்தாய் போய்.

ஆறுமுக நாவலனென் றுலெவரு மன்புகொண்டிங்(கு)
ஏறுமுக மாயெம்மை ஏற்றுவந்தார்—ஆறுமுக
நாவலனே இன்னினியே நம்மையொரு நாயென்றும்
பாவனையும் பண்ணுர்கள் பார்.

திங்களணி செஞ்சடையான் தேவனென வந்துதவும்
அங்கவனால் நூலாய் அமர்ந்ததுவும்—எங்குமிசை
கொண்டியாழ்ப் பாணங் குலாவியதும் ஆறுமுக
அண்டர்பிரான் வந்தபின்பே யாம்.

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன்போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ—வாரணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

எவ்விடமும் நின்புகழே எவ்விடமும் நின்பேரே
எவ்விடமும் நின்சொல்லே எய்தியபோல்—எவ்விடமும்
எக்கா லமுமில்லை இன்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொன் னுவலநீ தான்.

கந்தவேள் செய்தவம்போற் காணுந் தவமுமவன்
மைந்தனு நாவலன்போன் மைந்தர்களும்—செந்தமிழில்
வல்லவர்கள் அன்னவன்போல் வந்திடுவ தும்முலகில்
இல்லையில்லை இல்லை இனி.

## சட்டைக் கலித்துறை

மாமிக்குங் கொண்ட மருகிக்குஞ் சண்டையை மாற்றியிந்தப்
பூமிக்குட் கல்வியுஞ் செல்வமுஞ் சேரப் புலவரெவர்
தாமிக்க டைந்தவர் நின்றனைப் போலிந்தத் தன்மையினுல்
நீமிக்க வனல்லை நாவல னேயிது நிச்சயமே.

## நித்தாஸ்துதி விருத்தம்

வாணிதனை வசப்படுத்தி மலரயனை
நான்முகனுய் மயங்கச் செய்து,
பேணியவ ளடிபணிந்து பிரிவகற்றிப்
புணர்ந்தவனைப் பிரமந் தேர்ந்த

மாணியென்று நீதியுளா னென்றுஞ்சொல்
வகையெங்கே மாண்ட நின்னைக்
காணுவதோ இறப்பதுவிங் காறுமுக
நாவலனே கமிப்ப தன்றே.

## ஏழாலைச் சைவப்பாடசாலைத் தொடக்கம்

தாது வருடம் தனிலா வணிபத்தாந்
தேதி புகர்வாரந் தீபநாள்—ஓதுபுகழ்
தாமோ தரேந்திரனார் தர்மவித்தி யாசாலை
நாமாரம் பஞ்செய்த நாள்.

## விரோதச் சிலேடை

நெட்டையிலை வைத்திருக்குஞ் செவ்வே ளல்ல
நெடிதோங்கித் தண்டேந்தும் வாளு மல்ல
கட்டுவர ளுரளிக்கும் பிரம னல்ல
கனிவெட்டி யெடுத்தலாற் சுரங்க மல்ல
நட்டவரைத் தளபதியாய் இருக்கச் செய்யும்
நன்மையினு ளும்வணங்கு மீசனல்ல
சிட்டரெலாங் கொள்ளுமொரு பொருளே யாகும்
செகமறிய இப்பொருளைச் செப்பு வீரே.

## விடுகவி

நாலுகால்ப டைத்திருக்கு நடப்ப தில்லை
நம்மைப்போல் இருகையுண்டாம் பிடிப்ப தில்லை
ஏலவேபின் னலுண்டாமு டிப்ப தில்லை
இடையிடையோ கண்களுண்டாம் பார்ப்ப தில்லை
கோலமுடி அரசருக்கும் எல்லோருக்கும்
கொடுத்திடுமட் கரேுதலைத் தவிர்ப்ப தில்லை
சீலமிகு பொருன்விளங்க ஏங்கு மாகித்
திகழுதய பானுவே செப்பு வாயே.

## கண்டனகாரருக்கு அறிவுறுத்தல்

எட்டுணை யேனும் இழிபுரை காண்பதின்
றியென் னயமொழி யிருக்க
மட்டிறந் திழிபின் வார்த்தைகள் உரைப்பார்
மறுமொழி வயத்தரே அல்லர்
தொட்டனைத் தூறும் எனுந்திருக் குறளிற்
தோற்றிய பொருண்மை அறிவரேல்
கட்டுரை பிறிதேன் எமதிழி புயர்பு
கண்டிடல் அறிஞர் தங்கடனே.

# முருகேசபண்டிதர் வாழ்த்து

சுன்னுகம்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

இயற்றியது

சீரோங்கு புலவருறை சுன்னை வாசன்
சீரியன்பூ தத்தம்பி அருளும் பாலன்
ஏரோங்கு தமிழ்க்கடலின் கரைகண் டுள்ளோன்
இயற்றமிழ்ப்பா வன்மையினில் இணையி லாதோன்
பாரோங்கு புலவர்புது விருந்து கொள்ளப்
பண்புடனே ஆசுகவி பொழியு மேகம்
பேரோங்கு சைவநெறி தழைக்கச் செய்தோன்
பேசுபுகழ் முருகேசப் பெருமன் மாதோ.

ஆரியமும் செந்தமிழும் இனிதின் ஆய்ந்தே
அரியபல நூலுரைகள் ஆக்குந் தீரன்
சீரியநற் குணங்களெலாந் திகழ்ந்த செம்மல்
செகம்புகழும் சங்கரபண் டிதவேள் பாலும்
பார்புகழும் கவிஞுனுய்க் கல்வி மானும்
பண்புடைய சிவசம்புப் புலவன் பாலும்
கூரியநுண் மதியோடு கற்றுத் தேர்ந்தோன்
குறைவில்சீர் முருகேசக் குரிசில் மாதோ.

பன்னரிய தமிழ்நூல்கள் முற்று மோர்ந்தே
பாவலர்கள் நாவலர்கள் இயற்று நூலில்
துன்னுபிழை கண்டுசகி யாதே என்றும்
துகளறவே தமிழ்மொழியும் துலங்க வேண்டும்
என்னும்பெரு நோக்கினையே அகத்தி ருத்தி
எவருடனும் வாதாடும் இயல்பு மிக்கோன்
முன்னுபுகழ் சுன்னுக நகர வாசன்
மூதுணர்ந்த முருகேச விபுத ரேறே.

★ மணிவாசக நூல் நிலையம் ★
குரும்பசிட்டி, சன்மார்க்க
ஆரம்பம்: 1934